# கவிஞர்
# இரவீந்திரநாத தாகூர்

நூற்றாண்டு விழா வெளியீடு

பேராசிரியர்
தெ. பொ. மீனாட்சிசுந்தரன்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

UNIVERSITY EXTENSION LIBRARY
17 OCT 1962
MADURAI

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலைநகர்

முதற் பதிப்பு—1961

கீதா பிரஸ், மலைவாசல், திருச்சிராப்பள்ளி.-2.

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| I. | சூழ்நிலை | .... | 1 |
| II. | இளமை | .... | 11 |
| III. | அரசியல் | .... | 31 |
| IV. | நோபல் பரிசு | .... | 59 |
| V. | உலகிலும் – இந்தியாவிலும் | .... | 79 |
| VI. | திக்கு விசயம் | .... | 117 |
| VII. | இரவீந்திர சயந்தி | .... | 145 |
| VIII. | சாவாத புகழ் | .... | 163 |

# அணிந்துரை

நமது நாட்டிற்குப் புத்துயிர் கொடுத்து எதிர் காலத்தில் அது சிறப்புற்று விளங்குவதற்கு ஏற்ற வழி வகுத்துக் காட்டிய சான்ருேருள் தலை சிறந்தவர் டாக்டர் ரவீந்திரநாத் தாகூர் ஆவார். அவர் இந்தியாவிற்குப் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தவர், நாட்டின் நலத்தையே தம் குறிக்கோளாகக் கருதியவர். இந்தியக் கலையை மற்ற நாட்டினர் மேன்மை சான்றது என்று அறியுமாறு பரப்பிய பெரியார். நோபில் பரிசு பெற்று, இலக்கிய உலகில் இந்தியாவின் புகழை உயர்த்தியவர். அவரையழைத்துப் போற்ருத உலக நாடு எதுவும் இல்லை.

தாகூர் ஓர் உலக மேதை; பல துறைகளில் ஆற்றல் நிறைந்தவர்; ஆங்கிலத்திலும், வங்காளத்திலும் இணையற்ற கவிஞர்; பல மொழி அறிஞர்; உணர்ச்சியும், செறிவும் ஒருங்கே அமைய, ஆங்கிலம் எழுதக்கூடிய ஒரு சிலருள் ஒப்பற்றவர். சிறு கதைகள், புதினங்கள், வரலாற்றுக் கட்டுரைகள், ஆய்வுத்திறன் கட்டுரைகள், தத்துவ நூற் கட்டுரைகள் முதலிய பல துறைப் படைப்புகளிலும் வல்லுநர். சிறப்பாக வங்காள, ஆங்கில இலக்கியங்களில் முதலிடம் பெறுபவர். அவர் எழுதிய நூல்கள் எண்ணிலடங்கா! இன்னிசையால் வங்காள மக்களை உயர்த்தியவர்; ஓவியம் வரைவதிலும் ஒப்பற்றவர்.

நாட்டுப் பற்று இவரது உயிரோடு ஒட்டியிருந்தது. கிராமங்களே நமது வாழ்விற்கு அடிப்படையாக இருக்க வேண்டும் என்று எண்ணியவர். கைத்தொழில்கள் முன்னேறவும், வறுமையை ஒழிக்கவும், கலையை ஓங்கி வளரச் செய்யவும், மக்கட் பண்பை உயர்த்தவும் இவர் பாடுபட்டார். சர்க்கார் அக்காலத்தில் மேற்கொண்ட அடக்குமுறைகளை வன்மையாகக் கண்டித்தார். நமது நாடு சுதந்திரம் அடைவதற்கு வழி செய்தார். நமது "நாட்டு வாழ்த்துப் பாடல்" அவர் இயற்றியதே! எம்முறையில் நமது நாடு இயங்க வேண்டும் என்பதைக் "கீதாஞ்சலியில்" சொல்லோவியமாகச் சித்தரித்துள்ளார்.

தாய்மொழி வாயிலாகத்தான் கல்வி கற்பிக்கவேண்டும் என்று ஆணித்தரமாக எடுத்துக் கூறினர்; அதனுல்தான் முழுப் பயன் பெறலாமென்றும், அப் பயிற்சியால் அறிவும், தகுதியும் வளரும் என்றும் கூறினர். அந்த மேன்மையான அடிப்படையில் உலகப் பல்கலைக் கழகமாகிய **"விசுவ பாரதியை"** நிறுவினர்.

1961, மே மாதம் 8-ஆம் நாள் அவரது நூற்றெென்ருவது பிறந்தநாள். அந்த நாளைத் தேசீய விழாவாகக் கொண்டாட வேண்டும் என்றும், அவருடைய புகழ் மக்களிடையே வளர வேண்டும் என்றும் இந்திய அரசாங்கத்தினரின் விருப்பம். இதனைச் செயலாற்றுவது நமது கடமையல்லவா? கவிஞர் அவர்களின் கவிதைகள், கட்டுரைகள், பண்புகள் முதலிய வற்றை நாடு நன்கு அறியவேண்டும். அவருக்கு அஞ்சலி செலுத்தவேண்டும் என்று அண்ணுமலைப் பல்கலைக் கழகம் விரும்பியது. அதற்கு முதற்படியாகத் தாகூர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைச் சிறந்ததொரு நூலாக வெளியிட முன்வந்துள்ளது.

இப்பணியைப் பன்மொழிப் புலவர் திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர் அன்புடன் நிறைவேற்றியுள்ளார். பேராசிரியருடைய அறிவு, ஆற்றல், பண்புகளை நாடு நன்கு அறியும். மொழிப் பற்றும், நாட்டுப் பற்றும் நிரம்பிய இவர் கவிஞர் அவர்களின் வாழ்க்கை வரலாற்றைத் தெளிவாக, எளிய நடையில் எவரும் புரிந்து கொள்ளுமாறு எழுதியுள் ளார். அதை நன்றியுடன் நாம் ஏற்றுக்கொள்வோமாக!

அண்ணுமலைப்
பல்கலைக் கழகம்,
9—4—1961.

தி. மூ. நாராயணசாமி பிள்ளை,
துணைவேந்தர்.

# முன்னுரை

1961-ஆம் ஆண்டிற்கு ஒரு பெருமை உண்டு; கவிஞர் இரவீந்திரநாதர் பிறந்த நூறும் ஆண்டு என்ற சிறப்பு அதற்கு உண்டு. இந்த நூற்றுண்டு காந்தியடிகளையும் கவிஞர் பெருமானையும் உலகினுக்கு அறிவித்துப் புகழ் பெற்றது. காந்தியடிகள் கவிஞரைக் குரு தேவர் என்றே போற்றி வந்தார். இந்தியா இன்று கவிஞரின் நூற்றுண்டு விழாவைக் கொண்டாடுகிறது. இந்தியா விடுதலை பெற்றிருக்கிறதன்றோ? அதுவும் பெரிய வாய்ப்பே ஆம். அவர் காணாத விடுதலையை நாம் கண்டு வாழ்கிறோம். ஆனாலும் நாம் நனவில் காண்பதெல்லாம் கவிஞர் கண்ட கனவுதானே.

யான் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திற்கு வரும் முன்னரே இப்பல்கலைக் கழகம் "தக்க சான்றுகளின் அடிப்படையில் கவிஞர் வாழ்க்கை"யைத் தமிழில் எழுதி வெளியிட்டு இந் நூற்றுண்டு விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிட்டு விட்டது. இத்தலைப்பே என்னைத் திகைக்க வைத்தது. விசுவ பாரதிப் பல்கலைக் கழகம் வங்காளத்தில் எழுதிவரும் கவிஞர் வாழ்க்கை வரலாறு இன்னமும் முற்றுப் பெறவில்லை. இந்த நிலையில் திரு. அமல்ஹோம் என்ற அறிஞரின் உதவியை நாடினேன். அவர் கல்கத்தா நகராண்மைக் கழக வெளியீட்டின் ஆசிரியராக இருந்து கவிஞர் வரலாற்றினைப் பல கோணங்களில் வெளியிட்டவர். தாம் கல்கத்தா கசெட்டியரின் தாகூர் சிறப்பு வெளியீட்டில், கவிஞரின் வாழ்க்கைச் செய்திகளை ஆண்டு வரிசையில் தொகுத்து எழுதியுள்ளமையைத் தெரிவித்தார். அதன் பிரதி இப்போது கிடைப்பது அருமையாலுலும், நம் பாரதத் துணைத்தலைவர் திரு. இராதாகிருஷ்ணரிடம், தாம் கொடுத்த படி ஒன்று இருக்கும் என்றும் அன்புடன் தெரிவித்தார்கள். அதனை நான் மொழி பெயர்க்கவும் வேறு எல்லா வகையில் பயன்படுத்திக் கொள்ளவும் அன்புடன் உரிமை தந்தார்கள். அவருக்கு என்ன கைம்மாறு செய்வேன்!

எங்கள் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. தி. மு. நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் பாரதத் துணைத் தலைவருக்கு எழுதி அந்நூலை வரவழைத்துத் தந்தார்கள். இந்திய ஞான உலகிற்கே தலைவராய் உள்ள இப்பெருமகனார் காலத்திற் செய்த

உதவியை என் என்று சொல்லி வாழ்த்துவது? கவிஞரிடத்தில் நம் துணைத் தலைவர் கொண்ட ஈடுபாடே இவ்வாறு கேட்டவுடன் எங்களுக்கு உதவத் தூண்டியது எனலாம். எனவே, என் முயற்சி இப்பாரத இரத்தினத்தின் பேரொளியில் விளக்கமுறத் தொடங்கியதும் என் பேறே ஆம்.

மிக விரிவாக எழுதத் திட்டமிட்டேன்; கவிஞர் இலக்கியங்களையும் அவர் எழுதிய வாழ்க்கைக் குறிப்புக்களையும் இணைத்து எழுத விரும்பினேன். ஆனால், இந்த ஆண்டு சனவரி 16-ஆம் நாளுக்குள் நான் எனது நூலை அச்சுக்கு அனுப்பவேண்டும் என்ற கட்டளை பிறந்தது. திரு. அமல்ஹோம் அவர்களது நூலினையே அடியொற்றி இந்த நூலை எழுதி முடித்தேன். இதனைச் சிறந்த வகையில் பதிப்பிக்கவேண்டும் என்று விரும்பினார் எங்கள் துணைவேந்தர். கவிஞரிடம் அவர் கொண்ட அன்பு அளவிடற்கரியது. அவர்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

கலையுள்ளங்கொண்ட எங்கள் பதிவாளர் திரு. தி. து. மீனாட்சிசுந்தரம் அவர்களும் இந்த வெளியீடு அழகாக அமைய வேண்டும் என்று முயன்றுள்ளார்கள். கீதா அச்சகமும் இதனை அழகே உருக்கொண்டாற்போல ஆக்கக் கருதியது. இத்தகைய அன்பு வெள்ளமிடும் சூழ்நிலையில் இதனினும் சிறந்த நூலை நான் எழுதவில்லையே என்று வருந்துகிறேன். அவர்கள் அன்புள்ளத்திற்கும் வாழ்த்துக்கும் என் நன்றி.

வாழ்க்கை வரலாறு என்பதிலும் வாழ்க்கைச் செய்தி நிரல் என்றே இதனைக் கூறவேண்டும். வாழ்க்கை வரலாறு எழுதுதற்கு இப்போது கடைகாலே இட்டுள்ளேன். அதுவும் நண்பர் அமல்ஹோம் இட்ட கடைகால். அதன்மேலே கவிஞரின் கோயிலை அமைத்தற்குக் கவிஞர் அருள்புரிவாராக.

அண்ணாமலைப்
பல்கலைக் கழகம்,
16--3--1961.

தெ. பொ. மீனாட்சிசுந்தரன்.

# I. சூழ்நிலை

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# 1. வரலாறு

**வங்காளம்**

தாகூர் பிறந்த வங்காளம், இராசேந்திரசோழன் காலத்தில் இருந்து தமிழர் அறிந்த ஒரு நாடாகும். அந் நாடு புத்த மதத்தின் இருப்பிடமாக ஒரு காலத்தில் விளங்கியது. அந்நாட்டிலே வழங்கிய நாடோடிப் பாடல்களும், புதிர்களும் இன்று கிடைத்துள்ளன. 12-ஆம் நூற்ருண்டின் முடிவோடு அந்நாடு தன் னுரிமையை இழந்தது. அதனை இசுலாமிய அரசர்கள் ஆளத்தொடங்கினர். பின்னர், அக்பர் ஆளுகைக்குள் 16-ஆம் நூற்ருண்டில் அது வந்தது. முகலாயர் வீழ்ச்சி தொடங்கிய பின், பல சிற்றரசர்களின் தொல்லே அந்நாட்டை வெருட்டியது. ஆங்கிலே யருடைய ஆளுகை தொடங்கிய பின், கல்கத்தா நகரம் மேலோங்கியது. இதுவே கங்கைப் புகார்.

**பழமை**

பழைய காலத்தில் சண்டிதாசர் என்ற அந்தணர், ஒரு கீழ்க்குலப் பெண்ணேக் காதலித்தார். அக்காதலே வெளியிட "கண்ணன் இராதை" என்ற பழங்காதற் கதையைப் பயன்படுத்திஞர். பல புலவர்கள் இந்தக் காதற் கதைமுறையை வளர்த்துப் பாடத் தொடங் கினர். இப்பாடல்கள் உள்ளத்தை உருக்கும் வகையில் அமைந்தன. ஆனல், நாளடைவில், இவை சொல்வ தனேயே திருப்பித் திருப்பிச் சொல்லி வந்தன. சமு தாயம் பல துறைகளேயும், ஈடுபாட்டோடு வளப் படுத்திஞல் அன்றி, அது உயிர்பெற்று ஒளிர முடி யாது. உயிர்த்துடிப்பில்லாதபோது, கவித்துடிப்பு ஏது? உயிருள்ள அத்தகைய சமுதாயம், இன்னும், உருவாகாமையால் பொருளாழத்தைப் பாடலில் காண் பது அருமையாகிவிட்டது. இந்த நிலேயில், ஆங்கிலப்

பண்பாட்டின் மோதுதலின் பயனுக, சுறுசுறுப்பும் ஒரு புதிய விழிப்பும், வங்காளத்தில் எழலாயின.

**இராம் மோகன ராய்**

இராசா ராம் மோகனராய் இப்புது விழிப்பில் எழுந்த ஊக்கத்தின் வடிவம் எனலாம். அழுகி வந்த சமுதாயத்தின் கூறுகளையெல்லாம்கண்டு, அதை நீக்கு வதற்கு நெஞ்சுரத்துடன் பாடுபட்டவர் இப்பெரியார். உடன்கட்டையேறுதல் இந்தியாவிலிருந்து ஒழிந்தது, சட்டத்திஞல் மட்டுமன்று; இவருடைய சிறந்த முயற்சி யால் எழுந்த புரட்சி அது. உருவங்களை வைத்துக் கடவுளை வழிபடுகின்ற போக்கு, சிற்சிலபோது, மிகக் கீழான நிலைமையை அடைந்தது. இதனையெல்லாம் எதிர்த்தவரும் இவரே எனலாம். கீழை நாட்டுப் பல மொழிகளையும், மேலைநாட்டுப் பல மொழிகளையும் இவரறிந்திருந்தார். கிறித்தவ வேதத்தின் தூய அடிப் படைகளில் இவர் மனம் ஈடுபட்டது. இதன்பயனுகப் பிரம்ம சமாசம் என்ற ஒரு நிலையத்தை நிறுவினுர். இவர் இங்கிலாந்து சென்றிருந்தபோது அங்கேயே மாண்டார்.

**துவாரகநாதர்**

இவருடைய தோழரே துவாரகநாத தாகூர் (1794–1846) என்பவர். ஆங்கிலேயரோடு சேர்ந்து வாணிகஞ் செய்த பெருந்தலைவர் இவரேயாம். இந்துக்கள்கல்லூரி, மருத்துவக்கல்லூரி முதலியவற்றை நிலைநாட்டியவர் இவரேயாம். இவர், அச்சுச் சட்டத்தை எதிர்த்துப் போராடி வெற்றி கண்டவர். இந்தியாவிற்கும் இங்கி லாந்துக்கும் இடையீடின்றிக் கப்பல் போக்குவரத்து நடைபெற முயன்றவரும் இவரே. இங்கிலாந்திற்கு இவர் சென்றபோது அரசியலார் உட்பட எல்லோரும் இவரைக் கொண்டாடினுர்கள். பிரஞ்சு அரசர், பெல்சிய அரசர், போப் ஆண்டவர் முதலியோரும் இவரை வரவேற்றனர். கடல்கடந்ததற்காகக் கழுவாய்



கவிஞரின் பாட்டனர்
துவாரகநாத தாகூர் (பக்கம் 4)



கவிஞர் தந்தை—மகரிஷதாகூர் (பக்கம் 6)

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

கலகத்தாவில் கவிஞர் பிறந்த வீடு (6-துவாரகநாத தாகூர் சந்து) (பக்கம் 7)





மகரிஷி இறந்தபின் அவர் குடும்பம்

பின் வரிசை :- சுகனேந்திரர், அவனீந்திரர், சமரேந்திரர், துவீபேந்திரர், சோமேந்திரர், சத்தியப்பிரசாத்.

நடு வரிசை :- சோதிரிந்திரர், துவிசேந்திரர், சுரேந்திரர், சத்தியேந்திரர், சுதீந்திரர்.

முன் வரிசை :- தினேந்திரர், இரவீந்திரர், சமீந்திரர், அருணேந்திரர், இரதீந்திரர், கிருதீந்திரர்.

(பக்கம் 9)

கவிஞரின் முதல் புகைப்படம்
1873—74 (பக்கம் 14)

கவிஞரின் தாய்—சாரதாதேவியார்
(பக்கம் 13)





செய்துகொள்ள மறுத்த இவர் இராம மோகனராய்க்குப் பெருந்துணையாக இருந்தார். இவரை அரசர் என்றே வழங்கினர். சீர்திருத்தத்திற்காக எவ்வளவும் செலவு செய்ய இவர் பின் வாங்கவில்லை. மருத்துவக் கல்வியில் முன்னேற, வங்காள மாணவர்களைத் தம்முடன் இங்கிலாந்து கொண்டு சென்ற இப்பெரியார் அங்கேயே மாண்டார்.

## எதிர்ப்பு

அக்காலத்தில் புதிதாக எழுந்த விழிப்பின் பயனுகப் பலர் ஒன்றையும் நம்பாமல், எதனையும் இகழத் தொடங்கினர். பழைய வழக்கங்களுக்கு முற்றும் எதிராகச் செல்வதொன்றே வழி என்று பலர் கருதினர். ஒழுக்கக் கேட்டிற்கு, அங்கிலேயில், அவர்கள் பலபோது அஞ்சினதுமில்லை. வெட்ட வெளிச்சமாக, மாட்டிறைச்சியை உண்ணவோ, மதுவைக் குடிக்கவோ அவர்கள் பின்வாங்க வில்லை. இவற்றை விரும்பாத போதும் இவ்வாறு செய்தனர். பழைமையை எல்லா வகையாலும் எதிர்ப்பதே, சமுதாயத்தைப் பிழைக்கவைக்கும் வழி என்று கருதினர். ஆனால், நாளடைவில் நிலைமை மாறியது. கிறித்தவ மதப் பிரசாரத்தின் காரணமாகப் பல நல்லறிவுள்ள இளைஞர்கள் கிறித்தவர்கள் ஆயினர். இதனைக் கண்டு மனம் பொறுதவரானர் ஒரு மகரிஷி; இதனைத் தடுப்பதற்கு இந்துக்கள் கல்லூரிகளைத் தாமே தொடங்கினர்.

## தந்தை

இந்த மகரிஷி வேறொருவரும் இல்லை. இராம் மோகன ராய் அவர்களின் உற்ற துணையாக இருந்த துவாரகநாத தாகூரின் மகனே ஆவர். இவரே நம் கவிஞர்பெருமான் இராவீந்திரநாதரின் தந்தையார். இவர் பெயர் தேவேந்திரநாத தாகூர் (1817 — 1905) என்பதாகும். இவர் இளமையில் இராம் மோகன ராய் அவர்களின் பள்ளியிலேயே படித்தவர். பின்னர்,

இந்துக் கல்லூரியில் கற்ருர். துவாரகநாதரின் பெருஞ் செல்வம் இவர் கைக்கு வந்தது. ஆனுல், இளமை யிலேயே உலகத்தில் பற்றற்றவர் ஆனுர். ஈசோப-நிடதத்திலிருந்து ஓர் ஏடு கிடைத்தது. அதில் ஒரு பாட்டினைக் கண்டார். செல்வத்தில் ஈடுபடாது கடவுளை நாடவேண்டும் என்ற நற்செய்தியை அதில் இவர் படித்தார். தந்தையின் வாணிபத்தை விட்டொழித்தார். கடவுளைப் போல், உலகம் அவருக்கு இனிக்கவில்லை. தத்துவபோதினி சபை ஒன்று கண்டார். தத்துவபோதினி என்ற வெளியீட்டில் தொடர்ந்து உபநிடத உண்மைகளை எழுதி வந்தார். விஞ்ஞானக் கருத்துக்களையும் பரப்பி வந்தார்.

**மகரிஷி**

இராம் மோகனராய் அவர்கள் கண்ட பிரம்ம சமாசம், இராம் மோகனராய் அவர்களுக்குப் பின் மறையத்தொடங்கியது. தேவேந்திரநாதர் அந்தச் சமாசத்தில், 1842-இல் சேர்ந்தார். வேதத்தை முழுக்க முழுக்க ஒப்புக்கொள்ள முடியாது என்று இவர் கூறியதிலிருந்து பிரம்ம சமாசத்தின் போக்கு வேறு வகையில் திரும்பியது. 1850-இல் பிரம்ம தர்மம் என்ற தம் நூலை வெளியிட்டார். 'மகரிஷி' என்று எல்லோரும் இவரைக் கொண்டாடினர். இதனிடையே தந்தையார் விட்டுச் சென்ற செல்வம், வங்கியின் முறிவால், மறைந்தது. கோடிக்குமேல் கடனுளியானுர். இந்தக் கடன் இவரைச் சட்டப்படி பற்றுவதற்கு இல்லை. இருந்தாலும் உற்ருர், உறவினர், நட்பினர் முதலியோர் பேச்சையும் கேளாமல், அக்கடன் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். உலகம் இவரைப் போற்றத் தொடங்கியது. பல ஆண்டுகள் இமயமலைச் சாரலில் தியானத்தில் மூழ்கி இருந்தார். கவிஞர் பெருமானின் இமய மலைத் தொடர்பு இதனுல் எழுந்தது எனலாம். இவரே பிரம்மசமாசத் தலைவரான கேசவ சந்திர சேன் என்பவரின் ஞானத் தந்தை எனலாம். தாமே தனியிருந்து

காலையும் மாலையும், பிறகு ஓய்வான காலத்தும், இயற்கையின் அழகிலே தம்மை மறந்து கடவுளைத் தியானித்துச் சமாதி கூடுவது மகரிஷியின் இயல்பாகும். இதற்கென இவர் வாங்கிய இடமே சாந்தி நிகேதனமாகும். இத்தகைய இடம் பிறகு உலக நிலையமானது வியப்போ?

## குடும்ப வீடு

இப்படிப்பட்ட மகரிஷியின் புதல்வராக இரவீந்திர நாத தாகூர் அவர்கள் பிறந்தார். இவர் பிறந்தது தாகூர் குடும்பத்தின் பழைய குடும்ப வீட்டிலாகும். இது கல்கத்தாவிலுள்ளது. மூன்றடுக்கு மாடி வீடுகள் பல ஒன்று கூடிய இக்குடும்ப வீடு இரும்புக் கதவுக்குப் பின்னாலே விளங்கியது. குடும்பம் வளர வளர அப்போதுக்கப்போது எழுப்பிய மாளிகைகளின் தொகுதியே இந்த நிலையமாகும்.

## காலமும் கவியும்

எனவே, கவிஞர் பெருமான், இந்திய வரலாற்றில் ஒரு புதிய ஊழியானது தொடங்கும்போதே, தோன்றினார். அந்த ஊழி பிறப்பதற்கு வழிவகுத்த சிறந்த குடும்பத்திலேயே பிறந்தார்; ஒரு சிறந்த ஞான மரபிலேயே பிறந்தார்; அதற்கென எழுந்த சூழ்நிலையின் நடுவிலேயே பிறந்தார். எனவே, கவிஞரின் புத்துணர்ச்சியும், உலகமே குடும்பம் என்ற மனப்பான்மையும், இயற்கையோடு அனைத்தையும் ஒருயிராகக்கண்டு களிக்கும் இந்தியக் கவி ரிஷிகளின் போக்கும், இந்திய நாட்டுப் பற்றும், ஞானப்பாங்கும் நாம் இந்தச் சூழலில் எதிர்பார்க்கத் தக்கனவேஆம்.

---

# 2. குடி வழி

## I. இரவீந்திரர்

சாண்டில்யர் (கோத்திரம்)

வங்காள மறையவர், ரகரிகுடி : வந்த்ய உபாத்யாயர்கள்

பிரலி மரபு — ஜெஸ்ஸோர் குருசுக தேவர் :
- மகள்

பிதவோக மரபு — பட்ட நாராயணர்
- சகந்நாத குசரி

புருடோத்தமர்
(1690-இல் கோவிந்தபுரத்தில் இருந்தவர்)

பஞ்சானனதகோர்
(தகோர் - உயர் திருவாளர்; இது தகூர் என மருவியது)

சயராமர் (*1736* வரை)
(1707-இல் கல்கத்தா முதல் சர்வேயில் அமீன்)

- அனந்திராமர் (1756-க்குமுன் மறைவு)
- நீலமணி (*1791* வரை) (பிளாசிக்குப் பின் கல்கத்தாவில் வீடு வாங்கி உடன் பிறந்தாருடன் வாழ்ந்து, பின் தனியே பிரிந்து சோராசங் கோவில் மக்களுடன் தங்கினர்)
- தர்ப்ப நாராயணர் (1731–1793)
- கோவிந்த ராமர் (1777 வரை)

நீலமணியின் மக்கள்:
- இராமலோசனர் (*1754-1807*)
- இராமமணி (*1759-1833*)
- இராமவல்லபா (*1767-1824*)

இராமமணியின் மக்கள்:
- இராதாநாதர் (*1790-1828*)
- துவாரகநாதர் (*1784-1846*)
- மகாராசா இராமநாதர் (*1800-1877*)

துவாரகநாதரின் மக்கள்:
- தேவேந்திரநாதர் (*1817-1905*)
- கிரீந்திரநாதர் (*1820-1854*)
- நாகேந்திரநாதர் (*1829-1858*)

இரவீந்திரநாதர்

## II. இரவீந்தரரும் உடன்பிறந்தோரும்

1. இளமையில் இறந்த தமக்கை
2. துவிசேந்திரர் (1840–1926)
3. சத்தியேந்திரர் (1842–1923)
4. ஏமேந்திரர் (1844–1884)
5. வீரேந்திரர் (1845–1915)
6. சௌதாமணி (1847–1920)
7. சோதிரிந்திரர் (1848–1925)
8. சுகுமாரி (1849–1864)
9. புண்ணியேந்திரர் (1850–1851)
10. சரத்குமாரி (1855–1920)
11. சுவர்ணகுமாரி (1858–1932)
12. வர்ணகுமாரி (1858– )
13. சோமேந்திரர் (1860–1923)
14. இரவீந்திரர் (1861–1941)
15. புதேந்திரர் (1863–1864)

## III. இரவீந்திரர் மக்கள்

1. மதுரிலதா (1886-1918 சக்ரவர்த்தி என்பவரை மணந்தார்; குழவி இல்லை.)
2. இரதீந்திரர் (1888- - பிரதிமாவை மணந்தார்)
3. இரேணுகா (1890-1904 - பட்டாச்சாரியை மணந்தார். குழவி இல்லை)
4. மீரா (1892- - கங்கூலியை மணந்தார். இவர்கட்கு ஜர்மனியில் 1936-இல் இறந்த நித்தியேந்திரரே ஒரே மகனுர். கிருஷ்ண கிருபாளினியை மணந்த நந்திதாவே ஒரே மகள்)
5. சமீந்திரர் (1894-1907)

## IV. இரவீந்தரரின் சிற்றப்பாவின் குடி வழி

- **கிரீந்திரநாதர்**
  - **கணேந்திரர்** *(1841-1869)*
  - **குணேந்திரர்** *(1847-1881)*
    - **ககனேந்திரர்** *(1867-1938)*
    - **சமரேந்திரர்** *(1870- )*
    - **அவனீந்திரர்** *(1871- )*

# II. இளமை

# 1. சோதிடம்

**இராசிச் சக்கரம்**

இரவீந்திரநாதர் 1861-ஆம் ஆண்டு மே மாதம் 7-ஆம் தேதி காலை 2–37 மணிக்குப் பிறந்தார். இதோ இவர் சோதிடம்!

| | | | |
|---|---|---|---|
| சந்திரன் / வெள்ளி | புதன் ஞாயிறு | | செவ்வாய் கேது |
| | மீன இராசி | | வியாழன் |
| | மீன இலக்கினம் | | சனி |
| இராகு | | | |

**தாய் தந்தையர் வீடு**

கவிஞர் தாகூர் பிறந்தது கல்கத்தாவில் என்று கூறினேம். அவருடைய பாட்டனர் துவாரகநாத தாகூரின் பெயரால் விளங்கிய சந்து ஒன்றில் ஆரும் எண்ணுள்ள வீட்டில் அவர் பிறந்தார். அவர் தந்தையார் மகரிஷி தேவேந்திரநாத தாகூர் என்று கண்டோம். அவருடைய தாயார் சாரதா தேவியார். இவர்களுடைய 14-ஆம் குழந்தையாகவும் 8-ஆம் மகனுகவும் கவிஞர் பிறந்தார்.

———

## 2. கல்வி வளர்ச்சியும் பாடல் மலர்ச்சியும்

### முதற்பள்ளி

முதலில் தாகூர் கீழ்க்கலைப் பள்ளியில் சேர்ந்து படித்தார். சிலகாலம் கழித்து 'நார்மல்' பள்ளியில் படிக்கச் சென்றார்.

### வீட்டுப் படிப்பு

பின் அவருடைய அண்ணனுருடனும், உடன் பிறந்தார் மகனுடனும் வீட்டிலேயே படித்து வந்தார். பல ஆசிரியர்களின் கீழ், விஞ்ஞானம், ஜியோமிதி, கணக்கு, வரலாறு, பூகோளம், உடற்கூறு, இலக்கணம், வடமொழி, வங்காளம், ஆங்கிலம், இசை, ஓவியம், மற்போர், உடற்பயிற்சி முதலியன பயின்றார். தம் ஏழாவது ஆண்டிலேயே, 1868-இல், முதல் முதலாகச் செய்யுள் இயற்றத் தொடங்கினார்.

### பள்ளி வெறுப்பு

படிப்பிற்காக வங்காளக் கழகத்தில் சேர்ந்தார். ஆனால், அங்கே முறையாகப் போகாது இருந்தார்.

### சாந்திநிகேதனம்

பிற்காலத்தில் அவர் மனத்தினைக் கவர்ந்த சாந்தி நிகேதனத்தினைத் தந்தையார் உடன் சென்று இளமையிலேயே கண்டு மகிழ்ந்தார். பின்னர்த் திரும்பி வந்த போது 6—2—1873-இல் 12-ஆவது வயதில் உபநயனம் செய்யப் பெற்றார்.

### முதல் நாடகம்

"பிருதிவிராசன் தோல்வி" என்ற நாடகத்தை இளமையிலேயே எழுதினார். ஆனால், அது கைதவறிப் போய்விட்டதால், நமக்கு இதுவரை கிடைக்கவில்லை.

### தந்தை

தந்தையாரோடு வட இந்தியாவில் பெரியதொரு பயணம் செய்து வந்தார். அப்போது அமிருதசரசில் ஒரு திங்களும், இமயமலையில் நான்கு திங்களும் வாழ்ந்து வரும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. தம் கவியுள்ளம் கனியும் வகையில் இயற்கை இன்பத்தில் இளைய கவிஞர் தோய்ந்தார். தந்தையாரிடமே ஒழுங் காக வடமொழி இலக்கணத்தையும் ஆங்கிலத்தையும் வான நூலையும் படித்து அறிந்தார்.

### மற்ருெரு பள்ளி

கல்கத்தாவிற்குத் திரும்பியதும், 1874-இல், சவரி ராயர் பள்ளியில் சேர்ந்து படிக்கத் தொடங்கினர்.

### முதற் பாட்டு

“ அபிலாஷை ” (விருப்பம்) என்பது இளமையில் அவர் பாடிய பாடல்களில் ஒன்று. அப்பாட்டோ, பத்திரிகையில், 1874-இல், “ 12 ஆண்டே நிறைந்த பையன் பாடிய பாடல் ” என்று வெளி வந்தது.

### தாய் மறைவு

8—7—1875-இல் அவர் வாழ்வில் ஒரு பேரிடி விழுந் தது. அவருடைய தாயார் அன்று உலக வாழ்வை விட்டு மறைந்தார்.

### வெளியான முதற் பாட்டு

தாகூரின் பெயராலேயே வெளி வந்த முதற் பாடல் நம் தாய் நாடாம் இந்தியாவைப் பற்றியது. 25—2—1875-இல் கூடிய இந்து மேளாவில் அவரே அதனைப் படித்தார். அந்நாளைய பத்திரிகை, அன்று பாடிய அவருடைய இனிய குரலைப் பாராட்டியது. அமிர்தபசார் பத்திரிகையில் வெளி வந்தது இப் பாடல்.

**மொழிபெயர்ப்பு**

குமாரசம்பவமும், சாகுந்தலமும், ஆங்கில இலக்கியங்களில் சிறப்பாக ஷேக்ஸ்பியரும் அக்காலத்தில் இவர் வீட்டிலேயே கற்று வந்தார். வங்காளச் செய்யுளில், ஷேக்ஸ்பியரது மேக்பத்து என்ற நாடகத்தை, அப்போதே இவர் மொழி பெயர்த்தார்.

**காப்பியமும் பழமையும்**

இவருடைய ஐந்தாம் அண்ணனுர் சோதிர் இந்திர நாதர் எழுதிய சரோசினி என்கிற தேசீய நாடகத்திற்கெனக் கவிஞர் ஒரு பாடலைப் பாடித் தந்தார். "காட்டு மலர்" என்ற நீண்டதொரு காப்பியத்தையும் எட்டுக் காண்டங்களில் தாகூர் பாடினர். அது 1876-இல் "ஞானங்குரம்" என்ற திங்கள் மலரில் வெளியானது. "பானுசிங்கத்தாகூர்" என்ற புனை பெயரில், வைணவப் பதாவளிகளின் அகப்பொருள் நடையில், தாகூர் பல பாடல்கள் பாடினர், இவை பழைய பாடல்களே என்று எல்லோரும் நம்பினர். இதனைப் பழைய பாடலாகவே கொண்டு ஆராய்ச்சிக் கட்டுரை எழுதிச் செர்மனியப் பல்கலைக் கழகத்தில் பி. எச். டி. என்ற அறிஞர் பட்டம் பெற்ருராம் ஒருவர் !

**அண்ணனும் தம்பியும் : நடித்தல்**

இரண்டாம் முறையும் தம் தந்தையாரோடு இமய மலை வட்டாரங்களைச் சுற்றிப் பார்க்கும் வாய்ப்பினைப் பெற்ருர் தாகூர். கவிஞருக்கு இது பெரும்பேறு அன்ருே! கல்கத்தா திரும்பியதும், தம் அண்ணனுர் எழுதிய நாடகத்தில் அலிக்பாபுவாக நடித்தார். அவர் நடித்தது இதுதான் முதன்முறை அன்று; இதற்கு முன்னரும் தம் அண்ணனுர் எழுதிய ஓர் இசை நாடகத்தில் நடித்துள்ளார். அவருடைய பாடல்களையும் கட்டுரைகளையும், இலக்கிய ஆராய்ச்சிகளையும் 1877-இல் இவர் அண்ணனுரே வெளியிட்டார். "பாரதி"

3

கவிஞரின் இரண்டாம் புகைப்படம்

1875— 76 (பக்கம் 16)



UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

1879-80 கவிஞர் இலண்டனில்
மாணவராக (பக்கம் 18)



1881 பிப்ரவரியில் வால்மீகிப் பிரதிபை
யில் வால்மீகியாகக்கவிஞர் (பக்கம் 19)





3—84 கவிஞர் (பக்கம் 20)



1883–84 கவிஞரும், மனைவியும்—புது மணமக்கள்
(பக்கம் 21)

கவிஞருக்கு ஞானோதயமான இடம்
(10, சத்தர் தெரு, கல்கத்தா) (பக்கம் 20)



என்ற திங்கள் மலரில் அவை வெளிவந்தன. மைகேல் மதுசூதனதத்தரின் "மேகநாத வதம்" என்ற காப்பியத்தின் ஆராய்ச்சியும் அதில் வெளிவந்தது. "பிக்காரினி" என்ற பெரிய கதையும், முடிவுபெருத "கருணு" என்கிற நாவலும், "கவியின் கதை" என்ற இவரது நீண்டதோர் பாடலும் அதில் இடம் பெற்றன. "ஆங்கிலப் பழக்கங்கள்" "ஆங்கிலோ சாக்சன் இலக்கியம்" "பியாத்திரிசும் தாந்தேயும்" என்ற தலைப்புக்களில் இவர் எழுதிய கட்டுரைகளும், பங்கிம் சந்திர சாட்டர்சியின் பாடல்களைப் பற்றி இவர் எழுதிய இலக்கிய ஆராய்ச்சியும் அப்போதே வெளிவந்தன.

### நாட்டுப் பற்று

இந்தியப் பெரும்பஞ்சம் இவர் பிஞ்சு உள்ளத்தைத் தொட்டது. அப்போது கூடிய இந்து மேளாவில் லிட்டன் பிரபுவின் தில்லி தர்பாரைப்பற்றி இவர் ஒரு பாடல் பாடினுர். அதிலே ஆங்கிலேயர்கள் இந்தியாவைச் சுற்றிக் கட்டி வைத்திருக்கும் பொற்சங்கிலியை இந்திய அரசர்களும் மக்களும் பாராட்டி வாழ்த்தி, அதற்கென ஆங்கிலேயர் எதிரே, அவர்கள் மண்டியிட்டு நிற்கும் நிலையைத் தம் உணர்ச்சியெல்லாம் தோன்றக் கண்டித்து எழுதியிருந்தார். இவ்வாறு இவரது தேசப்பற்று இளமையிலிருந்தே கொழுந்து விட்டொளிர்ந்தது. இந்த நாட்டுப் பற்றுப் பாடல், பின் இவர் அண்ணனுரின் "சுவப்னமயி" என்ற நாடகத்தில் இடம்பெற்றது.

### இங்கிலாந்தில் கல்வி

கவிஞரின் உலகத்தொடர்பும் இளமையிலேயே தொடங்கியது. உலகத்தொடர்பு கொண்ட குடும்பம் அன்றே இவருடைய குடும்பம்? இவருடைய இரண்டாம் அண்ணனுரான சத்தியேந்தரநாத தாகூருடன் இங்கிலாந்து சென்ருர். இந்த அண்ணனுர் இந்திய

சிவில் சர்வீசில் நுழைந்த முதல் இந்தியர்; அப்போது ஆமதாபாத்தில் அறமன்றத் தலைவராக இருந்தார். இங்கிலாந்தில் தங்கி, ஆங்கில இலக்கியம் கற்கவே கவிஞர் பயணமானார். 20-9-78-இல் இங்கிலாந்துக்குப் புறப்பட்டார். முன்கூறிய "கவியின் கதை" என்ற காப்பியம் 5-11-78-இல் வெளியானது. சத்தியேந்திர நாத தாகூரின் மனைவியோடும் மக்களோடும், இங்கிலாந்தில் பிரைட்டன் என்ற நகரில் தங்கியிருந்து பள்ளியில் கற்கச்சென்றார். தாரகநாத் பாலித் என்பவர் இவரை இலண்டனுக்கு அழைத்து வந்து, அங்குள்ள பல்கலைக் கழகக் கல்லூரியில் சேர்த்தார். அங்கே ஹென்றி மார்லே என்ற பேராசிரியரிடம் இலக்கியம் கற்றதைக் கவிஞர் பெருமான் என்றும் மறக்கவில்லை. அப்பேராசிரியர் உள்ளத்திலே இலக்கியம் உயிர் பெற்று எழுந்து, அவருடைய குரலின் வழியே கேட்பாரின் உள்ளத்திலே உயிருக்குயிராகப் புகுந்த தெனக் கவிஞர் பாராட்டினார். தாகூர் ஆங்கில ஆட்சியைக் கண்டித்து எழுதிய கட்டுரையையும் மார்லே பாராட்டினாராம். ஆசிரியர் பார்க்கர் என்பா ரோடும், டாக்டர் ஸ்காட் என்பாரோடும் கவிஞர் தங்கி யிருந்தார். அப்போது, தாகூர், ஐரோப்பிய இசையை யும் பயின்றார். கிளாட்ஸ்டன், பி(B)ரைட்டு முதலியோர் பேச்சுக்களைக் கேட்க ஆங்கிலப் பாராளும் மன்றத் துக்கும் தாகூர் சென்றிருந்தாராம். இலண்டனி லிருந்த போதே "சிதைந்த படகு" முதலிய வீரக்கதைப் பாடல்களையும், ஐரோப்பாவைப் பற்றிய கடிதங்களை யும் இவர் எழுதி வந்தார். இவை, பாரதியில் வெளி யாயின. "உடைந்த நெஞ்சம்" என்ற செய்யுள் நாட கத்தை இங்கிலாந்தில்தான் கவிஞர் எழுதத் தொடங் கினார். அது, பின்னர், நூல்வடிவில் 1881-இல் வெளி யாயிற்று.

## 3. முதல் இலக்கியங்கள்

### இசை நாடகமும் நடித்தலும்

கவிஞர் 1880-இல் இந்தியாவிற்குத் திரும்பினர். 'வான்மீகியின் பிரதிபை', 'இறப்பில் முடிந்த வேட்டை' என்ற இசை நாடகங்களை எழுதினர். அவற்றை நாடகமாக நடித்தபொழுது, முதல் நாடகத்தில் 1881-இல் வான்மீகியாகவும், இரண்டாவதில், 1882-இல், குருடான தவசியாகவும் நடித்தார். பங்கிம் சந்திர சாட்டர்சி, குருதாச பானர்சி போன்றவர்கள் அவற்றைக் கண்டு களித்தார்கள்.

### உலக உள்ளம்

பாரதியிலே, "சீனவில் சாவு வணிகம்" என்ற தலைப்பில் ஒரு கடுமையான கட்டுரை எழுதினர். அதில் இங்கிலாந்து சீனவில் நடத்தி வந்த அபினி வணிகத்தை வன்மையாகத் தாக்கினர். உலகத்தை ஒரு குடும்பமாகக் கருதும் நம் கவிஞர் உள்ளம் அவ்வாறு அப்போதே வெளியானது.

### முதற் பேச்சு

முதல் முதலாக அவர் மேடையேறிப் பேசியது, 1881-இல் மே மாதத்தில், கிருஷ்ண மோகன் பானர்சி என்ற பாதிரியார் தலைமையிலே ஆகும். "இசையும் உணர்ச்சியும்" என்பதைப்பற்றி அங்குப் பேசினர். தாகூர் 1881-மே மாதத்திலே சட்டம் படிப்பதற்காக இங்கிலாந்து செல்லப் புறப்பட்டார். ஆனல், சென்னைக்கு வருவதற்குள் மனத்தை மாற்றிக் கொண்டு, தம் தந்தையைக் காண முசூரி சென்றார்.

### முதல் நாவல்

"இளைய அரசியின் அங்காடி" என்ற நாவலை இப்போதுதான் இவர் எழுதத் தொடங்கினர். இப்

போது கிடைக்கும் இவர் நாவல்களில் இதுவே இவர் முதல் முதல் எழுதியதாகும். "உருத்திர சண்டா" என்ற வரலாற்று நாடகத்தையும் செந்தொடையில் கவிஞர் எழுதி வெளியிட்டார். "சந்தியா சங்கீதம்" என்ற மாலைப் பாடல்களை 1882-இல் வெளியிட்டார். இரமேச சந்திரதத்தர் வீட்டில் நடந்த ஒரு கூட்டத்தில் பங்கிம் சந்திரர் அந்தப் பாடல்களைப் பலபடப் பாராட்டித் தமக்கு அணிந்த மாலையை இரவீந்திரநாதருக்குச் சூட்டினாராம். பின்னர், கவிஞர் தம்முடைய உடன் பிறந்தாரான சோதிரிந்திர நாதருடன் சந்திரநாகூரில் தங்கியிருந்தார். அங்கே பல பாடல்கள் பாடியும், பல பாடல்களுக்கு இசையமைத்தும் வந்தார்.

## ஞான விளக்கம்

கல்கத்தாவிற்குத் திரும்பியதும் சத்தர் தெருவில் 10-ஆம் எண்ணுள்ள வீட்டில் தாகூர் வாழ்ந்து வரலானார். இங்குத்தான் அவருக்கு ஞான விளக்கம் தோன்றியது. இங்கேதான் "தன் கனவிலிருந்து விழித்து எழுந்த நீரூற்று" என்ற சிறந்த பாட்டினைப் பாடினார். "பிரபாத சங்கீதம்" (காலைப் பாடல்கள்) என்ற பாட்டுக்கோவையில் இஃதே உயிர் நிலையானது. இது 1883-இல் வெளிவந்தது. இப்போதுதான் இவர் வங்காள இலக்கியக் கழகத்தை நிலைநாட்டப் பலபட முயன்றார்; ஆனால் வெற்றி காணவில்லை.

## நாடி

23—3—83-இல் "ஒன்றுக்கும் உதவாதது" என்ற தலைப்பில், சாவித்திரி நூல் நிலையத்தின் ஆண்டு விழாவில், ஒரு கட்டுரை எழுதிப் படித்தார். அதில் அந்தக் காலத்தில், சமுதாயம், அரசியல் இலக்கியம் என்ற பல துறைகளிலும் எழுந்த நம்மவரது முயற்சிகள் எல்லாம் வீணாகி வருவதைக் கண்டு உள்ளம் வருந்தினார். இது முடிந்ததும் பம்பாய்க் கடற்கரையில் உள்ள கார்வால் என்ற இடத்திற்குச் சென்று கண்டு

களித்தார். இப்படி அடிக்கடிப் பயணம் சென்று இந்தியாவின் நாடியை அறியத் தாகூருக்கு வாய்ப்புகள் உண்டாயின.

**மணமும் துயரமும்**

அங்கிருந்து கல்கத்தாவிற்குத் திரும்பினர். மிருநளினி தேவியாரை 9—12—83-இல் மணந்து கொண்டார். அப்போது அவருக்கு 22 ஆண்டு. வாழ்வில் ஒரு புது அனுபவம், அதனல், தோன்றியது. "பிருகிருதி பிரதிசோதம்" என்ற செய்யுள் நாடகத்தையும் பாரதியில் கவிஞர் எழுதி வெளியிட்டார். அவரது இளமைமுதல் அவரை அன்புடன் தாய் போலப் பாராட்டிய அவருடைய அண்ணியார் 20—5—84-இல் இறந்தார். தாகூர் துன்பக்கடலில் மூழ்கினர்.

**மொழி பெயர்ப்பு**

"மேடு பள்ளங்கள்" என்ற தலைப்பிலே ஷெல்லி, பிரௌனிங் அம்மையார், எர்னஸ்ட் மையர்ஸ், ஒப்ரே தி வேர், விக்டர் ஹ்யூகோ முதலிய ஐரோப்பியப் பாவாணர்களின் பாடல்களைச் செய்யுள் வடிவில் மொழி பெயர்த்து வந்தார்.

**மீட்டும் சமுதாயம்**

சாவித்திரி நூல் நிலையத்திலேயே 26—8—84-இல் "கொள்கையும் செயல் முறையும்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதிப் படித்தார். அதிலே, அக்காலத்தில் நடந்த அரசியல் கிளர்ச்சியின் வீண் போக்கினையும், வெட்கம் கெட்ட இயல்பினையும் கண்டனம் செய்தார்.

**பிரம்ம சமாசம்**

தாகூர் ஆதி பிரம்ம சமாசத்தின் செயலாளராக 1884 அக்டோபரில் செயலாற்றத் தொடங்கினர். தம் பாட்டனரும் தந்தையாரும் போனவழியில் இவர்

போவது இயல்புதானே! இந்து மதத்தின் குறிக்கோள்களைப்பற்றி ஆராய்ந்து, அவற்றைத் தாக்கவும், இவ்வாறு இவருக்கு இடம் ஏற்பட்டது. அதனுல், பங்கிம் சந்திர சாட்டர்சியோடு பாரதியில் வாதாடவும் நேர்ந்தது. ஆனுல், அதன் முடிவாகப் பங்கிம் அவர்களே, இளைய பாவாணரின் வாத முறையைப் பாராட்டி ஒரு கடிதம் எழுதினுர். வாதத்திலும் கவிஞர் நடுநிலைமை தவறியதில்லை என்பது இதனுல் விளங்குகிறது அன்றே ?

**பாலகன்**

பாலகன் என்பது அப்போது இளைஞர்களுக்காகத் தோன்றியதோரு புது வங்காளத் திங்கள் வெளியீடு. இதன் பொறுப்பையும் தாகூர் ஏற்ருர். பின்னர், அது பாரதியோடு இணைந்துவிட்டது. “ இராச ரிஷி ” என்ற நாவலையும் (1887-இல் பின் வெளியானது) “மகுடம்” (1908-இல் பின் வெளியானது) என்ற கதையையும், பல கட்டுரைகளையும், கடிதங்களையும் எழுதியதோடு, 1885-இல் இராம்மோகன் ராயைப்பற்றிச் சிறந்ததொரு நூலையும் பாலகனுக்காகத் தாகூர் எழுதி முடித்தார். வைணவப்பதாவளியின் பாடற்கொத்து ஒன்றைப் பதிப்பிக்கத் தொடங்கினுர். 1885-இல் அவருடைய நண்பர் ஒருவர் “இரவி சாயை” என்ற தலைப்பில் கவிஞருடைய பாடல் தொகுதியை முதல் முதலில் வெளியிட்டார். பல பொருள்களைப் பற்றிய கட்டுரைகளை “ ஆலோசனை ” என்ற தலைப்பில் கவிஞர் உலகிற்கு அளித்து வந்தார். “ சைசவ சங்கீதம் ” (குழந்தைப் பாடல்கள்) என்ற நூலை வெளியிட்டு, அதனை மறைந்த தம் அண்ணியாரின் நினைவுக்குக் காணிக்கையாகச் செலுத்தினுர். உறவின் பிணைப்பு இவ்வாறு வெளித்தோன்றியது. அம்மட்டுமா ? உடனே பம்பாயில் உள்ள பந்தராவில் நோய்வாய்ப்பட்டு இருந்த தந்தையையும் சென்று கண்டார். தம்முடைய அண்ணனுர் சோளாபூரில் வாழ்ந்துவந்தவ

ரோடும் சில நாள் தங்கினர். மாதுரிலதா என்கின்ற அவருடைய முதல் பெண் குழந்தை 22—2—86-இல் இவருள்ளம் மகிழப் பிறந்தது.

**வாதம்**

இவர் பிரம்ம சமாசத்தில் ஈடுபட்டிருந்ததால் அப்போது அதன் கொள்கைகளையும், குறிக்கோள்களையும் கண்டனம் செய்து பலர் எழுதிய கருத்துக்களை இவர் மறுத்து எழுதவேண்டியதாயிற்று. சஞ்சீவினி என்ற வங்காளக் கிழமைத்தாளில் இந்த முறையில் வாதாடி வந்தார்.

**காங்கிரசு**

1886 டிசம்பர் மாதத்தில் தேசீய காங்கிரசு கல்கத்தாவில் இரண்டாம் முறையாகக் கூடியது. அதில் தாகூர் "தாயின் கட்டளைக்கு ஏற்ப இன்று கூடியுள்ளோம்" என்ற பாடலைப் பாடினர். சமுதாயச் சிக்கல்களைப் பற்றிச் சில கடிதங்களைப் பத்திரிகையில், 1886-இல், வெளியிட்டார். "மேடும் பள்ளமும்" என்ற அவர் நூலும் வெளியாயிற்று. பல பொருள்களைப் பற்றிய அவருடைய ஆராய்ச்சிக் கட்டுரைகள் "சமாலோசனை" என்ற தலைப்பில், 1888-இல், வெளிவந்தன. தம் உடன்பிறந்தார் நாசிக்குக்கு மாற்றலான போது, அங்கு நம்முடைய கவிஞர் சென்ருர். பின்னர்க் காசிப்பூரில் சில காலம் தங்கி "மானசி" என்ற தலைப்பில், பின் வெளிவந்த பாடல்களை இயற்றினர்.

**மணத்தின் குறிக்கோள்**

அங்கிருந்து கல்கத்தாவிற்குத் திரும்பித் தம்முடைய தந்தையாரோடு தங்கியிருக்கலானர். மகேந்திரலால் சர்க்காரின் தலைமையில் விஞ்ஞான வளர்ச்சிக்கு என்று எழுந்தது ஓர் இந்தியக் கழகம். அதில் இந்து முறைக் கல்யாணத்தின் குறிக்கோளைப்பற்றி ஒரு கட்டுரையை விபினசந்திரபாலரின் வேண்டுகோளுக்கு இணங்கிப் படித்தார். அதைப் பின்பற்றி நீண்ட

தொரு வாதம் எழுந்தது; பெரிய மனக்கசப்புக் களையே அது விளைத்து வந்தாலும், சம்ஸ்கிருத கல்லூரியின் தலைவரான நாயரத்தினர் போன்ருரின் ஆதரவும் கவிஞருக்கு அப்போது கிடைத்தது.

## இயற்கையும், இலக்கியமும்

1887-இல் முதல் முறையாக டார்ஜிலிங்குக்குச் சென்று, அதன் அழகில் தம் மனத்தைக் கவிஞர் பறி கொடுத்தார். பின்னர் ஷெலிதாவுக்குச் சென்ருர். அவருடைய மனைவியும் மகளும் அவரோடு அங்குச் சென்ருர்கள். அதுதான் அவர்களுடைய குடும்பச் சொத்தின் தலைமை அலுவலகம். மறுமுறையும் காசிப் பூருக்குச் சென்று, தொடர்ந்து செய்யுள்களும் இசைப் பாடல்களும் எழுதிவந்தார். இவருடைய தமக்கை யார் சகி என்ற மாதர் கழகத்தினைத் தொடங்கி யிருந்தனர்; அக்கழகத்தினர் நடிப்பதற்காக] "மயர் கேலா" என்ற இசை நாடகத்தைக் கவிஞர் எழுதித் தந்தார். 27-1-88-இல் அவருடைய முதல் மகனுர் இர தீந்திரநாதர் பிறந்தார். "இராசா இராணி" என்ற நாடகத்தை எழுதித் தம்முடைய அண்ணனுருக்குக் காணிக்கையாக்கி, அதனை 1889-இல்,கவிஞர் வெளியிட் டார். அந்த நாடகம் நடிக்கப்பட்டபொழுது, அதில் விக்கிரம மன்னராகக் கவிஞரே நடித்தார். சகசத் பூருக்குச் சென்று "விசர்சனம்" (தியாகம்) என்ற நாடகத்தை 1890-இல் எழுதி முடித்தார்,

## காளிதாசன்

கவிஞர் சாந்திநிகேதனத்தில் தங்கியிருந்தபோது காளிதாசனின் மேகசந்தேசத்தில் ஈடுபட்டார். அதில் பொங்கிய உள்ளுணர்ச்சியின் வெளியீடாக "மேக தூதன்" என்ற சிறந்ததொரு செய்யுளினைக் க்விஞர் இயற்றினர். அவருடைய இரண்டாவது மகளாரான இரேணுகா தேவியார் அந்தக் காலத்தில் (31-1-90) பிறந்தார்.



அவனீந்திர நாதரும்-கவிஞரும்—1858–1889
(பக்கம் 24)

ENSION LIBRARY
URAI







1894—1895
சாதனுவின் ஆசிரியர் (பக்கம் 26)

390 ஷெலிதாவில் கவிஞர் (பக்கம் 24)



**பயணம்**

முன் (பக். 18) நாம் கண்ட பலீத் என்கிற தம்முடைய நண்பரோடு, 22–8–90-இல், தாகூர் இங்கிலாந்திற்குப் பயணமானார். அவருடைய அண்ணனார் சத்தியேந்திர நாதரும் அவருடன் சென்றார். இத்தாலி, பிரான்சு முதலிய நாடுகளின் வழியே இலண்டன் மாநகரம் சென்று சேர்ந்தார். வெளிநாடுகளில் பத்து வாரம் தங்கிய பின், 4–11–90-இல் தாய்நாடு திரும்பிப் பம்பாயில் இறங்கினார்.

---

## 4. குடும்பமும் நாட்டு மக்களும்

### குடும்பப் பொறுப்பு

தம்முடைய குடும்பச் சொத்துக்களை மேற்பார்க்கும்பொறுப்பும் இவர் தலைமேல் விழுந்தது. இதன் பயனக, ஷெலிதாவைத் தம் தலைமை நிலையமாக்கிக் கொண்டு, வீடுபோன்ற படகிலே, தங்கிச் சமீன்தாரி இடங்களை எப்போதும் சுற்றிப் பார்த்துக்கொண்டே வருவாராயினர். இந்த நிருவாகத்தில் திறம்படைத்த புதிய முறையினைக் கையாண்டார். அந்த முறையினைத் துரைத்தனத்தாரும் தங்கள் வெளியீடுகளில் புகழ்ந்து பாராட்டினர்கள்.

### காங்கிரசு

*1890*-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மறுமுறையும் கல்கத்தாவில், ஆறும் தேசீய காங்கிரசு கூடியது. பெ(F)ரோசு மேதாவே அதன் தலைமை பூண்டார். அப்போது அதன் தொடக்கத்தில் இவரே, 'வந்தேமாதரம்' என்ற பாடலை இசையாகப் பாடினர். காங்கிரசின் தலைவரைப் பாராட்டுதற்கு எனக் கல்கத்தாவில் குடிமக்கள் குழு ஒன்று அமைந்தது; கவிஞரே அதன் தலைவராகப் பணியாற்றினர்.

### பத்திரிகைத் தொண்டு

இளமையிலிருந்தே பத்திரிகை உலகில் ஈடுபட்ட நம் கவிஞர், அவ்வகையில் செய்த புதிய முயற்சிகள் பலப்பல. இந்தக்காலத்தில்தான் கவிஞர், புதிதாகச் 'சாதனம்' என்கின்ற வங்காளத் திங்கள் வெளியீட்டை வெளியிடத் தொடங்கினர். அதிலே பாடல்களும், சிறுகதைகளும், கட்டுரைகளும், புத்தக விமரிசனங்களும், அரசியலைப் பற்றியும் விஞ்ஞானத்தைப்பற்றியும் எழுதிய கட்டுரைகளும், அவ்வப்போது நிகழும் செய்திகளைப் பற்றிய குறிப்புக்களும் இடம்

பெற்றன. இவற்றில் ஏறக்குறைய சரிபாதிக்கு மேல் இவரே எழுதி வந்தார். "ஐரோப்பிய யாத்திரையின் தினசரிக் குறிப்பு" ஒன்றையும் அப்போது இவர் எழுதத் தொடங்கினர். இதவாதி என்ற வங்காளக் கிழமைத் தாளையும் கிருஷ்ணகமால் பட்டாச்சாரியார் என்பவரோடு சேர்ந்து கவிஞர் தொடங்கினர். 'அஞ்சல் நிலையத் தலைவர்' என்பது போன்ற சிறு கதைகள் பல, இதிலேதான் வெளியாயின. சாந்தி நிகேதனத்தில் பிரார்த்தனை மண்டபம் பிரதிட்டை யான போது அந்தக் கொண்டாட்டங்களில் இவரும் பங்குகொண்டார். 12—1—1892-ல் இவருடைய கடைசி மகளான மீரா அம்மையார் பிறந்தார். அப்போதுதான் இவர் "சித்ராங்கதா" என்கின்ற செய்யுள் நாடகத்தை எழுதி முடித்தார். அவனீந்திரநாதர் அதற்கு வேண் டிய ஓவியங்களை வரைந்து உதவினர்; அவருக்கே அந்நூலைக் காணிக்கை ஆக்கினர் கவிஞர் பெருமான்.

**நிலக் கண்காணிப்பு**

தம்முடைய குடும்பத்தின் சொத்தை மேற்பார்வை யிடும் வகையில் பலமுறை அக்காலத்தில் வடவங் காளத்தைச் சுற்றிக் கவிஞர் வரவேண்டியிருந்தது. இதன் பயனுக இதனைச் சுற்றியுள்ள மக்களின் வாழ் வோடு கவிஞர் நெருங்கிய தொடர்பு கொள்ளலானர். இவர்களிடத்தில் பெரியதோர் அன்பு கவிஞர் உள் ளத்தே பொங்கி வழிந்தது. பெரியவர்களாக இருந் தாலும் கடவுளின் துணையற்ற குழந்தைகளாகவே, குழந்தை மனத்தோடும் அவர்கள் வாழ்வதைக் கண்டு அதில் கவிஞர் ஈடுபட்டார். அவர்களுக்கு உணவில்லை என்ருல் அவர்கள் அழிவுறும் நிலையில் இருப்பதனையும், இயற்கை வறண்டபோது அழுவதன்றி வேறு ஒன்றும் செய்ய முடியாத அவர்கள் அவல நிலையையும், பசி யாறியதும் பழைய துன்பங்களையெல்லாம் மறக்கின்ற அவர்களின் கள்ளமில்லா மனப்பான்மையையும் உள்ள முருகப் பாராட்டிக் கவிஞர் எழுதியுள்ளார், பொறுமை

யும், அடக்கமும், குடும்பத்தில் அன்பும் கொண்டவர்கள் அந்த உழவர்கள் என்றும் அவர்களைக் கொண் டாடினார்.

### தொழிலுலகம்

"பெண் தொழிலாளிகள்", "வேலை வேட்டை" என்ற சிறந்த கட்டுரைகளைக் கவிஞர் அப்போது எழு தினார். தொழிலாளிகளிடையே எழுந்துள்ள பெரிய விழிப்பிலே கவிஞர் கொண்ட அக்கறையை இவை நன்கு விளக்குகின்றன. "முதற்கோணல்" என்ற நகைச்சுவை நாடகத்தையும் கவிஞர் எழுதினார். தமது 352 பாடல்களின் தொகுதியைத் தாகூர் 1893-இல் வெளியிட்டார். உணவின் தத்துவத்தைப் பற்றிய விவாதத்தில் இறங்கிப் பல கட்டுரைகளைத் தம் சாதனாவில் எழுதி வந்தார். "பொற்படகு" என்ற இவர் பாடல் தொகுதியும், 1894-இல் வெளிவந்தது. முன்னெழுதிய சிறு கதைகளின் தொகுதியொன்றும் அந்த ஆண்டில் வெளியாயிற்று.

### அடிப்படை ஆராய்ச்சி

இலக்கியக் குறிக்கோள்களைப் பற்றியும், இலக்கிய வெளிப்பாட்டின் தத்துவத்தைப் பற்றியும் தம் நண்பர் பலீத் என்பவரோடு கடிதங்கள் வழியே ஆராய்ந்து எழுதி வரலானார். இந்து மதத்தில் வரும் இலய தத்து வத்தைப் பற்றிக் கடுமையான வாதம் ஒன்றும் சாதனா வில் நிகழ்த்தி வந்தார். பிற்போக்கான புத்திந்து மறுமலர்ச்சிக் கூட்டத்தார் எனப் புதுமையாகத் தோன்றியவர்களை எள்ளி நகையாடி ஒரு பாடல் பாடி னார். சமஸ்கிருதம், வங்காளம், இந்தி என்ற மொழி களில் வரும் சொற்களின் ஒலி அமைப்பு நிலை, தொடரமைப்பு நிலை, இசை நிலை முதலியவற்றைப் பற்றி ஆராய்ந்து எழுதினார். இதுவே "பேச்சு ஒலியியலைப்" பற்றிக் கவிஞர் எழுதிய முதல் கட்டுரை யாகும். இவ்வாறு எல்லாம் பாட்டின் இசையையும்



அவனீந்தரநாதரைச் சித்திரங்களுக்கு ஓவியம் எழுதக் கவிஞர் கூறுதல்—1892 (பக்கம் 27)



1892—1893 சோதிரிந்திரரோடு கவிஞர்

UNIVERSITY EXTENSION LIBRARY MADURAI



கவிஞரின் மனைவியார் — மிருநளினிதேவியார்
(பக்கம் 43)



1904 சாந்திநிகேதனப்பள்ளியில் மோகித சந்திரசேனும்,

சந்தத்தையும் ஆராய்ந்து அவற்றில் ஈடுபட்டார். முதற் பாட்டை எழுதும்போதே ஒலியின் இனிமையில் ஈடுபட்டுப் பிரமரம் (வண்டு) என்ற சொல்லைப் பயன் படுத்தினுர் அன்ருே? இவ்வாறு எல்லாம் சுவைத்துச் சுவைத்து வங்காள மொழியின் இனிமையையும் உயிர்த்துடிப்பையும் வளர்த்து இன்றைய வங்காள மொழியைப் படைத்துத் தந்தார். கல்வி முறையைப் பற்றி ஒரு மாநாட்டில் கவிஞர் பேசிய கருத்துக்களைச் சாதனுவில் வெளியிட்டார்.

### தாய்மொழி வழிக் கல்வி

"தாய்மொழி வழியே பாடம் கற்க வேண்டும்" என்று கவிஞர் வற்புறுத்தினுர். இதனைப் பங்கிம் சந்திரர் முதலியோரும், பின்னர்க் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக வந்த குருதாச பானர்சியும் ஒப்புக்கொண்டனர் என்பதனை இங்கே குறிப்பிட வேண்டும். தாய்மொழிவழிக்கல்வி என்ற சிக்கல் இன்று பெரிதாக வளர்ந்துள்ளது. இதனைச் சென்ற நூற்றுண்டிலேயே கவிஞர் பெருமான் தெளிவாகத் தீர்த்துள்ளனர் என்றறிதல் வேண்டும்.

### சிறு கதையும் கருத்தாழமும்

இப்பொழுதுதான் அவரது தலைசிறந்த சிறு கதை யான "காபூலிவாலா" சாதனுவில் வெளியாயிற்று. பஞ்சபூத தினசரி என்ற ஆழ்ந்த கருத்துக்களின் கருவூலமான நூல், இப்பொழுதுதான் தொடங்கப் பெற்றது. வாழ்வு, இலக்கியம், கலை முதலியவற்றைப் பற்றிய சிறந்த கருத்துக்களை உள்ளத்தின் ஆழ்ந்த நிலையிலிருந்து தூண்டும் எண்ணங்களைக் கவிஞர் இந் நூலில் வெளியிட்டார்.

### வரைந்தபின் கவிதை

ஒரிசாவிலுள்ள கட்டக்கிலிருந்து படகிலேயே சென்று, பின் சகந்நாதத்தை அடைந்தார். பின் பூரியை

அடைந்து புவனேசுவரத்தில் உள்ள கண்டகிரி, உதயகிரி என்ற இடங்களைக் கண்டு அவற்றின் சிற்ப அழகில் ஈடுபட்டார். கல்கத்தாவுக்குத் திரும்பி மறுபடியும் ஷெலிதாவுக்குப் பயணமானார். தம்முடைய மன நிலைகளை வரைந்துகாட்ட முயன்றார். இம்முயற்சியில் ஈடுபட்டபின் முடிவாகக் கவி பாடுவதற்கே திரும்பினார். "விடைபெறும் சாபம்" என்பதை எழுதக் கவிஞர் தொடங்கினார்.

———

# III. அரசியல்

# 1. அமைதியிலிருந்து போராட்டத்திற்கு

## அரசியல்

"ஆங்கிலேயரும் பாரத மக்களும்" என்ற தம் புகழ் பெற்ற அரசியல் கட்டுரையை 1893 அக்டோபரில் பங்கிம்சந்திரர் தலைமையில் சாதனு நிலையத்தில் கவிஞர் படித்தார். "ஆங்கிலேயரின் அச்சம்" என்ற தலைப்பிலே இந்துக்கள் இசுலாமியரோடு ஒன்றுபட்டு நிற்கவேண்டியதன் இன்றியமையாமையை வற்புறுத்தினர். திலகர், அப்போது, இந்தியா முழுவதிலும் பசுவதைக்கு எதிரான கிளர்ச்சியைச் செய்துவந்தார். அப்போது தாகூரும் அதில் ஆழ்ந்து ஈடுபட்டார். "நீதியின் உரிமை" என்ற வீரக்கட்டுரையைச் சாதனுவில் வெளியிட்டார். இராம்மோகன் ராய் அவர்களின் சீடரான சுவீடன்நாட்டு ஹம்மர்கி(g)ரன் என்பாரைச் சாந்தி நிகேதனத்தில் வரவேற்றுர். "ஊர்வசி" முதலான பாடல்களை இப்போதுதான் கவிஞர் எழுதினர்.

## மக்கள் தொண்டு அழைக்கிறது

"இப்போது என்னைத் தள்ளிவிடு" என்ற சிறந்த பாடலையும் கவிஞர் இப்பொழுது தான் இயற்றினர். ஓய்வாகக் கவிபாடும் வாழ்க்கையிலிருந்து திரும்பிப் போராட்டமும் உண்மையும் மிகுந்த வாழ்வினுள் புகுந்து, கவிஞர் தம்முடைய வாழ்நாள் முழுவதையும் மக்களின் தொண்டிற்கே உரிமையாக்கவேண்டும் என வற்புறுத்தும் ஓர் உள் ஒளி அவர் உள்ளத்தே எழுந்தது. அந்நாளைய அரசியல் சிக்கல்களை விளக்கிச் சாதனுவில் அப்பொழுது கவிஞர் எழுதி வந்தார். பங்கிம்சந்திரரின் வரலாற்று நாவலான "இராசசிங்கம்"

என்ற நாவலைக் கவிஞர் விமர்சனம் செய்யும்போது தான், பங்கிம்சந்திரர் இறந்ததைத் தாகூர் அறிந்தார்; மனம் வருந்தினர். உடனே, தாகூரின் இளமைக் கவிகளுக்கு உள்ளொளி தந்து தூண்டிய பீகாரிலால் சக்கரவர்த்தி என்பார் இறந்த செய்தியையும் கேட்டு மனம் மிக வருந்தினர். கல்கத்தாவிற்கு வந்து பங்கிம் சந்திரரின் நினைவுக்கூட்டத்தில் பெரும்பங்குகொண்டு அந்த இலக்கியக் கலைஞருக்குச் சிறந்ததொரு வழிபாட்டைப் பாராட்டு வழியே செய்தருளினர்.

## குழவி இலக்கியம்

இப்பொழுதுதான், வங்காள மொழியிலே குழந்தைப் பாடல்களையும், நாடோடிப் பாடல்களையும் பற்றிக் கவிஞர் எழுதத்தொடங்கினர். இத்துறைகளை இதுவரையிலே நம் மக்கள் புறக்கணித்து வந்ததையும் சுட்டிக் காட்டினர்.

## சமுதாயம்

அந்நாளைய இந்து சமுதாயம் இழிவு மனப் பான்மையை (Inferiority Complex) வெளியிட்டு வந்ததைப் பலமுறையில் ஆழமாக ஆராய்ந்து, தம்முடைய மனஎரிவு எல்லாம் தோன்றச் சாதனவில் எழுதி வந்தார். கவிஞர், வங்காள சாகித்திய பரிஷத்தின் துணைத்தலைவரானர். சாதனவின் பதிப்பாசிரியர் பொறுப்பினை முழுவதும் ஏற்றுக் கொண்டார்.

## நாட்டுப் பற்று

கொழுந்து விட்டெரிரும் அவருடைய நாட்டுப் பற்றும், பிரிட்டிஷ் அதிகாரிகளின் செருக்கினை வெறுத்தெழுந்த அவர் சீற்றமும் "வெயிலும் நிழலும்" என்று அவர் எழுதிய கதையில் வெளியாயின. "அவமானத்துக்குக் கழுவாய்" என்ற கட்டுரையிலும் அவற்றைக் காணலாம். அப்போதப்போது வெளியான வங்காள நூல்களைக் கவிஞர் விமர்சனம் செய்து

வந்தார். அதன் வழியே வங்காள இலக்கிய ஆராய்ச்சியின் தரத்தை உயர்த்துவதற்குப் பெரிதும் கவிஞர் உழைத்து வந்தார். 1894-இல் நவம்பர் மாதத்தில் அவருடைய கடைசி மகன் சமீந்திரநாதர் பிறந்தார். கவிஞர் சாதனுவின் பொறுப்பை விட்டு விட்டார்; பின்னர் அதுவும் நவம்பர் 1895-இல் மறைந்தது.

### சுதேசத் தொழில்

கல்கத்தாவிலே சுதேசப் பொருள்களை விற்கும் நிலையத்திலும், சணல் வியாபாரத்திலும், முழுமூச்சோடு ஈடுபடத் தொடங்கினர்.

### மேலும் இலக்கியங்கள்

'பசித்தகற்கள்' என்பது முதலான சிறந்த சிறுகதைகளை 1895ல் இருந்து எழுதத் தொடங்கினர். சாகித்திய பரிஷத்துப் பத்திரிகையில், 1895-இல், வங்காள மொழியில் குழந்தைப் பாடல்களை எழுதி வெளியிட்டார். அரசியலைப்பற்றிக் கடுமையாக எழுதத் தொடங்கினர். "ஜீவனதேவதை" என்ற பாடலையும், "நதி" என்ற பாடலையும் இப்போதுதான் கவிஞர் எழுதினர். "கடைசி அறுவடை" என்ற தலைப்பில் உள்ள பாடல்களும் இப்போதுதான் எழுதப்பெற்றன.

### குடும்பம்

தாகூர், குடும்பச் சொத்துக்களின் பிரிவினை சம்பந்தமாக ஒரிசாவைச் சுற்றிவந்தார். அப்போதுதான் "மாலினி" என்கின்ற நாடகம் எழுதப்பெற்றது. அவருடைய பாடல்களின் முதல்தொகுதி 1896 செப்டம்பர்-அக்டோபரில் வெளியாயிற்று. அதன் பின்னர், தம் முள்ளத்தைக் கவர்ந்த பத்மா என்ற ஆற்றின் கரைக்கு, ஒரிசாவில் இருந்து கல்கத்தா வழியாகத் திரும்பினர். அவர் பாடலில் தோன்றும் இயற்கை இன்பம் இப்படி எல்லாம் வளர்ந்து வந்தது.

———

# 2. தாய்மொழி

## காங்கிரசும், தாய்மொழியும்

இந்திய தேசிய காங்கிரசின் 12-ஆம் மாநாடு கல்கத்தாவில் கூடியது. அப்போது அதற்கென "ஏ புவன மனமோகினி" என்ற பாட்டைக் கட்டிப் பாடினார். "கல்பனா" என்ற தொகுதிப் பாடல்கள் இப்போதுதான் இயற்றப்பட்டவை. "வைகுண்டரின் கையெழுத்துச் சுவடி" என்ற நகைச்சுவை நாடகமும் இப்போது உருவானதேயாகும். வித்தியாசாகரரின் பெருமையின் நினைவாகக் கூடிய கூட்டத்தில் அவர் பெருமையைப் பாராட்டி ஒரு கட்டுரை படித்தார். வங்காள மாகாண மாநாட்டிலும் கவிஞர் பங்கு கொண்டார். அதற்கு, வரவேற்புக் குழுவின் தலைவருடைய ஆதரவையும் கவிஞர் பெற்று இருந்தார். மாநாட்டின் நடவடிக்கைகள் வங்காளத்தில் தான் நடைபெற வேண்டும் என்று இவர் முயன்றார். இருந்தும் இவர் முயற்சி பயன்பெறாது போயிற்று. ஆங்கில மோகம் அவ்வாறு தலைவிரித்தாடியது. என்றாலும், 1897-இல் நிகழ்ந்த பெரிய பூகம்பம் காரணமாக, அந்த மாநாடு நடைபெறாமலே போயிற்று. கடவுளின் உள்ளம் இவ்வாறு வெளிப்பட்டது போலும்! "இலக்கிய மலர்ச்சி" "காந்தாரியின் முறையீடு" "உடன்கட்டை" "நரகவாசம்" "இலட்சுமியின் விசாரணை" முதலியவற்றைக் கூற்றும் விடையுமாக வரும் செய்யுள் நடையில் கவிஞர் எழுதினார். கவிஞரின் வாழ்நாள் நண்பரான சகதீசசந்திர போசு என்பவர் அப்போது ஐரோப்பாவிலே தம்முடைய விஞ்ஞானச் சோதனைகளைக் காட்டிக்கொண்டு வந்திருந்தார். அவருக்குத் தாகூர் ஊக்கத்தை விளைவிக்க ஒரு வாழ்த்துப்பாடலை அனுப்பியருளினார். தம் உடல்நலக் குறைவு காரணமாக ஓய்வுபெறக் கர்மதர் என்ற இடத்திற்குக் கவிஞர் சென்றார். அங்கும் உடல்நலம் முழுவதும் சுகப்படாமையால் சிம்லாவுக்குச்

சென்ருர் ; அங்கிருந்தும் கல்கத்தாவிற்குத் திரும்பி வந்தார். பாரதி என்ற பத்திரிகையின் பொறுப்பை யேற்றுக் கொண்டு உழைக்கலாயினுர்.

**கழுத்தை நெரித்தல்**

இந்திய துரைத்தனத்தின் பிற்போக்கான கொள்கையை வன்மையாகத் தாக்கிக் கவிஞர் பெருமான் எழுதத் தொடங்கினர். கேசரி என்ற பத்திரிகையிலே பால கங்காதர திலகர் எழுதிய கட்டுரைகளுக்காக அவரைக் கைது செய்ததைச் சீறிக் கவிஞர் எழுதினர் ; திலகர் நிதியும் திரட்டினர். புதிதாக வந்த இராசத்துரோக மசோதாவைக் கண்டித்துக் "கழுத்தை நெரித்தல்" என்ற கட்டுரையைக் கல்கத்தா நகர மன்றத்தில் படித்தார். பம்பாயில் எடுத்துக்கொண்ட அடக்கு முறை காரணமாக ராண்ட் என்பாரின் கொலையில் முடிந்த நிகழ்ச்சியைச் சுட்டிக் காட்டிக் கல்கத்தாவிலே பிளேக் என்ற கொள்ளை நோய் வந்தபோது துரைத்தனத்தாருக்கு எச்சரிக்கை செய்தார். சகோதரி நிவதீதா அம்மையாரோடு ஒத்துழைத்து, பிளேக்கில் வருந்துவார்க்குத் துணை செய்ய ஆக்க வேலைகளில் ஈடுபட்டுவந்தார்.

**மொழியும் அரசியலும்**

வங்காள மாகாண மாநாடு ஒன்று தக்காவில் கூடியது ; மாநாட்டுத் தலைவராகக் கவி சரணபானர்சி அமர்ந்தார்; அவர் தலைமையுரையைக் கவிஞரே வங்காளியில் மொழிபெயர்த்துப் படித்தார். வங்காள நாட்டைப் பிரிக்கின்ற அரசியல் சூழ்ச்சியையும், வங்காளம் அல்லாத மாகாணங்களாகிய அசாம், ஒரிசா முதலிய இடங்களில் வங்காள மொழி வழங்குவதனைப் பையப்பையத் தடுத்து அகற்றி வருவதனுல் ஏற்படும் பண்பாட்டு இடர்ப்பாட்டையும் விளக்கிக் கவிஞர் கண்டித்தார். "அரச சின்னம்" என்ற கட்டுரையில் நிலச்சுவான்தார்களில் சிலர் ஒருவரோடொருவர்

போட்டியிட்டுக்கொண்டு, ஆங்கிலோ இந்திய அதிகாரிக்கு நினைவுச்சின்னம் நாட்ட முன் வந்ததை எள்ளி நகையாடி எழுதி வந்தார். தினேச சந்திர சேன் எழுதி வந்த வங்காள இலக்கியத்தின் வரலாற்றைப் பாராட்டிப் பாரதியில் எழுதினார். குருடராய்ப்போன வங்காளக் கவிஞரான ஏமசந்திர பானர்சிக்கு நம் கவிஞர் நிதி ஒன்று திரட்டி உதவினார். நம் குறள் போலச் செய்யுள் வடிவான சூத்திரப் பாடல்களைக் 'கணிகா' என்ற தலைப்பில் கவிஞர் வெளியிட்டார். சணல் வியாபாரத்தில் நம்பிக்கைக்கு மாறாக நடந்த அலுவலாளர்களைத் தண்டிப்பதில் கடுமையாக இருந்தார். தாமே முழுப் பணப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டு அந்த வியாபாரத்தை நிறுத்திவிட்டார்.

### இலக்கியமும் மகளார் மணமும்

1900-இல் 'காதை' என்கின்ற பாடல்களை வெளியிட்டார். அதிலே இராசபுத்திரர், மராத்தியர், சீக்கியர் என்பவர்களின் வரலாற்றில் காணும் உயிர்ப் பலியையும் வேறு செயல்களையும் வருணித்து எழுதினார். கவிஞர் தம் காலத்து மக்கள் உள்ளத்தே, ஆழ்ந்த நாட்டுப்பற்றினையும், தங்கள் தேசத்தின் பழங் கதைகளில் தற்பெருமையையும் கொண்டு அவர்கள் தலை நிமிர்ந்து நிற்கவே இவற்றை எழுதினார். "கதைகள்" என்ற மற்றொரு நூலையும் எழுதினார். "கற்பனை" என்பதும் இப்பொழுது எழுதிய நூலே. 'கணிகா' என்பதும் இப்பொழுது எழுதப்பட்டது. இவருடைய முதல் மகளான மாதுரிலதாவைக் கவிஞர் பிகாரிலால் சக்கரவர்த்தியின் மகனான சரத்சந்திர சக்கரவர்த்திக்குத் திருமணம் செய்து முடித்தார்.

### இலக்கியத்திலும்

சமுதாயம் வாழவேண்டும் என்று அரசியலில் புகுந்த இவர், திட்டங்கள் வகுக்கலானார். தீமைகள் மறைய வேண்டும் என்று எண்ணினார். அந்த வகை

யில் எல்லாம் இவர் இலக்கியமும் உருக்கொள்வதாயிற்று. இவரது உடன்பிறந்தாரின் மகளாகிய சரளா தேவியார் அப்போது பாரதியின் ஆசிரியையாக விளங்கினர். அவ்வம்மையாரின் வேண்டுகோளுக்கிணங்கி நகைச் சுவையான நாடகம் ஒன்றைத் தொடங்கிப் “பிரம்மசாரிகள் சபை” என்ற தலைப்பில் எழுதித் தந்தார். அக்கால இளைஞர்களது பொறுப்பில்லாத போக்கை மறை முகமாகத் தாக்குவதே இதன் நோக்கம். மணம் செய்து கொள்ளாமல் வாழ வேண்டுமென்கின்ற அவ்விளைஞர்களுடைய எண்ணத்தை எள்ளி நகையாடினர். இரண்டு நாளில் அந்த நாடகம் எழுதி முடிந்தது. அதனை இரவும் பகலுமாக எழுதும்போது கதவைச் சார்த்திக் கொண்டு திரவப் பொருள்களையே உணவாய் உட்கொண்டு எழுதினராம். இதன் பயனுகக் கல்கத்தாவில் வந்து அதனைப் பதிப்பாசிரியரிடம் தருவதற்காக மாடிப் படியில் ஏறிச் சென்றபோது, களைப்பால் கீழே விழுந்தாராம். இதனை இலக்கிய நோன்பும் தியானமும் எனலாம்.

**நைவேத்தியம்**

நண்பர்கள் துணைகொண்டு பங்கிம் சந்திரர் கண்ட “வங்க தரிசனம்” என்ற பழைய திங்கள் இதழைப் புத்துயிர் பெற்று நடமாடச் செய்தார். 1901-இல் தாமே அதன் பத்திராதிபருமானர். பல அறிஞர்களும், எழுத்தாளர்களும் இவருடன் சேர்ந்து உழைத்தனர். கவிஞர், போ(B)யர் போரில் வெளியாகிய பிரிட்டிஷ் சாம்ராச்சியச் செருக்கினைக் கண்டித்து எழுதினர். பழையகால வாழ்க்கையின் இந்துமதக் குறிக்கோளையும் தத்துவத்தையும் செய்யுளிலே விளக்கி “நைவேத்தியம்” என்ற தலைப்பிலே எழுதினர். பின் தம்முடைய தந்தையார் மகரிஷி தேவேந்திர நாதருக்கு, ஒரே மூச்சாக அதனைப் படித்துக்காட்டினர், அப்பெரியார் அவரை வாழ்த்தியதோடு, அதனை வெளியிடுவதற்கு வேண்டிய பொருளையும் தந்துதவினர்.

### இந்தியப் பண்பாட்டு விளக்கம்

இந்தியப் பண்பாட்டினையும் மேனாட்டுப் பண்பாட்டினையும் செயற்கையே எனக் காட்டுவார் பெறும் தீய செல்வாக்குக்கு மிகமிக வருந்தினார். இந்தியப் பண்பாட்டின் வரலாற்று அடிப்படையை விளக்கினார்; குருட்டுத் தனமாக மேனாட்டினைப் பின்பற்றுவதனை எதிர்த்தார்; இந்தக் கருத்துக்களைத் தெளிவாகவே எழுதி வந்தார். ஆனால், மேல் நாட்டின் ஆற்றலையும் அவர் விளக்காமலில்லை.

### முதல் மனோதத்துவ நாவல்

“கண்ணோய்” என்ற அவருடைய நாவல் அப்போதுதான் தொடங்கியது. வங்காளத்திலே முதல் முதலாகத் தோன்றிய மனோதத்துவ நாவல் இதுவேயாகும்.

### குடும்பப் பொறுப்பு நீக்கம்

அவருடைய இரண்டாம் மகளான இரேணுகா அம்மையாரைச் சத்தியேந்திரநாத பட்டாச்சாரியாருக்கு மணம் செய்து தந்தார். தாகூர், குடும்பச் சொத்துக்களின் பொறுப்பை விட்டொழித்தார்.

# 3. சாந்திநிகேதனம்

## சாந்திநிகேதனம்

*1901*-இல் சாந்திநிகேதனத்தில் தம் குடும்பத்தோடு வாழ வந்தார். தம் தந்தையார் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டதற்கு இணங்க, 22—12—1901-இல் சாந்தி நிகேதனத்தில் "போல்பூர் பிரம்மச்சரிய ஆசிரமம்" என்பதைக் கவிஞர் ஏற்படுத்தினர். சாந்திநிகேதனம் முன்னெரு வனமாக இருந்தது; கொள்ளைக் கூட்டத் தினர்க்கு வாய்ப்பாக அமைந்திருந்தது. மகரிஷி தாகூர் ஒரு முறை இங்கே தங்க நேர்ந்தது. இரண்டே இரண்டு மரங்கள் இருந்தன. அவை ஏழிலைப்பாலை மரங்கள். அவற்றில் ஒன்றன் அடியில் மகரிஷி தியான சமாதி கூடினர். உடனே அந்த இடத்தை வாங்கினர். அங்கே தியானம் செய்வார் வந்து தங்குவர் என்று எண்ணினர். அதற்காக ஓர் அறக்கட்டளையையும் ஏற்படுத்தினர்; ஒரு கோயிலையும் கட்டினர். ஆனல், பூசாரியைத் தவிர வேறெருவரும் வந்தபாடில்லை. ஆதலின், தமது மகனர் அதனை ஆச்சிரமாக ஆக்க எண்ணியபோது அவருக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியைக் கூற வேண்டுமா ?

## புது முறை

பழைய இந்திய ஆச்சிரமங்களைப்போல் இது இயங்கவேண்டும் என்பதே கவிஞருடைய குறிக்கோள். இவரே மாணவர்களுக்குக் கற்பித்தார்; அவர்களுடன் விளையாடினர்; கதைகள் சொல்லி அவர்களை மகிழ்வித் தார். சுருங்கச்சொல்லின் அவர்களோடு ஒருங்கு வாழ்ந் தார் எனலாம். இதன் பயனக அவர்களுடைய மனத் திலே ஆழ்ந்ததோர் செல்வாக்கைச் செலுத்தி வந்தார் எனலாம். அவரோடு சகதானந்தராம் என்பாரும், ஆங் கில நாட்டவரான லாரென்சு என்பாரும், சிந்து தேசத் துக் கிறித்தவரான இரேவா சந்து என்ற பெயருடன்

வாழ்ந்து பின்னுளில் சுவாமி அனிமானந்தராக மாறிய பெரியாரும், பண்டித சிவதன வித்தியார்ணவரும் ஆசிரியர்களாக ஒத்துழைத்து வந்தனர். அப்போது அவருக்குப் பெரிய பண நெருக்கடி எழுந்தது. தமது மிகப்பெரிய குடும்பத்திலிருந்து வந்த தொகையை எல்லாம் சணல் வியாபாரத்தில் ஏற்பட்ட கடனுக்காகக் கொடுக்கவேண்டியதாயிற்று. அதோடு அந்த ஆச்சிரமப் பள்ளியை நடத்தும் செலவு வேறு மேல் ஓங்கியது. இதனுல், பூரியிலிருந்த கடற்கரை வீட்டையும், அவருடைய சிறந்த நூல் நிலயத்தையும் கவிஞர் விற்க வேண்டியதாயிற்று. அவருடைய மனைவியாரும் தம்முடைய ஆபரணங்களையெல்லாம், மகிழ்ச்சியுடன் கணவனுர்க்கு உதவினுர்கள். உபாத்தியாயர் பிரம்மானந்தரும், சாந்திநிகேதனப் பள்ளியில் உழைக்க வந்தார். சாந்திநிகேதனம் இடை இடையே இவர் வாழ்க்கைப்பாட்டின் பல்லவிபோல் இனி வந்து கொண்டே இருக்கும்.

**பத்திரிகைத் தொண்டு**

இத்தனை நெருக்கடிகளுக்கு இடையேயும் வங்க தரிசனத்தின் பதிப்பாசிரியர் வேலையையும் தவருமலே நடத்திவந்தார். "ஜான் என்ற சீனுக்காரனின் கடிதங்கள்" என்ற நூலை அப்போது லோவெஸ் டிக்கின்சன் என்பார் எழுதி வெளியிட்டிருந்தார். அந்த நூலினைப் பாராட்டி விமரிசனம் செய்யும்போது ஆசியாவின் ஒருமைக் கருத்துக்களைக் கவிஞர் விளக்கினுர். "வங்காள மொழி – வங்காள இலக்கியம் – இவற்றின் வரலாறு" என்ற ஒரு கட்டுரையையும் "இந்திய வரலாறு" என்ற ஒரு கட்டுரையையும் ஆலோசனு சமிதியின் வாரக் கூட்டங்களில் படித்து விளக்கினுர்.

**கர்சன் பழி**

கல்கத்தாப் பல்கலைக் கழகத்தின் பட்ட விழா உரையில், கீழை நாட்டு மக்கள் எல்லாம் நம்பத் தகாதவர்

கள் என்று கர்சன் தாக்கிப் பேசியிருந்தார். இதனை எதிர்த்து, நாடு முழுவதிலும் கிளர்ச்சி எழுந்து கொந்தளித்தது. இந்த எதிர்ப்பில் தாகூரும் ஈடுபட்டார். தென்னுப்பிரிக்காவிலுள்ள போ(B)யர்களுக்கு எதிராக ஆங்கிலேயர்கள் நடத்திய பொய்ப் பிரசாரத்தைப் பற்றி ஹெர்பெட் ஸ்பென்சர் என்பார் எழுதியிருந்த எழுத்துக்களைக் கொண்டே கர்சன் கூற்றைக் கடுமையாகத் தாக்கினுர் கவிஞர் பெருமான்.

**கையாறு**

ஆனுல், கவிஞருக்குத் துன்பமும் வருத்தமும் மேலும் மேலும் தொடர்ந்து வருவன ஆயின. அவருடைய மனைவியார் மிக மிக நோய்வாய்ப்பட்டுக் கிடந்தார். எனவே, அவ்வம்மையாரைக் கல்கத்தாவுக்ுக் கொண்டுவர வேண்டியதாயிற்று. 23–11–1902-இல் அவ்வம்மையார் இந்த உலகை விட்டு மறைந்தார். தம்முடைய இள மக்களான பதினுன்கு வயதும் நிரம்பாத இரதீந்திரநாதருடனும், பத்து வயதும் நிரம்பாத மீராவுடனும், எட்டு வயதும் நிரம்பாத சமீந்திர நாதருடனும் சாந்திநிகேதனத்துக்கு வருத்தத்துடன் திரும்பினுர். "நினைவு" என்ற தலைப்பில், அவ்வம்மையாரின் நினைவாக, உள்ளத்தை உருக்கும் பாடல்களைக் கவிஞர் பாடினுர். வங்காள இளைய கவிஞரான சதீச சந்திர ராயர், சாந்திநிகேதனத்தில் ஒரு ஆசிரியராக அப்போது வந்து சேர்ந்தார். தாகூரின் இரண்டாவது மகளான இரேணுகாவும் திடீர் என்று நோய்வாய்ப்பட்டார். கவிஞர் அவரை அசாரிபாகுக்கும், அல்மோராவுக்கும் கொண்டு செல்ல வேண்டியதாயிற்று. இங்குத்தான் "குழந்தை" என்ற தலைப்புடைய பாடல்களைக் கவிஞர் இயற்றினுர். கவிஞர், தாயற்ற சமீந்திரனை, இந்தப் பாடல்களைப் பாடியே, மகிழ்வித்து வந்தார். விடமுடியாத அலுவல் காரணமாகச் சாந்திநிகேதனத்துக்குக் கவிஞர் ஓடி வர வேண்டியதாயிற்று. அங்கே இரேணுகாவின் ஆபத்தான நிலையைக்

கேட்டதும் அல்மோரா சென்றார். வழியில் சில இடங்களில் கால்நடையாகவே அவர் நடக்க வேண்டிய தாயிற்று. அம்மையாரைக் கல்கத்தாவுக்குக் கொண்டு வந்தார். இங்கிலாந்துக்குப் போயிருந்த தம் மருமகனைத் தந்தியடித்து வரவழைத்தார். ஆனால், தாய் மறைந்த ஆறு மாதங்களுக்கு உள்ளாகவே இரேணுகாவும் இவ்வுலகை விட்டுத் தாயைச்சென்று சேர்ந்தார்.

## இலக்கியப் பொறுப்பு

இருந்தாலும், தம்முடைய பதிப்பாசிரியர் பொறுப்பினைத் தொடர்ந்து தாங்கி நடத்தியே வந்தார். வங்க தரிசனத்தில் "சிதைவு" என்ற ஒரு நாவலைத் தொடர்ந்து எழுதிவந்தார்.

## அரசியல் ஆராய்ச்சி

"இராச குடும்பம்", "அடிக்கடி", "தரும போதனைத் திருட்டாந்தம்" முதலிய அரசியல் கட்டுரைகளையும் கவிஞர் எழுதினார். "அநியாயத்தையும் பலாத்காரத்தையும் பலாத்கார வகையிலும் எதிர்ப்பதே மனிதனுடைய தெய்விக உரிமை" என்பதை அவற்றில் இவர் வற்புறுத்தினார். "தர்ம மத பிரசாரம்" என்ற தம் கட்டுரையை அவர் படித்த பொழுது, பிரம்ம சமாசத்தினர் எல்லாம், தங்களுடைய பிரசார இயக்கத்திற்கு ஓர் எதிர்ப்பே இக்கட்டுரை என்று நினைத்துத் திகைத்தனர்.

## சாந்திநிகேதனத்தில் கலக்கம்

சதீச சந்திரராய் என்பவர் சாந்திநிகேதனத்தில் வந்தது கண்டோம். அவர் 1—2—1904-இல் பெரியம்மையால் இறந்தார். இது ஒரு பெரிய இடி. பள்ளியை ஷெலிதாவுக்கு மாற்ற வேண்டியதாயிற்று. நல்ல காலமாகப் பேராசிரியர் மோகித சந்திர சேன் என்பார் ஆசிரியராகச் சாந்திநிகேதனப் பள்ளியில் வந்து சேர்ந்தார்.

**கவித்தொகுதி**

தாகூரின் கவித்தொகுதிகள் ஒன்பது பிரிவாக வெளிவந்தன. மேல்நாட்டைப் பின்பற்றியே, நம் நாட்டில் இயங்கும் நாட்டுப் பற்றின் போக்கினை எதிர்த்து, வங்க தரிசனத்தில் எழுதலானுர். ஜுலை 22-இல் "சுதேச சமாசம்" என்ற கட்டுரை எழுதினுர்; அதில் ஆக்கவேலையில் ஈடுபடும் தேசீயமே நாட்டுக்கு வேண்டியது என்ருர். இந்த உண்மையைக் காந்தியடிகளுக்கு முன்பாகவே வற்புறுத்திஞர் கவிஞர். இதனைப் பின்பற்றி ஒரு திட்டமும் வெளியிட்டார்: இந்து சமுதாயம் கிராமத்தையே நடுவாகக் கொண்டு, தன் கையே தனக்குதவி என்ற அடிப்படையில் திருத்தி அமைக்கப் பெறவேண்டும்; மக்களின் வறுமையை ஓட்ட ஊழியர்களின் கூட்டுறவு கொண்டே குடிசைத் தொழில்களை உயிர்ப்பிக்க வேண்டும்; சமுதாயத்தில் மதச் சடங்குகளில் வீணுகும் செலவைக் குறைக்கும் தொண்டர்கள் கூட்டத்தை நிலைநாட்ட வேண்டும்; இந்து முசுலீம் ஒற்றுமையை அன்புநெறி வழியே வளர்த்து வரவேண்டும். 'சமாசபதி'யின் தலைமையிலே இவ்வாறு சமுதாயம் இயங்கி வருவதற்கு ஒரு திட்டம் அமைத்தார்.

**சிவாஜி விழா**

மகாராட்டிர சாம்ராச்சியத்தை நிலைநாட்டிய சிவாஜியின் நினைவை நிலைபெறுவிக்கக் கல்கத்தாவில் தோன்றிய இயக்கத்திலும் ஈடுபட்டார் கவிஞர். சிவாஜி திருவிழாவும் நடைபெற்றது. சிவாஜியைப் பற்றித் தாம் எழுதிய கவிதையையும் அதில் கவிஞர் பாடிஞர். அந்தத் திருவிழாவிலே பவானி தேவியைப் பொது இடங்களில் வழிபடுவது இந்துக்கள் அல்லாதாரது வெறுப்புக்கே இடமாகுமென அதனைத் தடுத்தார்.

**நேர்முறை**

பல பாடப்புத்தகங்களைப் பள்ளிக்கெனவே கவிஞர் எழுதிஞர். "ஆங்கிலசோபானம்" என்ற நூலில் முதல்

முதலாக நேருக்கு நேராக ஆங்கிலம் கற்கும் முறையை (Direct Method) வங்காளத்தில் இவரே புகுத்தினர்.

### மகரிஷி மறைவு

*19—1—1905*-ல் இவருடைய தந்தையாரான மகரிஷியார் இவ்வுலகைவிட்டு மறைந்தார்.

### நூல்களை விற்ருர்

இம்மறைவிற்குச் சில காலத்திற்கு முன்தான், கவிஞர் தம்முடைய கதைகளையும், மூன்று நாவல்களையும், ஆறு நாடகங்களையும், பாடல்கள் அனைத்தினையும், கட்டுரைகளையும் 2,000 ரூபாய்க்கு விற்று ஒழித்தார். இதவாதி என்ற வாரத்தாளை நடத்தியவர்கள் இதனை வாங்கினர்கள்; வாங்கி "இரவீந்திர கிரந்தாவளி"யென 1890 பக்க அளவில் வெளியிட்டார்கள்.

———

# 4. வங்காளப் பிரிவினை

## வங்காளப் பாடப் புத்தகம்

அப்போது துரைத்தனத்தார் ஏற்படுத்திய கல்விக் குழு ஒன்று, மூன்று ஆங்கிலேயரும் ஒரு இந்தியரும் கூடி அமைந்தது. அது ஒரு முடிவு செய்தது. பிரிவு மனப்பான்மையில் எழுந்த முடிவு அது. நான்கு வட்டாரப் பேச்சு மொழிகள், வங்காள மொழிகளாக வழங்கினவாம். இதற்கு ஏற்ப வங்காளப் பாடப்புத்தகங்களையும் நந்நான்காக எழுதி வெளியிடவேண்டும் என்பதே அவர்கள் முடிவு. இதன் கொடிய உட்கருத்தை அறிந்த கவிஞர் இதனை வன்மையாகக்கண்டித்தார்.

## பந்தர்

1905-இல் பந்தர் என்ற வங்காளத் திங்கள் வெளியீட்டின் பதிப்பாசிரியராகத் தொண்டாற்றத் தொடங்கினார். அந்நாளைய சிக்கல்களை அலசி ஆராய்வதற்கு அப்பத்திரிகை முன் வந்தது. "பொது மக்களோடு தொடர்பு கொள்வது எவ்வாறு?" என்பதைப் பற்றியும் அப்போது கவிஞர் ஆராய்ந்தார். திரிபுரா சாகித்திய சம்மேளனத்தின் அழைப்புக்கு இணங்கி அங்கே சென்று "தேசீய இராச்சியம்" என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று படித்தார். அதில், அவர், இந்திய அரசர்கள், நாட்டுக் கலையையும், கைத்தொழிலையும் ஆதரிக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டார்; வெளிநாட்டிலிருந்து வரும் ஆரவாரப் பொருள்களை ஒதுக்கித் தடுக்க வேண்டும் என்றும் வேண்டிக்கொண்டார். இவ்வாறு தெளிவாக அவர்களின் கடமையை வற்புறுத்தினார் கவிஞர்.

## கலைப் பள்ளி

ஹாவலும், அவநீந்திரநாத தாகூரும், முன்வந்து வங்காள இந்தியக்கலைப் பள்ளிக்கூடத்தினை நிலை

நாட்ட முயன்றனர். சகோதரி நிவதீதா அம்மையாரோடு தாகூரும் இதில் ஒத்துழைத்தார்.

**கைத்தொழில்**

கல்கத்தாவிலும் பிற இடங்களிலும் சிறப்பாகத் தம்முடைய சொத்துக்கள் இருந்த இடங்களில் எல்லாமும் நெய்தல் தொழிலைக் கற்பிக்கும் பள்ளிகளையும் கைத்தறிகளையும் நிலைநாட்டி, நாட்டிற்குச் சிறந்த தொண்டாற்றினர். " அரசனோடு குடிகள் " என்ற கட்டுரையில் சாம்ராச்சியத்தின் பொருளாதாரச் சுரண்டற் கொள்கையை மிகத் தெளிவாக ஆராய்ந்து வெளியிட்டார்.

**பள்ளிக்கு ஓராசிரியர்**

அசித சக்கரவர்த்தி என்பார் சாந்திநிகேதப் பள்ளியில் ஆசிரியராக வந்து சேர்ந்தார்.

**பிரிவினையும் சுதேசியமும்**

கல்விக் குழு, பிரிவினை மனப்பான்மையோடு வங்காளப் பாடப்புத்தகங்களை அமைக்க முயன்றதனை முன்னரே குறிப்பிட்டோம். இது ஒரு பெரிய சூழ்ச்சி. இதனைப் பின்பற்றி, வங்காளத்தை இரு பிளவாகத் துண்டாடுவதென வைசிராயான கர்சன் முடிவு செய்தார். பொதுமக்களது ஒன்றுபட்ட எதிர்ப்பினையும் பொருட்படுத்தாது அவர் இவ்வாறு முடிவு செய்தார். இதனை எதிர்த்துப் பிரிட்டிஷ் சாமான்களை வாங்காது ஒழிப்பது என்று முடிவு செய்ய வேண்டும் எனப் பலர் விரும்பினர். இவ்வாறு எதிர்ப்பதற்கு எனக் கூடிய பொதுக்கூட்டத்தில் " இக்கட்டான நிலையும் அதனைத் தீர்க்கும் வழியும் " என்ற கட்டுரை ஒன்று எழுதிக் கவிஞர் படித்தார். விபினசந்திரபாலர் நடத்திவந்த " நவ இந்தியா " என்கின்ற ஆங்கில வாரப் பத்திரிகையின் சார்பினர் கூட்டிய கூட்டமாகும் இது. கிராமங்களைத்

திருத்தி அமைத்து, ஆக்க வேலையே நோக்கமாக வகுக்க வேண்டிய ஒத்துழையாமைத் திட்டத்தை மக்களுக்குச் . சுட்டிக்காட்டியதோடு, தாமும் இவ் வியக்கத்தில் இடைவிடாது உழைக்க முன் வந்தார் கவிஞர். கொழுந்து விட்டொளிரும் அவரது நாட்டுப் பற்று இப்போது பலப்பல தேசீய கீதங்களாக வெளி வரலாயிற்று. பெரிய பெரிய கூட்டங்களில் அடுத்து அடுத்துப் பேசித் தம்முடைய சொற்களின் மூலம் எழும் மந்திர சக்தியால், மக்கள் உள்ளத்தைக் கவிஞர் கவர்ந்தார். கவிஞர், சுதேச இயக்கத்தின் தலைவராய்த் "தேசீயம்" என்ற புதிய நற்செய்தியை விபின சந்திர பாலரோடும், அரவிந்தரோடும் சேர்ந்து தேசம் எங்கும் பரப்பி வந்தார்.

### மக்கள் எதிர்ப்பு

வங்காளப் பிரிவினை எதிர்ப்பு நாளை 16-10-1905-இல் கொண்டாடினர். எதிர்ப்புக்குக் காப்புக்கட்டிக் கொள்ளும் சடங்கைக் கவிஞரே தொடங்கினர். வங்காளத்தின் மறையாத ஒற்றுமையைக் காட்டும் அறிகுறியாகும் அது. ஆண்டவனுடைய திரு வருட்பார்வை வங்காளத்தின் மேல் படவேண்டு மென்று வேண்டிக்கொள்ளும் ஒரு காப்புப்பாடலைக் கவிஞர் அப்போது பாடினர். எல்லோரும் அப் பாடலைப் பாடிக்கொண்டு வர, அப்பெரிய ஊர்வலத் தின் முன்னணியில் சென்று கவிஞர் கங்கையில் மூழ்கினர். இவ்வாறு சடங்கை முடித்தார். அன்று எந்த வீட்டிலும் சமையல் ஆகவில்லை; கல்கத்தாவில் ஒரு கடையும் திறக்கப்படவில்லை. அன்று மாலை கூடிய கூட்டத்தில் தலைவரின் பேச்சை வங்காளத்தில் மொழி பெயர்த்தார் தாகூர். கூட்டம் முடிந்ததும் நகரின் தெருக்களின் வழியே ஊர்வலத்தைத் தம் தலைமையிலேயே கவிஞர் நடத்திச் சென்றார். "கடவுள் எங்களை ஒன்றாகக் கட்டிய கட்டினைப் பிரிக்க முடியும் ஆற்றல் உனக்கு உண்டோ?" என்ற பாடலைப் பாடிக்

கொண்டே ஊர்வலத்தில் தலைமைபூண்டு சென்றார். அதன் முடிவில் பெரும் கூட்டத்தின் முன், எல்லோரும் மனம் உருகப் பேசினார்; அப்போதே தேசீய நிதிக்கு ரூபாய் 50,000 திரட்டினார்.

## தேசீயக் கல்வி மலர்தல்

வங்காளத் துரைத்தனம் அரசியல் கூட்டங்களில் மாணவர்கள் கலந்துகொள்ளக் கூடாது என்றது; வந்தேமாதரம் என்ற பாடலைப் பாடக் கூடாதென்றது; அப்படிச் செய்தால் தண்டனைக்குள்ளாவார்கள் என்றும் விதித்தது. இச்சுற்றறிக்கையைக் கண்டனம் செய்து கவிஞர் பல கூட்டங்களில் பேசினார். சதீச சந்திர முகர்சி கண்ட மாணவர் சங்கமாகிய 'விடியற் கழக'த்தின் மாபெரும் கூட்டங்களில் கேட்போர் உள்ளம் உருகக் கவிஞர் பேசி வந்தார். தேசீயக் கல்விக் குழு ஒன்றினை வங்காளத்தில் அமைப்பதில் இவர் முன்னின்றார். அரசியல் காரணமாகக் கல்வி நிலையங்களிலிருந்து துரத்தப்பட்ட மாணவர்களுக்குத் தேசீயப் போக்கில் கல்வியை இந்தக் குழுவின் மூலம் கவிஞர் கற்பிப்பதற்கும் பாடுபட்டார். ஜார்ஜ் மன்னர் இளவரசராக வருவதனை இந்திய தேசீய காங்கிரசு, கோகலேயின் தலைமையில் வரவேற்க வேண்டும் எனத் தீர்மானித்தது; அதனால் எழுந்த சிக்கலை "இராச பக்தி" என்ற தலைப்பிலே தெள்ளத் தெளியக் கவிஞர் ஆராய்ந்தார்.

## கெடுபிடியும், வீரமும்

எதிர்ப்புக்கிடையேயும் கிழக்கு வங்காளம் புதிய மாகாணமாகப் பிரிந்தது. அதன் கவர்னர் பல இடங்களிலும் போலீசுக் கெடுபிடி நடத்தினார். இந்தக் கொடுமைக்குப் பலியாயினர் பலர். இவர்கள் வீரத்தைப் பாராட்டி 1906 மார்ச்சில் கவிஞர் எழுதினார். ஆனால், மேல்நாட்டுக் கலையில் கவிஞர் வெறுப்புக் கொள்ளவில்லை. உழவுக் கலையைப் பயிலத் தம்முடைய மூத்த

மகனுரான இரதீந்திர நாதரை அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தார்.

**மாநாடுகள்**

வங்க சாகித்திய சம்மேளனத்தின் முதல் மாநாடு கூடுவதாக இருந்தது. அதோடு பர்சாலில் மாகாண அரசியல் மாநாடும் நடப்பதாக இருந்தது. இந்த இரண்டு மாநாட்டிலும் கவிஞர் பெருமானே தலைமை பூண வேண்டி அவருக்கு அழைப்பு வந்தது. ஆனுல் அரசியல் நிலைமை காரணமாக இரண்டு மாநாடுகளும் கொண்டாடப் பெருமல் கைவிடப்பட்டன. கவிஞர் வங்க தரிசனத்தின் பதிப்பாசிரியர் பொறுப்பினைக் கைவிட்டார்.

**தலைமை**

சுரேந்திரநாத பானர்சி அவர்களே தனித் தலைமை பூண்டு தேசீய இயக்கத்தை நடத்த வேண்டும் என்பது கவிஞரது பேரவா. அதற்காக எல்லோரும் ஒரு முக மாக அவரைத் தலைவராக ஒப்புக்கொள்ள வேண்டு மென்று கவிஞர் மன்றுடினுர். வங்காள அரசியலில் 'மிதவாதிகள்' என்றும் 'தீவிர வாதிகள்' என்றும் ஏற்பட்ட பிளவைக் கண்டு தாகூர் பெரிதும் வருந்தினுர். போராட்டத்தின் போது அரசியல் பயிற்சி பெற்ற சிறந்த தலைவர் வேண்டுமென்று வற்புறுத்தினுர். பொது மக்களின் ஒழுங்கு முறை வளர்ந்தால் தான் வெற்றி காண முடியும் எனக் கவிஞர் உணர்ந் திருந்தார். ஒரு தனித் தலைவரோடு ஒத்துப்போகும் முறையில், இந்த ஒழுங்கு முறையை வளர்க்கவே கவிஞர் முயன்ருர்.

**கல்வி**

கவிஞர் தேசீயக் கல்விக் குழுவிற்காக நிலையான ஒரு வேலைத் திட்டத்தை அமைக்கும் தொண்டை மேற் கொண்டார். அதன் பயனுகக் கல்விச் சிக்கலைப்பற்றிய

ஒரு கட்டுரையைப் பொதுக்கூட்டத்தில் படித்தார்; அதனோடு நில்லாமல் தொடர்ந்து பல கட்டுரைகளை யும் எழுதினார். 'கேயா' என்ற பாடல்களைச் சகதீச சந்திரபோசு அவர்களுக்குக் காணிக்கை ஆக்கினார். 'சசாதீய சிட்சா பரிஷத்து' என்ற தேசீயக் கல்வி மன்றத்தின் முதல் கூட்டத்தில் முன்னணியில் நின்று கவிஞர் தொண்டாற்றினார். அதன் ஆதரவில் இலக்கியத்தின் எல்லையினையும், தொண்டினையும் விளக்கினார்.

# 5. போராட்டத்திலிருந்து அமைதி

**கூட்டங்கள்**

*1906* டிசம்பரில் கல்கத்தாவில் காங்கிரசுப் பொதுக் கண்காட்சி நடந்தது. அதிலே தாகூர் பேசினர். பவன்பூரில் கூடிய இலக்கிய மாநாட்டிலும் பேசினர். அடுத்த ஆண்டு வங்க சாகித்திய சம்மேளனம் கூடிய போது அதற்குத் தாகூரே தலைமை பூண்டார்.

**அரசியல் துறவு**

தேசீய இயக்கம் சென்ற போக்கினை இவர் மனம் ஒப்பவில்லை. அரசியல் பூசல்களில் களைத்துப் போயினர்; இந்துக்களுக்கும் இசுலாமியர்களுக்குமிடையே பகைமை வளர்ந்தது கண்டு மனம் கலங்கினர். அவருடைய இயல்பான மனப்போக்கும் இந்தப் போராட்டங்களில் ஈடுபட மறுத்தது. அங்கிருந்து தப்பியோடி அமைதி தேடவே சாந்திநிகேதனம் சென்றார். "நோயும் மருந்தும்" என்ற தலைப்பில், அக்காலத்தில் எழுந்த மக்களின் பொதுவான அரசியல் சிந்தனைப் போக்கின் நின்றும், தாம் வேறுபடுவதைக் கவிஞர் வற்புறுத்தினர். அவர் உண்மையான மனமாற்றமும் உள்ளூர விளங்கும் மனத் தூய்மையுமே வேண்டி நின்றார். உண்மையான விடுதலையை அடைய வேண்டுமானல், தீவிர சமுதாயத் திட்டத்தை முழுக்க முழுக்க ஒப்புக்கொண்டே தீர வேண்டுமென அவர் வற்புறுத்தினர். அரசியல் நிகழ்ச்சிகளிலிருந்து இவ்வாறு இவர் திடீரென விட்டுப்போனதைப் பலர் கடுமையாகக் கண்டித்தனர். இவர் எழுதிய கட்டுரைக்கு இவருடைய நண்பர் ஒருவரே கண்டனம் எழுதும் அளவுக்கு நிலைமை முற்றியது.

**படைப்பாற்றல் விளக்கம்**

ஆனல், இதுதான் அவருடைய படைப்புத் திறம் விளங்கும் வாழ்வில், வளம் கொழிக்கும் காலம்

என்று கூறலாம். சாவாத அமர இலக்கியங்களை உலகிற்கு அவர் தந்த காலம் அது. "அரவிந்தரே! இரவீந்திரன் உம்மை வணங்குகிருன்" என்ற பாடல் கவிஞர் பாடியது. அரவிந்தர் இராச துரோகக் கட்டுரை எழுதியதற்காகக் குற்றம் சாட்டப் பெற்ற பொழுது, இப்பாடலைப் பாடி அரவிந்தரைக் கவிஞர் புகழ்ந்தார்.

### இல்லறக் கடமை

இவற்றிற்கிடையே இவருடைய இல்லறக் கடமைகளும் நிறைவேறலாயின. தம்முடைய கடைசி மகளான மீரா அம்மையாரை நாகேந்திரநாத கங்கூலி என்பாருக்கு மணம் செய்வித்துத் தம்முடைய மருமகப் பிள்ளையையும் உழவுக் கலையைப் பயில அமெரிக்காவுக்கு அனுப்பினுர்.

### வள்ளல்

புதிதாகத் திரட்டிய தம்முடைய உரைநடை நூல்களின் பதிப்பின் வருவாயினைச் சாந்திநிகேதனப் பள்ளிக்கே நன்கொடையாகக் கொடுத்து உதவித் தாகூர் பெருமானுர் புகழ் பெற்ருர்.

### துன்பத்திலும் இலக்கியம்

இந்தத் தறுவாயில் திடீரென 1907 - நவம்பரில் அவருடைய கடைசி மகனுரான சமீந்திரநாதர் வாந்திபேதியால் உலகத்தை விட்டு மறைந்து விட்டார். என்னே துன்பம்! இருந்தாலும் பிரவாசி என்ற மாசிகையில் தம்முடைய தலை சிறந்த நாவலான "கோரா" வைத் தொடர் கதையாக எழுதிவந்தார். வங்காள அரசியல் மாநாட்டின் தலைவராகத் தொண்டாற்ற அழைக்கப் பெற்ருர் தாகூர். தம்முடைய தலைமை உரையை வங்காளத்திலேயே நிகழ்த்தினுர். தாய் மொழி வழியேதான் நாடு உயரும் என்பதனை இவர் என்றும் மறந்ததே இல்லை.

### ஆக்கநிலைத் தொண்டு

சூரத்துக் காங்கிரசு பிளவு பட்டு நின்றதால் எழுந்த உணர்ச்சிக் கொந்தளிப்பினிடையே இம்மாநாடு கூடியது. இந்தத் தலைமை உரையில் ஆக்க நிலைத் தொண்டினைச் செய்யுமாறு மக்களைக் கவிஞர் கூவி அழைத்தார். நம் நாட்டு இளைஞர்கள் படை படையாகத் திரண்டு, கிராமத்தாரிடையே சென்று, தொண்டாற்றவேண்டும் என்றார்; பயன்படும் வேலைகளில் உழைக்கவேண்டும் என்றார்; இந்துக்களையும், முசுலீம்களையும் ஒன்றுபடுத்த வேண்டுமென்றார்; ஊர்களில் சாலைகள் போடுவதிலும், பள்ளிக்கூடங்கள் நடத்துவதிலும், குடிநீர் வசதி பண்ணுவதிலும் ஒத்துழைக்க வேண்டுமென்றார். இவை கவிஞர் வற்புறுத்திய ஆக்க நிலைத் தொண்டுகள். காந்தியடிகளுக்கு முன்னரே ஆக்க நிலைத் தொண்டினைக் கவிஞர் வற்புறுத்தி வந்தார் என்பதனை நினைவிற்கொள்ளவேண்டும்.

### மறப்போர்

1908 ஆம் ஆண்டு மார்ச்சு 30 இல் முசபர்பூரில் 'பாம்' எறியும் பயங்கர விடுதலை மறப்போர் இயக்கம் தொடங்கியது. இந்தத் துன்ப இயல் நாடகத்தைப் பற்றி "வழியும் வகையும்" என்றொரு கட்டுரையை எழுதிப் படித்தார். மணிக்தோலாவின் அருகே இரண்டு வெடிகுண்டு செய்யும் தொழிற் சாலைகள் கண்டுபிடிக்கப் பட்டன. வரேந்திரகுமார போசும் அவருடைய கூட்டாளிகளும் சிறையானார்கள். இந்தத் திடுக்கிட்ட செயல்களில் என்ன கண்டார் கவிஞர்? துரைத்தனத்தார் செய்து வந்த அடக்குமுறையின் விளைவையே இவை காண்பிப்பதாகத் தாகூர் கூறினார். இயற்கையாகப் பொறுக்க முடியாத நிலை எழும்போது இவ்வாறு சாவில் முட்டிக் கொண்டு தம் உணர்ச்சியை வெளியிடுவதனைப் பற்றி மக்களிடையே எச்சரிக்கை செய்தார். இருந்தாலும், 'வங்காளிகள் கோழைகள்' என்ற கெட்ட பெயரை அறவே நீக்கத் தம்முடைய ஆவியையே பலிகொடுக்க

வந்தஇந்த இளைஞர்களின் தந்நலமில்லாத தியாகத்தைப் பாராட்டினர். "தூய வழி" என்ற கட்டுரையில் இந்து முசுலீம் கோளாற்றை, மூன்ருவது கூட்டத்தாரே உள்புகுந்து தொடங்கி வளர்த்து வருவதனை ஆராய்ந்து விளக்கினர்.

### சமயமும் இலக்கியமும்

சாதாரண பிரம்ம சமாசத்தின் கூட்டத்தில் கூடிய மாணவர்களிடையே, கிழக்கும் மேற்கும் இந்தியாவில் கூடியதொரு வரலாற்று உண்மையின் ஆழத்தை எடுத்து விளக்கினர். 1908-இல் "சரதோற்சவம் அல்லது இளவேனில் திருவிழா" என்ற மிகச் சிறந்த நாடகத்தைப் படைத்தார். சாந்திநிகேதனத்து மாணவர்களோடும், ஆசிரியர்களோடும் தாமும் சேர்ந்து அதனை நாடகமாக நடத்தினர். அதிலே தாமே துறவி வேடம் தாங்கி நடித்தார். அவருடைய பழைய நண்பரான ஸ்ரீ சந்திர மசும்தார் இறந்தது அவர் மனத்தைக் கலக்கியது. சாந்திநிகேதனத்தில் பல பிரார்த்தனைப் பேச்சுக்கள் பேசியதோடு "வங்காள இலக்கியத்தின் எழுத்தாளர்கள்" என்ற தலைப்பில் தம்முடைய் சுய சரிதையையும் எழுதிவந்தார்.

### விளக்கமில்லையா ?

தாகூருடைய எழுத்துக்கள் எல்லாம் விளக்கம் இல்லாதன என்றும் ஒழுக்கக் கேட்டை விளைவிப்பன என்றும் கூறி இராய் என்றவர் இலக்கிய ஆராய்ச்சி உலகிலேயே ஒரு ஆரவாரக் குழப்பத்தைக் கிளப்பி விட்டார். தாகூரோ இதனைப் பொருட்படுத்த வில்லை. ஆனால், வங்க தரிசனத்தின் பதிப்பாசிரியர் கவிஞரைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இராய் என்பாரின் ஆராய்ச்சியைப் பற்றித் தம்முடைய கருத்தைத் தெரிவித்தார். "பிரயாச்சித்தம்" (கழுவாய்) என்ற ஒரு நாடகத்தைக் கவிஞர் இப்போது எழுதி வெளியிட்டார்.

**சத்தியாக்கிரகம்**

இதில் கவிஞர் "தனஞ்செய பைராகி" என்ற பாத்திரத்தின் வழியே சத்தியாக்கிரகத்தின் தத்துவத்தை விளக்கினுர். காந்தியடிகளார் பின்னுளில் விளக்குவதற்கு முன்னரே கவிஞர் பெருமான் இவ்வாறு விளக்கியதனை இங்கே குறிப்பிடல் வேண்டும். அந்த நாடகம் சாந்திநிகேதனத்தில் நடந்தபொழுது, அதில் அந்தப் பாத்திரமாகப் பங்கு கொண்டு நடித்தார். ஷெலிதாவில் சென்று கீதா அஞ்சலியை எழுதுவதிலேயே காலத்தைக் கழித்தார்.

**மகனுர் மணம்**

மூன்ருண்டுகள் அமெரிக்காவில் கற்றபின், தாய் நாடு திரும்பிய தம்முடைய மூத்தமகனுரான இரதீந்திர நாதரை 1909-இல், தாகூர், கல்கத்தாவில் சென்று வரவேற்ருர். படகிலேயே தம் மகனுரை அழைத்துக் கொண்டு தம்முடைய வடவங்காளச் சமீன் ஊர்களிடையே போய்ச்சுற்றிப் பார்த்து வந்தார். கல்கத்தாவுக்குத் திரும்பியதும் "தபோவனம்" என்ற கட்டுரையை எழுதிப் படித்தார். பிரம்ம சமாசத்தின் ஆண்டுவிழாவில் "விசுவபாதம்" என்ற தலைப்பில் சிறந்ததொரு பிரார்த்தனைப்பேச்சை நிகழ்த்தினுர். தம்மகனுரான இரதீந்திரநாதரை, இளம் கைம்பெண்ணும் பிரதிமாதேவிக்கு மணமகனுராகக் தந்தது இவருடைய சீர்திருத்தப் பேச்சு வெறும் வாய்ப்பந்தர் அன்று என்பதனை நிலை நாட்டியது. 'கோரா' என்ற நாவலை அம்மகனுருக்குக் காணிக்கை ஆக்கினுர்.

**இலக்கியங்கள்**

1910 டிசம்பரில், இராசா என்ற உள்ளுறை நாடகத்தை வெளியிட்டார். பாகல்பூரில் நிகழ்ந்த இலக்கிய மகாநாட்டில் பங்கு கொண்டு பேசினுர். அவருடைய சிறு கதைகளில் ஒன்ருன "பசித்த கற்கள்" என்பதன் ஆங்கில மொழிபெயர்ப்பைப் பன்னுலால் போசு எழுதி

ஞர். இராமானந்த சாட்டர்சியின் விருப்பத்துக் கிணங்க, லோகேன் பாலித் என்பவர், தாகூர் பாடல் கள் இரண்டின் மொழிபெயர்ப்பை, "மாடர்ன் ரெவியூ" வில் 1911-இல், வெளியிட்டார். பயனற்ற கூப்பாடு என்பது இவர் பாடிய ஒரு பாட்டின் பெயர். "விண் மீனின் சாவு" என்பது மற்றொன்றின் பெயர்.

---

# IV. நோபல் பரிசு

UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

# 1. ஐம்பதாம் ஆண்டு நிறைவு விழா

## ஐம்பது

கவிஞர் வாழ்வில் ஐம்பது ஆண்டுகள் முடிந்தன. இங்கிருந்தே அவர் வாழ்க்கையின் பாராட்டுப்படலம் தொடங்குகிறது. 7—5—1911 அன்று கவிஞர் பெருமானுரின் 50-ஆம் பிறந்தநாள் திருவிழாவானது சாந்திநிகேதனத்தில் மிகப் புனிதமாகக் கொண்டாடப் பெற்றது. "இருட்டறையின் அரசர் (இராசா)" என்ற நாடகம் இந்தத் திருவிழாவில் நடிக்கப்பெற்றது. அதில் கவிஞரே தகூர்தாவாக வந்து நடித்தருளினுர். அங்குக் கூடியிருந்த நண்பர்களிடையேயும், பாராட்டும் அன்பர்களிடையேயும், தம் இளமை வரலாற்றை எழுதிப் படித்துக் காட்டினுர். அசித சக்கரவர்த்தியார், தாம், இரவீந்திரநாதரைப்பற்றி எழுதிய கட்டுரையையும் அங்கே படித்தார். இதுவே, கவிஞரை விளக்கி மதிப்பிடும் முதன் முயற்சியாகும். கவிஞரும் வாழ்க்கையின் நுட்பத்தில் ஈடுபட்டார். பின் ஷெலிதாவுக்குப் போய்த் தம் வாழ்க்கை நினைவுகள் என்ற நூலைச் சரிபார்த்துத் திருத்தி வந்தார். பிரவாசியில் "சீவனஸ்மிருதி" என்ற தலைப்பில் இது வெளிவந்தது; பின் ஆங்கிலத்திலும் (1917-இல்) மொழிபெயர்க்கப் பெற்றது.

## சமயம்

பழைய வைதிகம், உயிரற்றுக் கல்லொடு கல்லாய் இறுகிக் கிடந்தும், தன் கொடுங்கோன்மையால் மக்களை வாட்டி வருவதனை விளக்கும் வகையில், ஓர் உரை நடை நாடகத்தை "அசலயதன்" என்ற பேரில் இப்போதுதான் எழுதினுர். பழையமரபு வழிவந்தோர்,

இந்நாடகம் பிரவாசியில் அச்சானபோது, கவிஞரைக் கொடுமையாகத் தாக்கலாயினர். கவிஞர் கல்கத்தாவிற்குத் திரும்பியதும் சாதாரண பிரம்ம சமாச மண்டபத்தில் "சமயத்தின் பொருள்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதிப் படித்தார்.

## இந்துப் பல்கலைக் கழகம்

ரிப்பன் கல்லூரி மண்டபத்தில், அசுதோஷ சௌதரியின் தலைமையில், இந்துப் பல்கலைக்கழகம் ஒன்று நிலைநாட்ட வேண்டும் என வற்புறுத்த ஒரு மாபெருங்கூட்டம் கூடியது. அக்கூட்டத்தில் இத்தகைய பல்கலைக்கழகம் அமைய வேண்டியதன் இன்றியமையாமையை விளக்கிக் கவிஞர் ஒரு கட்டுரை எழுதிப் படித்தார்.

## ஆனந்த குமாரசாமி

அந்தக் காலத்தில் ஆனந்தகுமாரசாமி என்ற கலைஞர் சாந்திநிகேதனத்திற்கு வந்தார். அப்பெரியார், அசித சக்கரவர்த்தியாரின் துணைகொண்டு, தாகூரின் பாடல்களிற் சிலவற்றை, ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

## நாடகம்-உரைநடை

அஞ்சலகம் (Post Office) என்ற நாடகத்தைக் கவிஞர் எழுதிமுடித்தார். இது மூன்று அங்க நாடகம். இது அவலமும், உணர்ச்சியின் ஒருமுகப்பாடும் விளங்கத் திகழ்ந்தது. கவிஞரின் பல உரைநடை எழுத்துக்கள், அவர் ஆசிரியராக இருந்து நடத்திய தத்துவபோதினிப் பத்திரிகையில், வெளியாயின.

இந்திய தேசியக் காங்கிரசின் இருபத்தாறும் மாநாடு கல்கத்தாவில் கூடுவதாக இருந்தது. அதற்கெனத் தேசிய கீதம் ஒன்றைப் பாடுமாறு அசுதோஷ சவுதிரியார் கவிஞரை வேண்டிக்கொண்டார். அப்

போதுதான் இன்று நம் நாட்டின் தேசீய கீதமாக விளங்கும் "ஜனகணமன" என்பதனைக் கவிஞர் பாடி அருளினர்.

**கல்கத்தாவில்**

சனவரி 1912-இல் 28-ஆம் நாள் அவரது 50-ஆம் ஆண்டு நிறைவு விழாவினைக் கல்கத்தாவில் பொது மக்கள், வங்காள சாகித்திய பரிஷத்தின் ஆதரவில், கொண்டாடினர்கள். இராமேந்திர திருவேதி என்பவர், வங்காள சாகித்தியத்தில் எல்லாத் துறையிலும் கவிஞர் செய்த தனிப் பெரும் தொண்டினை விளக்கிப் பாராட்டினர். வங்காளத்தின் புதிய ஆராய்ச்சிகளை வளர்ப்பதற்காகக் கவிஞருடைய பெயரால், ஒரு தனிப் பெரு நிதியினை வங்காளச் சாகித்திய பரிஷத்தே திரட்டத் தொடங்கியது.

**இந்து**

"ஆத்ம பரிச்சயம்" என்ற தலைப்பில், சாதாரண பிரம்மசமாசப் பிரார்த்தனை மண்டபத்தில், ஒரு கட்டுரை எழுதிக் கவிஞர் படித்தார். அதிலே அவர் பிரம்ம சமாசத்தினர் இந்துக்களே என்பதை வற்புறுத்தினர்; அவர்கள் வெவ்வேறு என்ற குறிக்கோளின் முனைப்பினைக் கண்டிக்கலானர். சாதாரண பிரம்ம சமாசத்தின் பத்திரிகையான தத்துவ கௌமுதி, இதற்காக இவரை வன்மையாகத்தாக்கி எழுதியது. கவிஞர் "பாரத வருட இதிகாச தாரை" என்ற பொருள் பற்றி ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினர். இந்தப் பழம் பெரு நாட்டின் தொண்டு தான் என்ன? பல முரண்பட்ட அமைப்புகளையெல்லாம் ஒன்றுக்கி, மனித சமுதாயத்தின் நன்மைக்காகவும், இந்த நாட்டின் பெருமைக்காகவும் அருமையினும் அருமையான புதியதொரு கூட்டுறவினைப் படைப்பதே, இந்தப் பாரத வருடத்தின் தனிப் பெரும் நற்செய்தியாகும் என்று அதில் கவிஞர் விளக்கினர்.

**துரைத்தனத்தாக்கல்**

இப்போதுதான் கிழக்கு வங்காள மாகாணத்தின் துரைத்தனத்தாரும், அசாம் துரைத்தனத்தாரும் மறைவான சுற்றறிக்கை ஒன்று விட்டிருந்தனர். சாந்தி நிகேதனம், துரைத்தன அலுவலாளர்களின் மக்களுக்கு, முழுதும் பொருத்தமற்றது என்று அச் சுற்றறிக்கை துரைத்தன அலுவலாளருக்குத் தெரிவித்தது. பல மாணவர்களை, இதன் காரணமாகப் பெற்றோர்கள் சாந்தி நிகேதனத்தினின்றும் வீட்டிற்கு அழைத்துக் கொண்டு போயினர். தாகூர் மனம் புண்பட்டார். ஆனால், அதே சமயத்தில் வெல்ப்ஸ் என்ற அமெரிக்கச் சட்ட நிபுணர், சாந்தி நிகேதனத்திற்கு, வந்திருந்தார். இந்தமாபெரு நிலையத்தில் நடைபெறும் கல்வி முறையானது மனிதப் பண்புகளை வளர்த்து வருவதாக அதனை அவர் மிக மிகப் புகழ்ந்தார்.

---



1907–வங்காளசாகித்திய சம்மேளத்தின் தலைவராகக் கவிஞர் (பக்கம் 63)



தந்தையார்க்கு இறுதிக்கடன் செய்தபின் கவிஞர்–1905 (பக்கம் 4



23—11—1913 நோபல் பரிசு வழங்க வந்தவர்கள் கார்டன் மில்பர்ன் பாதிரி—கவிஞர்—அசுதோஷ்சௌதரி (பக்கம் 71)


Where the mind is without fear
and the head is held high;
Where knowledge is free;
Where the world has not been broken up
into fragments by narrow domestic walls;
Where words come out from the depth of truth;
Where tireless striving stretches its arms
towards perfection;
Where the clear stream of reason
has not lost its way
into the dreary desert sand of dead habit;
Where the mind is led forward by thee
into everwidening thought and action
Into that heaven of freedom, my Father,
let my country awake.
Rabindranath Tagore

இரவீந்திரநாதர் கைப்பட எழுதியது (பக்கம் 65)

# 2. உலகம்

## உலக எண்ணம்

தாகூருக்கும் தம்முடைய கல்வி நிலயத்தை உலகம் முழுவதற்கும் அறிவிக்க வேண்டும் என்று தோன்றியது. இதற்காக ஐரோப்பாவிற்குச் செல்லத் துணிந்தார். இந்த வழியே கவிஞர் உலகப் புகழ்பெறு மாறு இயற்கையன்னையே வகை செய்தமைத்தாள். டென்மார்க்கில் நடந்துவரும் கூட்டுறவு இயக்கத்தை யும் ஆராய்ந்து அறிய வேண்டுமென்றும் அப்போது தாகூர் கருதினர். இங்கிலாந்திலேயிருந்த அவருடைய நண்பர்கள், அந்நாட்டுச் சிறந்த அறிஞர்களைத் தாகூர் வந்து காணவேண்டு மென்று அவரை வருந்தி அழைத்தார்கள்.

## நோய்த்தடை

தாகூர் புறப்படுவதற்குக் குறிப்பிட்ட நாளுக்கு முன் இரவில்தான், திடீர் எனக் கவிஞர் நோய் வாய்ப் பட்டார். சென்னை வரையிலும் அவருடைய சாமான் கள் போய் இருந்தாலும், பயணத்தைக் கைவிட வேண்டியதாயிற்று. ஷெலிதாவுக்குப் போய் ஓய்வு பெற்று, உடல் நலம் அடைந்து வந்தார். அப்போது தான் தம்முடைய கீதாஞ்சலியின் பாடல்களையும், ஆங் கிலத்தில் தாகூர் மொழி பெயர்த்தார். உடல் நலம் காரணமாக ஐரோப்பாவில் கவிஞர் சுற்றிவரவேண்டும் என்று மருத்துவர்களும் வற்புறுத்தினர்கள்.

## பயணம்

அவருடைய மகன் இரதீந்திரநாதரோடும் மரு மகள் பிரதிமாதேவியோடும் 25-5-1912-இல் பம்பாயி லிருந்து ஐரோப்பாவிற்குக் கவிஞர் மூன்ரும் முறை பயணமாகத் தொடங்கினர். கப்பலில் போகும் போது, மேலும் தம் பாக்கள் பலவற்றை ஆங்கிலத்தில்

மொழி பெயர்த்தார். ஜூன் மாதம் 16-ஆம் தேதி இலண்டனில் இறங்கி ஒரு விடுதியில் தங்கினர். இந்தியாவில் வந்திருந்தபோது, தம்மைக் கண்டு பேசிய ஆங்கில ஓவியப் பெருமகனுன ரோதன்ஸ்டைன் என்பாரோடு தொடர்பு கொண்டார்.

**பாட்டைப் பாராட்டினர்**

தம்முடைய ஆங்கில மொழி பெயர்ப்புகளைக் கவிஞர் அவருக்குக் காட்டிய பொழுது, அவற்றின் சிறப்பை அப்பெருமகன் கண்டார். அவ்வோவியர் அவற்றின் படிகளை ஈட்ஸ் (Yeats), ஸ்டாப்போர்ட் ப்ரூக் (Stopford Brooke), பிராட்லே (Bradley) போன்ற ஆங்கிலச் சுவைஞர்களுக்கு அனுப்பினர். அவர்கள் அனைவரும் ஒருமுகமாகப் பேரார்வத்துடன் அப்பாடல்களைப் புகழ்ந்தார்கள். மே சிங்கிளர் (May Sinclaar), எவலின் அண்டர் ஹில் (Evelyn Underhill), எர்னஸ்ட் ரைஸ் (Ernest Rhys), பாக்ஸ் ஸ்ட்ராங்க்வேஸ் (Fox Strangways), சார்லஸ் ட்ரெவிலியன் (Charles Drevele-yan), எஸ்ரா பௌண்ட் (Ezra Pound), அல்லைஸ் மேய்நெல் (Alice Meynel) முதலானோர், ரோதன்ஸ் டைன் வீட்டிற்கு வந்திருந்தபோது, ஈட்ஸ் என்ற அறிஞர் அந்தப் பாடல்களைப் படித்துக் காட்டினர். எல்லோருடைய உள்ளத்திலும் ஆழமாக இப்பாடல்கள் பதிந்தன. இங்கேதான் முதல் முதலாக ஆண்ட்ருசு என்பாரைத் தாகூர் கண்டார்.

**விருந்தும், அறிமுகமும்**

கவிஞருக்கென ஒரு விருந்து நடந்தது. "தேசம்" என்ற வாரப்பத்திரிகையின் தலைவர்கள், அவரை ஆங்கில அறிஞர்களுக்கு எல்லாம் அறிமுகம் செய்ய வேண்டிப் பெரியதொரு விருந்து நடத்தினர்கள். இலண்டனை விட்டு இங்கிலாந்தின் நாட்டுப்புறச் சூழலில் வாழ்வதற்காகப் போயினர் தாகூர். சிப்பாய்க் கலகத்தில் பெருமை பெற்ற ஊட்ராம் என்ற போர் வீரத் தலைவரின் மகனுரின் விருந்தாளி

யாகப் பட்டர்ட்டன் என்ற இடத்திற்குப் போயினுர். அங்கிருந்து மற்ருெரு நாட்டுப்புறச் சூழலுக்குப் போனபின், இலண்டனுக்குத் திரும்பினுர். பர்னுட்ஷா, H. G. வெல்ஸ், ஸ்டாப் போர்ட் ப்ருக்ஸ், ஜான் மேஸ்பீல்ட், லோவெஸ் டிக்கின்சன், பர்ட்ராண்டு ரஸ்ஸல், ஜான் கால்ஸ்வொர்த்து, ராபட்பிரிட்ஜஸ் முதலியோரைக் கண்டு அளவளாவினுர். "அரசர்" என்ற அவருடைய நாடகத்தைச் சேன் என்பவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

### கிராமத்தொண்டு

நாட்டுப்புறச் சூழலில் மனத்தைப் பறிகொடுத்த கவிஞர், கிராம வளர்ச்சியைப் பற்றித் தாம் முன் எண்ணியதனை எல்லாம் நினைத்துக்கொண்டார்; அதற்காக உழைக்கும் வாய்ப்பினையும் பயன்படுத்திக்கொண்டார். செப்டம்பர் மாதத்தில் கர்னல் சின்ஹாஎன்பவரிடம் இருந்து "நீலக்குடி" என்ற பங்களாவை வாங்கினுர். இது சாந்திநிகேதனத்திற்கு மூன்று கல் தொலைவில் இருப்பது. இன்றைக்கு விசுவபாரதியின் நாட்டுப்புறச் சீரமைப்பின் நிலையமாக அது விளங்குகிறது.

### அமெரிக்கா

அமெரிக்காவிற்குப் போகப் புறப்பட்டு 27–10–'12-இல் அங்குப் போய்ச் சேர்ந்தார் கவிஞர். பல மாதா கோவில்களில் இருந்தும் தத்துவப் பொருள்களைப் பற்றி அங்கே பேசினுர்.

### கீதாஞ்சலி வெளியாயிற்று

1–11–1912இல் இலண்டனிலுள்ள இந்திய சங்கம், அவருடைய மூன்று சிறந்த வங்காள இலக்கியங்களான "நைவேத்தியம்", "கேயம்", "கீதாஞ்சலி" என்பனவற்றினின்றும், 108 பாடல்களின் ஆங்கில மொழிப்பெயர்ப்பைத் திரட்டி, வெளியிட்டது. இதற்கு ஈட்ஸ் என்ற கவிஞர் முன்னுரை எழுதினுர்; ரோதன்ஸ்டைன் முகப்புப்படம் வரைந்து தந்தார். ஆங்கில

இலக்கிய உலகின்உள்ளத்தை இந்நூல், காந்தம் இரும்பினைக் கவர்வது போல, ஒரேயடியாகக் கவர்ந் தது. இந்த வெளியீடு இலக்கிய உலகின் இன்றியமை யாச் சிறப்புடையது ஆயது; அதனை ஒத்த நிகழ்ச்சி நிகழ்ந்ததே இல்லை எனலாம்.

## அமெரிக்காவில் கவிஞர் முழக்கம்

சனவரி 13-இல், அமெரிக்காவில் இல்லினுய்சில் உள்ள அர்பானுவிலிருந்து, கவிஞர் சிகாகோவுக்குச் சென்றார். மோடி அம்மையாரின் விருந்தாளியாகத் தங்கிச் சிகாகோப் பல்கலைக் கழகத்தில் "இந்தியப் பழைய நாகரிகத்தின் குறிக்கோள்கள்" என்ற. பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினர். சிகாகோப் பல்கலைக் கழக மண்டபத்தில் "தீமை என்ற சிக்கல்" என்ற பொருள் பற்றிப் பேசினர். ரோச்சஸ்டரில் அப்போது மனித இனங்களின் மாநாடு (Congress of Races) கூடியது. அதற்குக் கவிஞர் சென்றார். அங்கே சர்மன் தத்துவப் பேரறிஞரான ருடோல்ப் யூக்கன் என்பாரைக் கண்டார். அவரும் கீதாஞ்சலியின் மொழிபெயர்ப்பைப் படித்தவர்; இரவீந்திரரைப் புகழும் கூட்டத்தில் ஒருவராய் இருந்தவர்; ஆதலால் கவிஞரை மனமார வரவேற்றார். அந்த மாநாட்டில் கவிஞர் பெருமான் "மனித இனப் போராட்டம்" என்ற தம் புகழ் பெற்ற கட்டுரையைப் படித்தார். அங்கிருந்து பாஸ்டன் சென்று, சிறந்த அறிஞர் கூட்டம் ஒன்றில் பேசினர். நியூயார்க்கு - சிக்காகோ வழியாக அர் பானு திரும்பினர். ஹார்வார்டு பல்கலைக் கழகத்தில் தொடர் சொற்பொழிவுகளை ஆற்றினர். இவை பின்னர்ச் சாதனுவில் வெளியாயின.

## மக்கட் பதிப்பு

மாக்மில்லன் கம்பெனியார் கீதாஞ்சலியைப் பொது மக்கட் பதிப்பாக வெளியிட்டனர். அதனைப் பின் பற்றித் தோட்டக்காரன் (Gardener), பிறைத் திங்கள் (Crescent Moon) என்பவையும் அவ்வாறே வெளிவர

லாயின. கவிஞர் பெருமானது சித்திராங்கதா என்ற நாடகத்தினைச் சித்திரா என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து இந்தியக்கழகமே (India Society) வெளியிட்டது.

**வைசிராய் புகழ்தல்**

மே மாதம் 26-ஆம் தேதி ஆண்ட்ரூஸ் இந்தியா வந்திருந்தார். சிம்லாவிலுள்ள வைசிராயின் மாளிகையில் வார்டென்சின் தலைமையில் ஒரு கூட்டம் கூடியது. அதில், தாகூரின் வாழ்க்கையைப் பற்றியும் கவிதையைப்பற்றியும், ஒரு கட்டுரையை, ஆண்ட்ருசு எழுதிப் படித்தார். வைசிராயும், ஆசியாவின் கவிஞப் பேரரசர் என இரவீந்திரநாதரைப் பாராட்டினர்.

**இங்கிலாந்தில்**

தாகூர் 1913-ஜூன் மாதத்தில் அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றார். இந்திய சமயத்தைப் பற்றியும், தத்துவத்தைப் பற்றியும் அமெரிக்காவில் ஆற்றிய சொற்பொழிவுகளைத் திரும்பவும் இங்கிலாந்தில் நிகழ்த்தினர். மேல்நாட்டு அறிஞர்கள் இந்திய சமயநூல்களை உயிர் உள்ளவையாகக் கொண்டு ஆராயாமல், புதைபொருள் ஆராய்ச்சிப் போக்கில் மட்டும் ஈடுபடுவது கண்டு வருந்தினர். ஹோமியோபதியில் நம்பிக்கை கொண்ட இவர் அதனால் தீராதநோய் ஒன்று தீர்வதற்காக அறுவை மருத்துவம் செய்துகொள்ள வேண்டியதாயிற்று. வங்காளத்தில் அப்போது நிகழ்ந்த பெரிய வெள்ளக் கேடுகளைப் பற்றி அறிந்து வருந்தினர். இந்தியாவில் நிகழும் அத்தகைய நிலைமைபற்றிய செய்திகளை ஆங்கில நாட்டுக்கு உடனுக்குடன் தெரிவியாத ஆங்கிலத் தினசரிகளின் போக்கை வன்மையாகத் தாகூர் தாக்கினர். தம் நாட்டையும், உண்மை உணர்த்துவதனையும் எப்போதும் கவிஞர் மறந்ததில்லை. பின்னர் ஆங்கில நாட்டை விட்டுப் பம்பாயில் வந்திறங்கி அக்டோபர்6-ஆம் தேதி கல்கத்தா போய்ச்சேர்ந்தார்.

# 3. நோபல் பரிசு

## நோபல் பரிசு

நோபல் பரிசு என்பது சுவீடன் நாட்டுப் பெருஞ்செல்வர் நிலைநாட்டியது. அவர் வெடி மருந்தில் பொருளீட்டியவர். ஆண்டுதோறும் பெருந்தொகையைப் பரிசாகத் தர ஏற்பாடு செய்தார். அமைதிக்கு உழைத்தவர், இலக்கியக் கலைஞர், விஞ்ஞானிகள் என உலகிற் சிறந்தவர்களுக்குத் தருவன இப்பரிசுகள். 1919-ம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ந்தேதி இந்தியாவிற்கு எல்லையற்றமகிழ்ச்சியைத் தரும் செய்தி கிடைத்தது. அகநிலை (Idealism) இலக்கியங்களில் மிகச்சிறந்தது கீதாஞ்சலியே என்று சுவீடன்கழகம் முடிவு செய்தது; அதன் பயனாக அந்த ஆண்டின் நோபல் இலக்கியப்பரிசு தாகூருக்கு வழங்கப்பெறும் என்று அந்த ஆண்டிலே கிடைத்த செய்தியே அந்த மகிழ்ச்சி தரும் செய்தியாகும். நாடு முழுவதும் மகிழ்ந்து கவிஞரைப் பாராட்டத் தொடங்கியது. பற்பல நிலையிலுள்ள மக்கள் எல்லாம் ஒருங்கு திரண்டனர். அதற்கெனத் தனியே புகை வண்டித் தொடரும் சென்றது. அதில் ஏறிக் கல்கத்தாவிலிருந்து சாந்திநிகேதனம் சென்று, நவம்பர் மாதம் 23-ம் தேதி யன்று, மக்கள் கவிஞரை நேரே கண்டு பாராட்டினார்கள்.

## கடிதல்

அவர்களோடு அளவளாவும்போது, சிறிதுகடுமையாகவே கவிஞர் பேசினார். சிறப்புவகையால் மேல்நாடு தம்மைப் பாராட்டும் வரையிலும், தம் தாய் நாட்டினர் காத்திருந்ததைச் சுட்டிக்காட்டியே தம்மைப் பாராட்டியவரைக் கடிவதுபோல இவ்வாறு கடுமையாக அவர் பேசினார். ஒருசிலர் அவரை இதற்காகத் தாக்கியதும் உண்டு. ஆனால், விபினசந்திரபாலர், கவிஞர் செய்தது எல்லாவகையிலும்பொருத்தமேஎன்றுவற்புறுத்தினார்.

**கவிஞர் கருத்து**

கவிஞர் தம்முள்ளத்தில் இடம் பெற்றவர்களுக்குத் தம்புகழ் மகிழ்ச்சி யூட்டுவதுகண்டு மகிழ்ந்தார். ஆனல், கடுஞ்சுழற் காற்றுப்போலப் பொதுமக்கள் உணர்ச்சிவயப்பட்டது அவருக்குப் பெருநோயாகத் தோன்றியது. நாயின் வாலில் தகரத்தைக்கட்டி விட்டால் என்ன செய்யும்? பாவம்! வீண்ஒலி எழுப்பி மக்களைத்திரட்டி ஓரடியும் எடுத்துவைக்க முடியாத படி வாடும். இந்த நாயைப் போன்றதே தம்நிலை எனக் கவிஞர் கருதினர். எவ்வளவு பொருளற்ற செயற்கை நிலை இது எனக் கூறினர். தம்மையன்றித் தம்முள்ளே விளங்கும் கௌரவத்தையே எல்லோரும் பாராட்டினர் என்பதனை விளக்கினர். அப்போது, பின்னர் ஆங்கில முதன் மந்திரியாகப்போகும் இராம்சே மாக்டனல்டு இந்தியாவிற்கு வந்திருந்தார்; அவர் சாந்திநிகேதனத் திற்குச் சென்று கவிஞரைப் பாராட்டினர்; இதனைப் பற்றி ஒரு கட்டுரையும் எழுதினர்.

**கல்கத்தாப் பல்கலைக் கழகம்**

(டி. லிட்.) இலக்கியப் பேரறிஞர் என்ற கவுரவப் பட்டத்தைக் கல்கத்தா பல்கலைக்கழகம் டிசம்பர் 26-ஆந் தேதி அன்று, அதற்கென ஏற்பாடான ஒரு பட்ட மளிப்புத் திருவிழாவில் கவிஞருக்கு வழங்கியது. விழாவோ கல்கத்தா கவர்னர் மாளிகையில் நிகழ்ந்தது. அதே விழாவில், அதற்கென அழைக்கப்பெற்ற பேராசிரியர்களான பால் விநேக்ரடாப், ஹெர்மன் ஜாக்கோபி, சில்வன்லெவி முதலிய பல அறிஞர்களுக் கும், இத்தகைய கவுரவப்பட்டங்கள் வழங்கப்பெற்றன. கவர்னர் மாளிகையில் நடந்த வரவேற்பில் லாட் கார் மேகல் நோபல் பரிசின் நற்சான்றிதழையும், நோபல் பதக்கத்தையும் கவிஞருக்கு வழங்கினர்.

**பழைய தொண்டின் வளர்ச்சி**

சுருள் என்ற இடத்திலுள்ள வீடு, விஞ்ஞான ஆராய்ச்சிக்கென வேண்டிய அமைப்புகளும் கருவி

களும் கொண்டு விளங்கியது. அதனைக் கவிஞர் 1916-இல் ஏப்ரல் மாதத்தில் விஞ்ஞானத்திற்கெனத் திறந்துவைத்துக் குடிபுகு சடங்குகளை நடத்தினர். தென்னுப்பிரிக்காவில் இருந்து சாந்திநிகேதனத்திற்கு ஆண்ட்ருசும், பியர்சன் என்பாரும் திரும்ப வந்தார்கள். அவர்கள் காந்தியடிகளுடன் உழைத்து அங்கு நிகழ்ந்த போராட்டத்தில் கலந்து உழைக்கச் சென்றவர்கள். நந்தலால்போசு என்ற ஓவியக்கலை அறிஞரும் சாந்திநிகேதனம் வந்தார். அப்பொழுது சிறந்ததொரு வரவேற்பைச் சாந்திநிகேதனத்தில் கவிஞர் ஏற்பாடு செய்தார்; அசலயதன் என்கிற நாடகம் நடிக்கப் பெற்றது; பியர்சனும் கவிஞரும் அதில் பங்கு கொண்டார்கள். சித்தரஞ்சததாசரின் உடன் பிறந்தாரான பசந்ததாசின் மனைவியார், தம்முடைய கணவனுர் நினைவாக எழுதிய நூலுக்குக் கவிஞர் முன்னுரை வழங்கினர்.

**பச்சிலை**

1914-ம் ஆண்டு மே மாதம் 8-ஆம் நாள், பீர்பால் என்று பாராட்டப் பெறும் வழக்கறிஞரும் கலைஞருமான பிரமாத சவுதிரி என்பவர், "பச்சிலை" என்ற ஒரு பத்திரிகையைத் தொடங்கினர். ஒவ்வொரு மாதமும் கவிஞர் அவர்கள், அதற்குக் கட்டுரைகளும் கதைகளும் எழுதினர்கள். இந்தியாவின் சிறப்பியல்பான மதிப்பினை வற்புறுத்தினர்; பழமையின் அடிமையாளரையும், பொருளற்ற இலக்கியத் தடைகளையும், குழம்பிக் கலங்கிய கற்பனைகளையும் கவிஞர் எள்ளி நகையாடினர்.

**ஒரு வாட்டம்**

அல்மோராவிலுள்ள இராம்கர் மலையில் கோடையைக் கழிக்கச்சென்றூர். ஏதோ அழிவும் கொள்ளையும் வருவதாக அவர் மனத்தில் தோன்றிய வருத்தத்தில் எழுந்தன சில செய்யுள்கள்.

### எங்கும் மொழி பெயர்ப்பு

இவர் சாந்திநிகேதனத்திற்குத் திரும்பியபோது அங்கு வந்த புஸ்தானி என்ற அரபிக் கவிஞரை வரவேற்றார். ஆங்கிலத்திலிருந்து தாகூருடைய கீதாஞ்சலியையும், பிறைத்திங்களையும் அரபி மொழியில் மொழிபெயர்த்தார் அவர். அந்தக்காலத்தில் தாகூருடைய பாடல்கள் ஐரோப்பாவிலுள்ள தலைமையான மொழிகளிலெல்லாம் மொழிபெயர்ப்பாக வெளிவந்தன. உலகம் முழுவதும் அவருடைய புகழ் பரவியது.

---

# 4. பலவகைத் தொண்டுகளும் காந்தியடிகளும்

### பெண்மை

"பெண்ணின் கடிதம்" என்ற தலைப்பில் ஒரு சிறு கதையைப் பச்சிலைக்கு எழுதினர். அப்போது விழித்து எழும் இந்தியப்பெண்மை, தன்னுடைய துன்ப நிலையைக் காண்பதனை அச்சிறு கதை விளக்கியது. இதற்கு எதிராக ஒரு பேராரவாரமும் எழுந்தது; உள்ளதை உள்ளபடி காணுமல் நின்று, நாட்டிற்கு உதவாது வளரும் கொள்கைகளை அச்சிறு கதை பாராட்டியது என்று விபின சந்திரபாலரே நையாண்டி செய்தார். "உண்மை," "உலக இதம்" என்ற இருகட்டுரைகள் எழுதித் தாகூர் அவர்கள், இதற்கு விடை கொடுத்தார். சமுதாயத்திட்டத்தில் ஈடுபட்டவர்கள் பொதுமக்களுக்குத் தாம் புரவலர்கள் என்று நினைத்துக் கொண்டு, வறுமையை அழிக்கவும் சமுதாயத்தை உயர்த்தவும் முயல்வதனை வருத்தத்துடன் எடுத்துக்காட்டினர்.

### உலகப் போர்

முதல் உலகப்போர் மூண்டது. 1914-ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 5-ஆம் நாள் கவிஞர் சாந்திநிகேதனத்தில் ஒரு பிரார்த்தனைச் சொற்பொழிவு நிகழ்த்தினர். "பகைக்காதே" என்ற தலைப்பில் ஒரு கட்டுரையும் எழுதினர்.

### பல தொண்டு

இராமேந்திர சுந்தர திருவேதி அவர்களின் 50-ஆம் ஆண்டின் நிறைவு விழாவின்போது, கவிஞர் பெருமான் கல்கத்தாவுக்கு வந்து அவரை வாழ்த்தினர். சாந்திநிகேதனத்திற்குத் திரும்பிச் சுருளுக்கு சென்ருர். அங்கே தங்கி, 46 நாட்களுக்குள், 108 இசைப்பாடல்

களைப் பாடி முடித்தார். அவருடைய இசைக்களஞ்சிய மாக விளங்கிய அவருடைய பேரன் தினேந்திரநாத னுக்கு அவற்றைக்கற்பித்தார். "பாலகன்" என்று பின் தொகுக்கப்பெற்ற பாடல்களையும், இரண்டு சிறு கதை களையும் எழுதி ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளி யிட்டார். நவராத்திரி காலத்தில், புத்தகயாவுக்கும் அலகாபாத்திற்கும் போயினர். சிலநாட்கள் டார்ஜிலிங் கிலும் தங்கினர். சாந்திநிகேதனத்திற்குத் திரும்பிய உடனேயே ஆக்ராவிற்கும் அலகாபாத்திற்கும், பயண மாகிச்சென்றார். அலகாபாத்தில் இருக்கும்பொழுது தான், ஷாஜஹான் என்ற மாபெரும் கவிதை எழுதப் பெற்றது.

**தியாகம்**

தென்னாப்பிரிக்காவிலுள்ள டிரான்சுவாலில், காந்தி யடிகள், பள்ளி ஒன்று தொடங்கினர். போனிக்சு என்பது அதன்பெயர். அதன் ஆசிரியர்களையும் மாணவர்களையும் ஆண்ட்ரூசு அவர்கள் மூலம், கவிஞர், அன்புடன் சாந்திநிகேதனத்திற்கு அழைத்திருந்தார். அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு சாந்திநிகேதனத் திற்கு அம்மாணவர்களும் ஆசிரியர்களும் வந்தனர். இவர்கள் வருகையின் பயனாக, அங்கே, தியாகச்செயல் ஒன்று வளர்ந்தது. சாந்திநிகேதன மாணவர்கள் கிழக்கு வங்காளத்தில் வாடி வருந்திய சணல் பயிர்த் தொழிலாளர்களுக்கு உதவ வேண்டினர்; தாங்கள் உண்ணும்போது சருக்கரையும் மாவும் உண்ணாது விடுத்தனர்; அதனால் மிகுதியாகும் பணத்தைத் தொழிலாளர்களுக்கு அனுப்பினர். கவிவாணரோ இதனை ஒப்பவில்லை. அம்மாணவர்கள் செய்யத் தக்க சிறந்த தன்னலமோ தியாகமோ இது அன்று என்றார். தொழிலாளருக்குப் பணத்தைத் தேடு வதற்காக ஏதேனும் ஒரு கொடிய உழைப்பை மேற் கொள்வதுதான் நல்லதொரு தியாக வழி என்று கவிவாணர் கருதினர்.

**காந்தி**

வங்காளம் சமுதாயத்தொண்டு நிலையம் ஒன்றைத் தொடங்கியபோது, சிறந்ததொரு சொற்பொழிவினைக் கவிஞர் அவர்கள் நிகழ்த்தினார்கள். காந்தியடிகளாரும் அவருடைய மனைவியாரும் பம்பாயிலிருந்து நேரே தம்முடைய போனிக்சுப் பள்ளி மாணவர்களைச் சாந்திநிகேதனத்தில் காண வந்திருந்தனர். ஆனால், தாகூர் அங்கு வருவதற்குள்ளேயே காந்தியவர்கள் திரும்பவேண்டியதாயிற்று. கோகலே அவர்கள் இறந்ததன் காரணமாகக் காந்தியடிகள் தாகூரைப் பார்க்காமலே பூனுவிற்குத் திரும்ப வேண்டியதாயிற்று. கவிஞர் சுருளில் தங்கிப் "பங்குனி" என்ற நாடகத்தை எழுதி முடித்தார். சாந்திநிகேதனத்தில் அதனைப் படித்துக் காட்டினார்; பச்சிலையில் அதனை வெளியிட்டார். மார்ச்சு மாதம் 6-ஆம் தேதி தாகூர் அவர்கள் காந்தியடிகளைச் சாந்திநிகேதனத்தில் அன்புடன் வரவேற்றார். காந்தியடிகளின் கருத்துக்கேற்ப மாணவர்கள் தாமே உணவைச் சமைத்தும் வேலையாட்களின்றிப் பல திட்டங்களைச் செய்தும் வரும் சோதனையை மேற்கொண்டார்கள். ஆனால், இந்தச் சோதனையைப் பல இடையூறுகள் காரணமாகக் கைவிட்டனர். ஆனாலும், ஆண்டுதோறும் மார்ச்சு மாதம் 10-ஆம்தேதியில் காந்திநாள் என்ற கொண்டாட்டம் நிகழும்போது, ஆசிரியர்களும், மாணவர்களும் சாந்திநிகேதனத்தின் வேலையை எல்லாம் தாங்களே செய்து வருவார்களாயினர். "பங்குனி" என்ற நாடகம் சாந்திநிகேதனத்தில் நடிக்கப் பெற்றது. கவிஞர் அதில் குருடராக வந்து நடித்தார். மார்ச்சு மாதம் 20-ஆம் தேதி கவர்னர் கார்மிகேல் அவர்கள் சாந்திநிகேதனத்திற்கு வந்தபோது மகிழ்ச்சியுடன் வரவேற்கப்பட்டார். காந்தியடிகள் மார்ச்சு 31-இல் வந்தபோது, தம் மாணவர்களையும் ஆசிரியர்களையும் அரித்துவாரத்திற்குக் கொண்டு சென்றார்.

### சர் பட்டம்

மறுபடியும் சுருளில் கவிவாணர் தங்கிப் பல புதிய இசைப் பாடல்களையும் செய்யுள்களையும் இயற்றினர். நான்கு கதைகள் "சதுரங்கம்" என்ற தலைப்போடு வெளி வந்தன. "கரேபைரே" என்ற நாவலையும் தொடர்கதையாகக் கவிஞர் பச்சிலையில் எழுதி வரத் தொடங்கினர். 1915-ஆம் வருஷம் சூன் மாதம் 3-ஆம் நாள் ஆங்கில மன்னரின் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் 'சர்' (Sir) என்ற வீரப் பட்டம் பெற்றார், நம் கவிஞர் பெருமான்.

### பிசித் தீவு

பிசித் தீவில் இந்தியத் தொழிலாளிகள் படும்பாடு வெளியாயிற்று. இது இந்தியர் மனத்தை வாட்டியது. இதனை ஆராய்வதற்காக ஆண்ட்ருசும், பியர்சனும் அங்குச் சென்றார்கள்.

### ஷேக்ஸ்பியர் வாழ்த்து

கவிவாணர் காசுமீருக்குச் சென்று உலகம் அறிந்த பல சிறந்த செய்யுள்களை இயற்றினர். ஷேக்ஸ்பியர் கழகம் வேண்டிக் கொண்டபடி, ஷேக்ஸ்பியரின் மூந் நூறும் ஆண்டு விழா மலருக்கு என வங்காளப் பாட்டு ஒன்றைப் பாடித் தந்தார்.

### தாய்மொழியே கல்லூரி மொழி

இராம்மோகன் நூல் நிலையத்தில் கூடிய ஒரு பொதுக்கூட்டத்தில் "பாட மொழி" என்ற தலைப்பிலே, பல்கலைக் கழகத்திலும் வங்காளியே பாட மொழியாக அமைதல் வேண்டுமென்று அந்த நாளிலேயே கவிஞர் பெருமான் வற்புறுத்தினர்.

### பஞ்சமும், தொண்டும்

பஞ்சத்தில் வாடிய மக்களுக்கு உதவுவதற்காகப் "பங்குனி" என்ற நாடகம் நடிக்கப் பெற்றபோது, கவி

வாணர் கவிசேகரராகவும் குருடராகவும் நடித்துப் பல உதவிகள் செய்தார். சாந்திநிகேதனத்திற்கு திரும்பியதும் "கரேபைரே" என்ற நாவலை முடித்தார். "பாலகனும்" வெளியாயிற்று.

### மாணவரும், அடக்குமுறையும்

அப்போது மாகாணக் கல்லூரியில் மாணவர்கள் அடக்குமுறைக்கு உள்ளாயினர்; அதனை வன்மையாகத் தாக்கிச் "சத்திரசாசனம்" என்ற ஒரு கட்டுரையை எழுதினார். ஆங்கிலேயருக்கும் வங்காளிகளுக்கு மிடையே வளர்ந்து வந்த பகை உணர்ச்சியை அதில் கவிஞர் சுட்டிக் காட்டினார். அது தீர்வதற்கு அடக்குமுறை அன்று வழி என்பதையும் அவர் விளக்கினார்.

### பதிப்பு

அவருடைய வங்காளச் செய்யுட்களையெல்லாம் திரட்டிப் பத்துப் பகுதிகளாக அலகாபாத்து இந்திய அச்சகம் வெளியிட்டது. மாக்மில்லன் கம்பெனியாரும் ஆங்கிலத்தில் "கனி திரட்டல்" என்ற நூலையும் "பசித்தகல்" முதலிய சிறு கதைகளையும் வெளியிட்டது.

# V. உலகிலும் - இந்தியாவிலும்

# 1. சப்பானிலும் அமெரிக்காவிலும்

**சப்பான் பயணம்**

1914-ஆம் ஆண்டு மே மாதம் 3-ஆம் நாள், ஆண்ட்ருசோடும் பியர்சனேடும் சப்பானுக்குக் கவிஞர் பயணமானர். 6-ஆம் தேதி இரங்கூன் சென்றதும் பெரியதொரு வரவேற்பு கவிஞருக்கு அங்கே நிகழ்ந்தது. இரங்கூனே 10-ஆம் தேதி விட்டு 15-ஆம் தேதியன்று சிங்கப்பூர் சேர்ந்தார். 22-ஆம் தேதி ஹாங்காங்குச் சென்றது; கப்பலின் தலைவர் துரைத்தனக் கட்டளைப்படி கப்பல் ஹாங்காங்கிற்குள் செல்லமுடியாது என்றும், சப்பானுக்கு நேரே செல்லவேண்டும் என்றும் தெரிவித்தார். இதற்குக் காரணம் கவிஞரைப் பார்க்கவேண்டும் என்றிருந்த மக்கள் அமைதியை இழந்ததேயாம். கோப் நகருக்கு 29-ஆம் தேதி போய்ச் சேர்ந்தார். சப்பான் பத்திரிகைக் கழகம் அவரை வரவேற்றது. பின்னர், சப்பானிய அறிஞர்களது பெருங் கூட்டத்தில் ஒக்குமாக் கோமகனர் சப்பானிய மொழியில் அவரை வரவேற்ருர்; அதற்கு விடையாக நம் கவிஞர் வங்காளத்தில் பேசினர். அந்நாட்டுச் சிறந்த ஓவியரான ஹாரா என்பவரின் விருந்தாளியாக இருந்து "விடுதிப்பறவைகள்" என்றதம் நூலே அவருக்குக் காணிக்கை ஆக்கினர். பின்னர், அதனை மாக்மில்லன் கம்பெனியார் வெளியிட்டனர். இளைய சீனக் குடியரசினை எதிர்க்கும் சப்பானிய சாம்ராச்சியப் போக்கினைக் கவிஞர் எதிர்த்துப் பேசினர். டோக்கியோப் பல்கலைக் கழகத்தில் "சப்பானுக்கு இந்தியாவின் நற்செய்தி" என்ற பொருள் பற்றியும், கெயியோசிஜிக்குப் பல்கலைக் கழகத்தில் "சப்பானின் ஆன்மா" என்பதைப்பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினர். சப்பானியத் துரைத்தனத்தின் சீற்றத்துக்கு இதன் பயனுக இவர் உள்ளாயினர் என்று சொல்லவும்வேண்டுமா?

## அமெரிக்காவில் முழக்கம்

கனடாவிலுள்ள வங்காளிகளிடமிருந்து அழைப்பு ஒன்று கவிவாணருக்கு வந்தது. இந்தியர்களை இழிவாக நடத்தும் பிரிட்டிசுக்குடியேற்ற நாடுகளின் போக்கை எதிர்ப்பதற்கு அறிகுறியாக அந்த அழைப்பினை ஏற்கக் கவிவாணர் மறுத்து விட்டார். ஆனால், அமெரிக்காவிற்குச் சென்று, சொற்பொழிவாற்றும் சுற்றுப் பயணம் ஒன்றைப் பாண்டு என்பவரோடு ஏற்பட்ட ஒப்பந்தப்படி மேற்கொண்டார். சியாட்டில் (Seattle) என்ற இடத்திலுள்ள பெண்கள் கழகம் அவரை வரவேற்றது; அங்கே " தேசீய மதம் " என்பதைப் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார். மேல்நாட்டுத் தேசீயத் துரைத்தனங்கள் மண்ணாசை கொண்டு மன்னர் மன்னராக விரும்பும் போக்கினைத் தாக்கிப் பேசினார். இந்தியாவில் ஆங்கிலேயரது ஆட்சியைக் கடுமையாகக் கண்டித்தார்.

## தேசீயம்

" ஐரோப்பியத் தேசீயப்போர் பழிக்குப் பழிவாங்கும் போரேஆம். நெஞ்சுவிளங்கவேண்டிய இடத்தில் சடப்பொருட் குப்பையே வளர்கிறது. மக்களுறவு நடமாட வேண்டிய இடத்தில் சூழ்ச்சியும் தந்திரமும் நடமாடுகிறது. இதனை, மனிதன் தன் ஆளுமையைக் காக்கவும் தன் வாழ்வைக் காக்கவும் வேண்டுமானால் எதிர்த்தே தீரவேண்டும். தேசியம் என்ற குழறுபாட்டை எல்லோரும் உணர வேண்டும். அழகிய கடவுட் படைப்பான மனிதன், தேசியம் என்ற தொழிற்சாலையின் நின்றும் போர்ப் பொறியாகவும், பணப் பொம்மையாகவும், எந்திர வெறியாகவும் அங்கெழும் கணக்கற்ற எண்ணிக்கையில் திளைத்து வெளிவருகிறான். அரசியலாரும் தொழில் முதலாளிகளும் ஆட்டிவைக்கும் பொம்மலாட்டமே காண்கிறோம். இதன் பேயாட்டமே போராட்டம். இந்தத் தன்னல வழிபாடு அச்சத்தையும், கொடுங்கோன்மையையும், வஞ்சகத்

தையும் ஐயத்தையும், முடிந்த முடிவான குறிக்கோள் களாக, ஆக்கிவிட முடியாது. இந்த எந்திரம் வெறி கொண்டு தன்னைத்தானே பிய்த்தெறிகிறது. ஒரு தேசீயத்தையும் சாராத நாம், மண்ணோடு மண்ணாய் வீழ்ந்து வணங்கி நிற்கிறோம். செருக்கின்காலில் நாம் உதைபட்டுக் கிடந்தாலும், இந்த மண்ணை வாழ்த்து கிறோம். உயிர் வளம்கொழிக்கும் மண் – அழகு நட மாடும் மண் – வழிபாடு நிறைந்த மண் அன்றோ இது? கடவுளை நம்பி, மனிதனது ஆன்மாவை நம்பி, இருட்டில் பழகியிருக்கும் காலத்தும், விடியற் காலத்தை எதிர் பார்த்து நிற்கிறோம். அன்பாக இரத்தக் கறையைக் கழுவும் வழிபாட்டுத் தீர்த்தத்தைக் கொண்டு வரு கிறோம்; மனித வரலாறு புனிதமாகப் போகிறது. உதைபட்ட மண் இந்த நீரில் சேருகி வளம் கொழிக் கும்!" என்று பேசினார்.

எதிர்ப்பு

போர்ட்லெண்ட், சான்பிரான்சிஸ்கோ முதலிய இடங்களிலும் பேசினார்; சகோதரத்துவம் என்கின்ற அடிப்படைக் கொள்கையின் வளர்ச்சியினையும் மனித நிலையங்கள் சடநிலையங்களாக அமைகின்ற போக்கின் இழிவினையும் வற்புறுத்தினார். ஆனால், அந்நாட்டுப் பத்திரிகைகள் தேசீயத்தைப் பற்றி இவர் ஆற்றிய சொற்பொழிவுகளை வன்மையாகத் தாக்கின. ஆனால் பிரான்சிஸ்கோவிலிருந்த சப்பானியர்கள் இவரை வர வேற்றுக் கொண்டாடினார்கள். லாஸ் ஏஞ்செல்ஸ் என்ற இடத்திலுள்ள பொதுமக்களும் இவரை வரவேற்றனர். பதரெவ்வுஸ்கி என்பவருடைய இசை அரங்கைக் கேட்டு மகிழ்ந்து அவரோடு நீண்ட நேரம் கவிஞர் உரையாடினார். நியூயார்க்கிலுள்ள கொலம்பியா நாடக அரங்கில், தம்முடைய சிறுகதை ஒன்றினைப் படித்துக் காட்டியதோடு, "இராசா" என்ற தம் நூலின் மொழி பெயர்ப்பில் இருந்தும் சில பகுதிகளைப் படித்துக் காட்டினார்.

**புரட்சிக் கூட்டம்**

இந்தியப் புரட்சிக் கூட்டம் இங்கிருந்தது. அதன் தலைவர் இராமசந்திரர், அவர் ஒரு சீக்கியர்: கவிவாணர் பிரிட்டிசாரின் வீரப் பட்டத்தின் நன்மையையும் அனுபவித்துக் கொண்டே, அதன் நிழலில் ஒதுங்கி இருந்து பிரிட்டிசாருக்கு எதிராகப் பேசும் பேச்சின் முரண்பாட்டைக் காட்டிக் கவிஞரைத் தாக்கினர். இந்தியப் புரட்சிக் கூட்டத்தார் கவிஞர் உயிருக்கே உலை வைப்பதாகச் செய்தி பரவியபோதும், அதனை ஒரு சிறிதும் கவிஞர் நம்ப மறுத்து, அங்குள்ள துரைத்தனத்தாரின் போலீசு பாதுகாப்பை வேண்டா என்று ஒதுக்கித் தள்ளினர். இராமசந்திரரோ அத்தகைய சதி ஒன்றும் இல்லை என்று வெளியிட்டார். இந்தக் குழப்பங்களின் காரணமாக அவருடைய நண்பர்களில் சிலர் பேச்சுப் பயணங்களைக் கவிஞர் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினர். கவிஞரோ தம்முடைய திட்டத்தை மாற்ற மறுத்துவிட்டுப் பல இடங்களிலும் சென்று சொற்பொழிவு ஆற்றிவந்தார்.

**கண்டனமும், பாராட்டும்**

‘நோயில் இனிக்கும் மன நஞ்சு’ என்று இவருடைய சொற்பொழிவை—“தேசீயம்” என்ற சொற்பொழிவை-எள்ளி நகையாடிய அமெரிக்கப் பத்திரிகையும் உண்டு. கிளீவ்லண்டில் உள்ள 20-ஆம் நூற்றுண்டுக் கழகத்தில் கவிஞர் அமெரிக்காவின் பொன்னுசையைத் தாக்கிப் பேசினர். பத்திரிகையாளருக்கு நியூயார்க்கில் கவிஞர் தந்த பேட்டியிலும் மேல் நாட்டுத் தேசீயத்தைத் தாக்கியதோடு ஆசிய மக்களுக்கு எதிராக அமெரிக்கா நிற்பதனையும் கண்டித்தார். “ஆளுமை” என்பதைப் பற்றியும், “ கலை ” என்பதைப் பற்றியும் பேசினர். ஏல் பல்கலைக் கழகத்தில், ஒளியையும் உண்மையையும் நாடும் அறிஞர் எனப் பாராட்டப் பெற்று அதன் தலைவரால் வரவேற்கப்பட்டார்.

நியூயார்க்கில் டிசம்பர் 12-இல் கவிஞர் பேசிய பொழுது அந்த மன்றம் நிறைந்து விளங்கியது. கீலீவ்லண்டுக்குத் திரும்பிச் சென்று ஷேக்ஸ்பியர் பூங்காவில் ஒரு மரத்தை நட்டார். கொலரா டோவிலுள்ள புகழ்பெற்ற நீர் ஊற்றுகளைக் கண்டு களித்துச் சான்பிரான்சிஸ்கோவுக்குத் திரும்பினார். பால் ரிச்சார்ட் என்பவர் "தேசங்களுக்கு" என்று எழுதிய நூலுக்குக் கவிஞர் ஒரு முன்னுரை எழுதித் தந்து சப்பானுக்குப் புறப்பட்டார். வழியில் ஹோனலுலுவில் ஒரு நாள் தங்கினார். பின், பியர்சனைச் சப்பானிலேயே தங்கவிட்டு, கவிவாணர் 1917 மார்ச்சு மாதம் 17-ஆம் தேதி கல்கத்தாவுக்குத் திரும்பினார்.

---

## 2. அரசியலும் மொழியும்

**விசித்திரம்**

கல்கத்தாவிற்கு நம் பாவணர் திரும்பியபோது புதிய வளர்ச்சி ஒன்று கண்டு வியந்து மகிழ்ந்தார். கலைத்தொழிலுக்கும், கைத்தொழிலுக்குமென எழுந்த விசித்திரப் பள்ளி ஒன்றினை அவனீந்திரநாதரும், இரதீந்திரநாதரும் தம் சோராசம்கோ வீட்டில் நிலை நாட்டி இருப்பதைக்கண்டு, தாகூர் அவர்கள், வியப்பும் மகிழ்ச்சியும் கொண்டார். மற்றொரு வியப்பினையும் அவரே விளைவித்தார். அதுவே விசித்திரக் கழகம். வங்காள அறிஞர்களும், கலைஞர்களும், கூடுவதற்கு அக்கழகம் வாய்ப்பாக அமைந்தது.

**பேச்சு மொழி**

பிரமாதசவுத்திரி அவர்கள் இலக்கிய மொழியை மக்களிடையே பரப்புவதற்கு என்றே பேசுவது போல வங்காள மொழி எழுதப்பட வேண்டுமென்று கூறி வந்தார். அதனை நம்முடைய பாவணர் பாராட்டி வற்புறுத்திப் பத்திரிகையில் எழுதினர். இவ்வாறு பொதுமக்கள் பேசும் மொழியில் உள்ள உயிர்த் துடிப்பை இலக்கியத்திலும் புகவிட்டு வங்காள மொழியைப் பிழைக்க வைத்தார் கவிஞர். இதனை எள்ளி நகையாடிய பழைய புலவர்கள், இவர் எழுதியவற்றைத் தந்து மாணவர்களைத் திருத்துமாறு சொன்னார்களாம். ஆனால், இவர்கள் கையிலிருந்தும் மொழியைக் காப்பாற்றிய பெருமை கவிஞரையே சாரும். பாரதியார் தமிழ்நாட்டில் செய்த தொண்டினைத் தாகூர் வங்காளத்தில் செய்தார் எனலாம்.

**பாடல்கள்**

தம்முடைய பிறந்தநாளைக் கல்கத்தாவில் விசித்திர கழகம் கொண்டாடிய விழாவில் கவிஞர் கலந்து கொண்டார். "தபஸ்வனி," "முதல் எண்" என்ற இரு

சிறுகதைகளையும் அப்போதுதான் அவர் எழுதினர். பெசண்டு அம்மையார் ஹோம்ரூல் இயக்கத்தைத் தொடங்கி நடத்திவந்தது கண்டு அஞ்சிய துரைத் தனம் அவரை நீலகிரியில் ஓர் இடத்திலேயே இருக்கு மாறு கட்டளையைப் பிறப்பித்தது. இதனைக் தாகூர் வன்மையாகக் கண்டித்தார். 4-8-1917-இல் கல்கத்தா இராம்மோகன் நிலையத்திலும், ஆல்பிரைட் நாடக அரங்கிலும் "கருத்தர் விரும்பியபடியே" என்ற அவரது தலைசிறந்த அரசியல் கட்டுரையைப் படித்தார். பண்டித மாளவியாவின் வேண்டுகோளுக்கிணங்கிக் கவிஞர் ஒரு தேசியப்பாடல் பாடினர். அது "தேச தேச நந்திதகரி" என்று தொடங்குகிறது. முதன் முதலாக இதனை இராம்மோகன் நூல் நிலையக் கூட்டத்தில் கவிஞர் பாடினர். "சங்கீத விடுதலை" என்ற கட்டுரையையும் அவர் படித்தார்.

## அடக்கு முறை

அப்போது, வங்காளத்துரைத்தனம், அரசியல் தொண்டர்களை அடக்கி அழித்துவிட முயல்வதனைக் கவிஞர் கண்டார். சிறைச்சாலையிலும், காவலிலும் விசாரணையின்றியே அவர்களை அடைத்ததனைக் கண் டார். இதன் பயனுகச் சிலர் பித்தர் ஆதலையும், ஒரு சிலர் தற்கொலை புரிந்து கொள்வதையும் கண்டு வருந் தினர். இவற்றையெல்லாம்பற்றி ஆங்கில நண்பர் ஒரு வருக்குக் கடிதம் ஒன்றில் எழுதித் தம் உணர்ச்சியை வெளியிட்டார். அக்கடிதம் இந்தியாவில் செப்டம்பர் 7-இல் வெளியாயிற்று. அப்போதைய வங்காளக்கவர் னர், சட்டசபையில் ஒரு சொற்பொழிவு ஆற்றிப்பாவா ணர் கூறிய குற்றச் சாட்டுகள் எல்லாம் ஆதாரம் அற்றவையென விளக்கினர். 1-11-18-இல் இச்சொற் பொழிவிற்கு நம் பாவாணர் மறுப்பு ஒன்று எழுதினர்; தாம் நேரில் அறிந்ததொரு நல்ல எடுத்துக் காட்டினை யும் அவர் தந்தார். சாந்திநிகேதனத்தில் கற்றுவந்த் மாணவ இளைஞன், ஆண்டுத் தேர்வில் முன்னேறுமை

யால் மனம் ஒடிந்து பள்ளியைவிட்டு ஓடி விட்டானும். அவனைப் பிடித்துக் குற்றச் சாட்டோ விசாரணையோ இன்றித் துரைத்தனத்தார் காவலில் அடைத்து வைத்தார்கள். இதனைச் சுட்டிக்காட்டினர் கவிஞர்.

**பெசண்டு**

வங்காளக் காங்கிரசுத் தொண்டரிடம் ஒருவிவாதம் அப்போது நிகழ்ந்துவந்தது. காவலில் இருந்த பெசண்டு அம்மையாரையே, கல்கத்தாவில் 1917-இல் டிசம்பரில் கூடப்போகும் இந்திய தேசீய காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுப்பதைப் பற்றியது அந்த விவாதம். சுரேந்திரநாத பானர்சியும் அவருடைய கட்சியினரும் இதனை வன்மையாக எதிர்த்தனர். நம் பாவாணர் இந்த எதிர்ப்பிற்கு மாருகப் பெசண்டு அம்மையாரை மனமார ஆதரித்தனர். மோதிலால் கோஷ், சி. ஆர். தாஸ், விபினசந்திர பாலர், பசுல் ஹக் முதலியோர் இவரைக் கண்டு, காங்கிரசின் வரவேற்புக் குழுவின் தலைவராக இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். செப்டம்பர் மாதம் 11-ஆம் தேதி இராய் வைகுந்தநாத சேன் பகதூர் அவர்களுக்குப் பதிலாக வரவேற்புக் குழுவின் தலைவராக அவர்கள் இவரைத் தேர்ந்தெடுத்தனர். மிதவாதிகள் எதிர்ப்பு இன்றிப் பெசண்ட்டு அம்மையாரையே காங்கிரசுத் தலைவராக ஒப்புக்கொண்டதனால் வரவேற்புக்குழுவின் தலைமையைப் பழையபடி இராய் வைகுந்தநாத சேன்பகதூருக்குகே விட்டுக் கொடுத்தார். கவிஞர் தேசீய காங்கிரசு கூடிய பொழுது "வந்தேமாதரம்" என்ற பாடலை முதலில் பாடியதோடு அதன் பின்னர் "இந்தியாவின் பிரார்த்தனை" என்ற தம் புதிய பாடலையும் கவிஞர் பாடினர். திரண்டிருந்த மக்கள் எல்லாம் ஆரவாரத்துடன் அதனைப் புகழ்ந்து பாராட்டினர்கள். விசித்திர கழகத்தின் மன்றத்திலே தாகூர் அவர்களின் 'அஞ்சல் நிலையம்' என்ற நாடகம் நடைபெற்றது. அதில் தாகூர்–தாவாகத்

தாகூர் அவர்களே நடித்தார்கள். காந்தியடிகள், திலகர், மாளவியா, பெசண்டு அம்மையார் முதலான பல தலைவர்கள் இதனைக் கண்டு களித்தார்கள்.

**இந்து முசுலீம் கலகம்**

பீகாரில் சகபாதில் இந்து முசுலீம் கலகங்கள் மூளத் தொடங்கின. இவை தாகூர் மனத்தைப் புண் படுத்தின. "பெருமையும் சிறுமையும்" என்ற புகழ் பெற்ற அவருடைய அரசியல் கட்டுரை அப்போது தான் அவர் உள்ளத்திலிருந்து வெளிவந்தது.

**மாண்டேகு**

இந்திய அரசியல் சீர்திருத்தத்தை யொட்டி மாண்டேகு இந்தியாவிற்கு வந்தார். அப்போது அவர் ஆங்கிலப் பாராளுமன்றத்தில் இந்திய அமைச்சராக விளங்கினர்; அவரைத் தாகூர் தம்முடைய சோரா சங்கோ வீட்டில் வரவேற்ருர்.

**சாட்லர்**

அங்கிருந்து சாந்தி நிகேதனத்திற்குக் கவிஞர் திரும்ப வேண்யதாயிற்று. அப்போதுதான் கல்கத்தாப் பல்கலைக் கழகக் கல்விக்குழுவானது பல்கலைக்கழகப் படிப்பினைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தது. சர் மைக்கேல் சாட்லர் அதன் தலைவர். சாட்லரும் அவருடைய குழுவினரும் சாந்திநிகேதனத்திற்கு வந்த போது அவர்களை எதிர்கொண்டு வரவேற்கவே தாகூர் அங்கே போகவேண்டியதாயிற்று. அந்நாளைய இந்தியத் துரைத்தனத்தின் கல்விக் கொள்கையை வன்மையாகத் தாகூர் தாக்கி நையாண்டி பண்ணிக் கதை ஒன்று எழுதினர். "கிளிகளைப் பயிற்றுதல்" என்பதே அந்த நையாண்டிக் கதையின் தலைப்பு. கல்கத்தாவிற்குத் திரும்பி வந்து "செய்யுள் சந்தம்" என்பதைப் பற்றிச் சொற்பொழிவாற்றினர். "பலதகம்" என்ற பாடல்களை, அப்போதுதான் அவர் இயற்றினர். அவருடைய 57-ஆம் பிறந்த நாளும் வந்தது. அதனை விசித்திர கழகத்தார் சிறப்பாகக் கொண்டாடினர்கள்.

# 3. வில்சனுக்குக் கடிதம்

## துரைத்தனமும் சாந்திநிகேதனமும்

கௌர்லே என்பவரே வங்காளக் கவர்னரின் அந்தரங்கச் செயலாளர். அவர் 9-5-18-இல் ஆண்டுரூசைக் கண்டார். சான்பிரான்சிஸ்கோவிலிருந்து துரைத்தனத்துக்கு வந்துள்ள செய்தியை அவரிடம் எடுத்து விளக்கினர். அந்த நகரிலுள்ள இந்தியப் புரட்சி இளைஞர்கள் விசாரணைக்குட்பட்டு இருக்கும் போது தாகூர் அவர்களோடு தொடர்பு கொண்டு இருந்தார் என்பதே அப்போது கிடைத்த செய்தி. பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள ஆங்கில அரசை அமெரிக்கப் பயணத்தின்போது தாகூர் தாக்கிப்பேசியதன் காரணமாகப் பயணத்துக்கு வேண்டிய செலவுக்கு எல்லாம், சர்மானியரிடமிருந்து நம் புலவர் பணம் பெற்ருர் என்ற செய்தியும் காற்றில் மிதந்தது. இதனைக்கேட்கப்பொருத மனம் பெற்ற நம் பாவாணர் அமெரிக்க நாட்டுத் தலைவர் வில்சன் என்பார்க்குச் சினப்பொறிக்கும் ஒரு கடிதமொன்றைத் தீட்டினர். சில காலமாகக் கவிஞர் வெளிநாட்டுப் பயணத்தைப் பற்றி எண்ணிக் கொண்டுமிருந்தார்; கல்கத்தாவிலேயிருந்த அமெரிக்கத் தூதுவரும் அமெரிக்க மக்கள் இவரைப் பொதுவாக மகிழ்ச்சியுடன் வரவேற்பர் என்று உறுதி தந்திருந்தார்; இருந்தாலும் காற்றில் மிதந்து வந்த செய்திகள் காரணமாக வெளிநாட்டுப் பயணத்தைப் பற்றிய எண்ணத்தை அடியோடு விட்டுவிட்டார். சப்பான் துரைத்தனத்தார் பியர்சனைச் சிறை செய்து ஆங்கில நாட்டிற்கே போக நாடுகடத்தி விட்டார்கள். சப்பானிலும், அமெரிக்காவிலும் ஆங்கிலேயருக்கு எதிராகப் பல செயல்கள் செய்து வந்தார் பியர்சன் என்பதே இதற்குக் காரணம் என்று கூறினர்கள். இந்தப் பிரிட்டிசுத் துரைத்தனத்தின் தூண்டுதலினலேயே

பியர்சன் இவ்வாறு சப்பானிலிருந்து நாடு கடத்தப் பட்டார். திலகரும் இந்தியப் பண்பாட்டை மேல் நாட்டில் விளக்குவதற்காக ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் நம் பாவாணர் பயணம்செய்ய வேண்டுமென்று தூண்டி அதற்கு 50,000 ரூபாய் உதவ முன்வந்தார். ஆனால், இருந்த சூழ்நிலைகளின் காரணமாக நம் தாகூர் அதனையும் மறுத்துவிட வேண்டியதாயிற்று.

### துன்பத்தில் அமைதி

துன்பத்தின் மேல் துன்பம் வந்தது. 16-5-1918-இல் அவருடைய மகளார்-சரதசந்திர சக்கரவர்த்தியின் மனைவியார் — பல நாள் நோய்வாய் பட்டிருந்து, முடிவில் கல்கத்தாவில் உயிர் நீத்தார். டார்சிலிங்குக்குப் போவதாக இருந்த பயணத்தை விட்டு ஒழித்துத் தாகூர் சாந்திநிகேதனத்திற்குத் திரும்பினர். அங்கே மனத்துயரை மறக்க நான்கு திங்கள் ஆசிரியப்பணியிலேயே அல்லும் பகலும் உழைத்து அமைதி தேடினர். பின்னர்ச் சென்னைக்குப் பயணமாகி இடையிலே சில நாட்கள் பிதாபுரத்தில், பிதாபுர மகாராசருடன் தங்கினர். பின்னர்க் கல்கத்தாவிற்குத் திரும்பி விட்டார். டிசம்பர் மாதத்தில் அசீ சக்கரவரவர்த்தியும் இறந்து போயினர்.

### ஓர் எண்ணம்

அப்பொது நம்முடைய பாவாணருக்கு கருத்து ஒன்று தோன்றியது. கீழ் நாட்டில் பல வகையாகச் சிறந்த பண்பாடுகளையும் வளர்ப்பதற்கென உண்மையான நடுநிலை அமைப்பு ஒன்றினைப் படைக்க வேண்டும் என்பதே அவருக்குத் தோன்றிய சிறந்த எண்ணமாகும். சாந்திநிகேதனத்தில் அதற்கு ஒரு கடைகாலும் போட்டார். இதே சமயத்தில் தான் "காதலர் கொடை", "மாசி முதலிய கதைகள்" என்ற நூல்களை மாக்மில்லன் கம்பெனியார் வெளியிட்டார்கள்.

## தென்னிந்தியப் பயணம்

கவிஞர் தம் தென்னிந்தியப் பயணத்தைத் தொடங்கினர். 10—1—1919-இல் பங்களூர் வந்து சேர்ந்தார். அங்கிருந்து மைசூர், நீலகிரி, கோயம்புத்தூர், பாலக்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி, திருவரங்கம், கும்பகோணம், தஞ்சை, சென்னை முதலிய இடங்களுக்கு எல்லாம் சென்ருர். அங்கங்கே மாபெரும் கூட்டம் பாவலர் பெருமானுடைய கருத்தாழம் நிறைந்த சொற்களைக் கேட்கத் திரண்டது. "ஆரணியத்தின் நற்செய்தி" "இந்தியப் பொதுமக்களின் (folks) மதங்கள்" "இந்தியப் பண்பாட்டின் உயர்நிலை" என்ற பொருள்களைப் பற்றிப் பேசினர். சென்னையிலே பெசண்டு அம்மையாரின் விருந்தாளியாக அடையாற்றில் தங்கினர். பெசண்டு அம்மையார் கண்ட "தேசீயப் பல்கலைக் கழகத்தின்" வேந்தராகப் பொறுப்பேற்று அப்போது சொற்பொழிவு ஆற்றினர். அங்கிருந்து கல்கத்தாவுக்குத் திரும்பியதும் "கல்வி" என்பதைப் பற்றி, மாபெரும் கூட்டம் ஒன்றில், தம் அழகிய கருத்தினை வெளியிட்டார். இதன் சிறப்பு என்னவென்ருல் இதுவே முதல் முதலாக இவர் ஆங்கிலத்தில் பேசிய பேச்சாகும். போசு நிலையத்திலும் "ஆரணியத்தின் நற்செய்தி" என்பதைப் பற்றியே பேசினர்.

———

# 4. வீரப்பட்டத் துறவு

**சாலியன்வாலாபாக் படுகொலை**

காந்தியடிகளார் தமது சத்தியாக்கிரக இயக்கத்தைத் தொடங்கினர். மக்கள் எதிர்ப்பை ஒரு சிறிதும் பொருட்படுத்தாது ரவுலட்டுச் சட்டத்தைத் துரைத் தனத்தார் நிறைவேற்றியதை எதிர்த்தே இந்தச் சத்தியாக்கிரக இயக்கம் தொடங்கியது. ஆனால், தாகூர் அவர்களுக்கோ இதனைப்பற்றியதொரு பெருங் கவலை பிறந்தது. அடக்க முடியாத சில ஆற்றல்களை இவ்வியக்கம் வெளிக்கிளப்பி விடுவதால் தீமை வருமோ என அவர் அஞ்சினர். சாலியன் வாலாபாக்கில் படை ஒன்று மின்றி வெறுங்கையராக நின்ற அமிர்தசரசு மக்கள் ஏப்ரல் 13-ஆம் தேதி சுட்டு வீழ்த்தப்பெற்றனர். அதைத் தொடர்ந்து பஞ்சாபில் போர்க் காலச் சட்டம் பறை அறையப்பெற்றது. அதன் கொடுமைகள் எல்லாம் தலைவிரித்தாடின. செய்திகளைத் தணிக்கை செய்ததன் காரணமாகத் துரைத்தனத்தாரின் கொடுங்கோற் செயல்கள் வெளி மாகாணங்களில் தெரியவேயில்லை. மே மாதம் முடிவில் இக்கொடுமைகளை எல்லாம் கவிஞர் பெருமான் அறிந்தார். பஞ்சாபிற்குப் போக வேண்டும் என்று மிக மிக முயன்றார். ஆனால், அரசியல் தலைவர்கள் அதற்குத் துணை நில்லாமையால் கல்கத்தாவிற்குத் திரும்பினர். இந்தக் கொடுமைகளை எல்லாம் எதிர்த்து ஒரு பொதுக்கூட்டம் கூட்ட முயன்றார். தாமே அதில் தலைமை பூணவும் உடன்பட்டார். ஆனால் அவர் ஒரு கூட்டமும் கூட்ட முடியவில்லை.

**சர் பட்டத் துறவு**

மே மாதம் 30-ஆம் நாள் அன்று வரலாற்றுப் புகழ் மிக்க தம் கடிதத்தை அந்நாளைய அரசப் பிரதிநிதியான செம்சுபோர்டுக்கு எழுதினர். தம் வீரப்பட்டத்தையும் (Sir) அதன் வழியே துறந்தார். கடுமையின்

துயரத்தில் ஊமைகளாய் மருண்டு நிற்கும் தம் தாய் நாட்டு மக்கள் கோடிக்கணக்கில் துரைத்தனத்தை எதிர்ப்பதற்கு அறிகுறியாகத் தம் ஒரு குரல் கொடுத்தே தாம் இக்கடிதத்தை எழுதியதாக அதில் கவிஞர் கண்டு இருந்தார். அப்போதும் சாந்திநிகேதன ஆச்சிரமத்தில் திங்கள் வெளியீடாக வந்த சாந்திநிகேதனப் பத்திரிகைக்குப் பல கட்டுரைகளை எழுதி வருவதைக் கவிஞர் விடவில்லை.

**விசுவபாரதி**

3-ஆம் தேதி சூலை மாதம் 1919-இல் விசுவபாரதி உருவாகியது. பழைய இந்திய இலக்கியங்களின் உயர்நிலை ஆராய்ச்சிக்கென "வித்தியா பவனம்" அன்று திறக்கப்பெற்றது. பின்னர்த் திபேத் இலக்கியங்களையும், சீன இலக்கியங்களையும் ஆராய்வதற்காகவும் அது வளர்ந்தோங்கியது. விது சேகர சாத்திரியார் அதன் தலைவரானார். "இந்தியப் பண்பாட்டின் உயிர்நிலை" என்பது பற்றிய தாகூரின் சொற்பொழிவுகளும் வெளியாயின. பல இசைப் பாடல்களை இப்போது நம்முடைய கவிஞர் இயற்றினார். சாந்திநிகேதனத்தின் வகுப்புகளையும் ஆசிரியராக இருந்து கவிஞரே நடத்தி வந்தார். "சரதோற்சவம்" என்ற தம் நூலை "ரீன்சோதனை" என்பதாக மாற்றி அமைத்துச் சாந்திநிகேதத்தில் நாடகமாக நடிக்கச் செய்தார். ஷில்லாங்கில் இலையுதிர் காலத்தைக் கழித்தார். பின்னர்ச் சாந்திநிகேதனத்திற்குத் தாகூர் திரும்பினார். மணிபுரியிலிருந்து தம்முடன் அவர் அழைத்து வந்த இரண்டு ஆசிரியர்களின் உதவியால் நடன வகுப்பு ஒன்றையும் சாந்திநிகேதனத்தில் தொடங்கினார் ரொனல்ட்ஷே என்ற கவர்னர் 1920 பிப்ரவரியில் சாந்திநிகேதனத்திற்கு வந்தார். தாகூர் தந்த வரவேற்பையும் புதிய நிலையத்தின் உண்மை நிலையையும் கண்டு அவர் மகிழ்ந்தார். "ராசா" என்ற நூலை "அருப்ரதன்" என்பதாகக் கவிஞர் அமைத்தார்.

## வெளியில் விசுவபாரதி

குசராத்து இலக்கியக் கழகத்தின் ஆண்டு விழாவில் பங்கு கொள்ள வேண்டும் என்று காந்தியடிகள் கவிஞரை வேண்டிக்கொண்டார். அதற்கிணங்கக் கவிஞரும் அங்குச் சென்று தொண்டாற்றினர். காந்தியடிகளின் சபர்மதி ஆசிரமத்தில் ஒரு நாள் முழுவதும் தங்கி ஆச்சிரம நடவடிக்கைகளை நேர்முகமாகக் கண்டு நன்கு தெரிந்து கொண்டார். அங்கிருந்து பவநகருக்கும், லிமிடிக்கும் சென்றார். லிமிடி அரசர் சாந்திநிகேதனத்திற்கென 10,000 ரூபாய் நன்கொடை வழங்கினர். அகமதாபாத், பம்பாய், சூரத்து முதலிய இடங்களுக்குச் சென்று மே மாதத்தில் கவிஞர் கல்கத்தாவிற்குத் திரும்பினர்.

———

# 5. ஐரோப்பியப் பயணம்

**கடலில்**

கவிஞர், மே மாதம் 11-ஆம் தேதி தம்முடைய மக ஞேடும் மருமகளோடும் கல்கத்தாவை விட்டு ஐரோப்பா வுக்குப் பயணமானுர். பம்பாயிலிருந்தே அவர் கப்பல் ஏறிஞர். அவருடன் அந்தக் கப்பலில் ஆகாகான் அவர்களும் சென்ருர். ஆகாகான், ஹப்(f)ஹசிலில் இருந்து பல பக்திப் பாடல்களைக் கவிஞருக்குப் படித் துக் காட்டியதோடு சூ(f)பிக் கொள்கை பற்றியும் கவிஞரோடு பலமுறை பேசி வந்தார். ஆகாகாஞேடு ஆள்வார் மகாராசாவும், நவ நகரின் சாம் சாஹிபும் அக்கப்பலில் வந்தனர். சாந்திநிகேதனத்தில் கவிஞர் இயற்றிய பிரார்த்தனைச் சொற்பொழிவுகளை, அந்தக் கப்பற் பயணத்தின் போதே, கவிஞர் மொழிபெயர்த்து வந்தார். இவை பின்னர் 'எண்ணத்தின் சுவடுகள்' என்ற தலைப்பில் வெளிவந்தன.

**இங்கிலாந்தில் பாராட்டு**

ஜூன் 5-ஆம் தேதி இங்கிலாந்து சென்று இறங்கி ஞர்; கவிஞரைப் பாராது மூன்று ஆண்டுகள் கழிந்த பின், மறுமுறையும் கவிஞரைப் பியர்சன் வரவேற்ருர். இங்கிலாந்தில் ரோதன்ஸ்டைன், ஹட்சன், பெர்னுட் ஷா, கில்பட் மர்ரே, இரசிய ஓவியரான நிகலஸ் ரோரிச் முதலியரோடு கவிஞர் கலந்து பேசிஞர். சூன் 19-ஆம் தேதி அங்குள்ள மாணவர் கூட்டத்தில் பேசச் சென் ருர். முதலில் அக்கூட்டத்திற்கு அந்நாளைய அரண் மனைப் பாவாணரான இராபெட் பிரிட்ஜஸ் தலைமை பூண்பதாக இருந்தது. ஆனுல், பின்னே அப்பாவாணர் கூட்டத்திற்கு வராமைக்கு வருத்தம் தெரிவித்துக் கொண்டார். அரேபியப் புகழ்பெற்ற லாரென்ஸ் என் பாரையும் அப்போதுதான் கவிஞர் கண்டார். அரேபிய மக்களுக்குத் தாம் கொடுத்த சொல் ஒன்றையும் நிறை

வேற்றத் துரைத்தனத்தார் உதவாமையால் அரேபியர் முகத்திலேயே, இனித் தாம் விழிக்க முடியாத நிலைமைக்கு வந்து விட்டதாக லாரன்சு அப்போது வருந்தி வருந்திக் கூறினர். கவிஞர் ஆக்சுபோர்டிலிருந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம் சென்றார். அங்கே பேராசிரியர்களான ஆண்டர்சன், லோவெஸ் டிக்கின்சன், கெயின்சு முதலியோரைக் கண்டு கவிஞர் அளவளாவினர். கிழக்கு மேற்கு ஒற்றுமைக் கழகம் அவர்க்கெனப் பாராட்டு விழாக் கூட்டம் ஒன்று கூட்டியது. அதற்கென லாரென்சு பின்னியன் என்பார் எழுதிய பாட்டு ஒன்றை அக்கூட்டத்தில் சிபில் தாரண்டைக்கு என்ற புகழ்பெற்ற ஆங்கில நடிகை படித்தாராம்.

## இங்கிலாந்தில் இந்திய அரசியல்

இலண்டனில் உள்ள இந்திய அலுவலகத்திற்குக் கவிஞர் பெருமான் சென்றார். அப்போது இந்திய அமைச்சராக இருந்த மாண்டேகுவையும் அவருக்குத் துணையமைச்சராக இருந்த சின்ஹாப் பிரபுவையும் கண்டு அவர்களோடு பஞ்சாப் செய்திகளைப் பற்றிப் பேசினர். இந்தியா வேண்டுவது படைத்தலைவர் டயரைத் தண்டிப்பது அல்ல என்றும், பிரிட்டிஷ் தேசம் டயர் செய்த குற்றத்தை அறநிலையில் கண்டிக்க வேண்டும் என்பதே இந்தியாவின் நோக்கம் என்றும் கவிஞர் வற்புறுத்தினர். பிரபுக்கள் சபை, டயரை ஒரு சிறிதும் இந்தியாவிடம் ஈவிரக்கமின்றிப் பாராட்டியது; குற்றம் ஒன்றும் அவர் செய்யவில்லை என்று முடிவு செய்தது. இனவெறியின் அலங்கோலம் அந்த விவாதத்தில் தலைவிரித்தாடியதும் கவிஞர் மனத்தை அளவுகடந்து புண்ணுக்கியது. பல பெருமக்கள் செம்சுபோர்டுக்குப் பின் மாண்டேகுவே அரசப் பிரதிநிதியாக வரவேண்டும் என்று ஒரு மனுவைத் தயாரித்து, அதனை அந்நாளைய ஆங்கில முதலமைச்சரான லாயிடு சார்சிடம் அளிக்க முயன்று கொண்டிருந்

தார்கள். அந்த வேண்டுகோளில் கவிஞர் பெருமானும் கையெழுத்திட்டார்.

## இராம் மோகனுக்கு வழிபாடு

பிரம்ம சமாசத்தைக் கண்ட பெருமகனுராகிய இராம்மோகன்ராயின் கல்லறை, பிரிஸ்டல் மாநகரத்தில் விளங்குகிறது. பிரம்ம சமாச இயக்கத்தில் ஈடுபட்ட குடும்பத்தில் வந்த கவிஞர் அதனைக் காணவேண்டு மென்ற பேரவாவோடு அங்குச் சென்று கண்டு தம் அஞ்சலியைச் செலுத்தி மகிழ்ந்தார்.

## பிரான்சில்

கவிஞர் இங்கிலாந்திலிருந்து ஸ்காண்டநேவியா விற்குப் பயணமாக இருந்தார்; ஆனுல், புறப்படும் போது அந்தப் பயணத்தை விட்டொழித்தார். ஆங்கில நண்பர்கள் பலரும் இங்கிலாந்தில் வேண்டுமென்றே முகமலர்ச்சியன்றித் தம்முடன் புழங்கியதனைக் கண்ட மனம் "கவலை ஒழிந்ததே" என்ற இன்பப் போக்கில் பிரான்சு சென்று அடைந்தார். பிரான்சிலே தலைசிறந்த செல்வராகக் கருதப் பெற்ற காம் என் பாரின் விருந்தாளியாகப் பாரிசு மாநகரத்தில் தங்கினுர். பேராசிரியர்களான சில்வன் லெவியையும், தும்ரூம் என்பாரையும் அங்கே கண்டு குலாவினுர். வடபிரான்சின் போர்க்களங்களை நேரில்போய்க் கண்டார். ஆனுல், அங்குத் தோன்றிய அழிவுக் காட்சிகளால் மனம்நொந்து மாழ்கினுர். தாம் மிகமிக விரும்பும் தென்பிரான்சுக்கும் போய்ச் சில நாட்கள் தங்கினுர். "கிழக்கும் மேற்கும் நேர்கூடுதல்" என்ற அழகிய சொற்பொழிவை அங்கேதான் உருவாக்கினுர். பாரிசுக்குத் திரும்பியதும் "நோவையிலேயே" என்ற இடத்தில் அந்நகரக் கோமகளாரைக் கண்டார். அவ்வம்மையார் ஒருசிறந்த பிரஞ்சுகுலக் கவியரசி. "போர் மூண்டது" என்ற செய்தியைக் கேட்டபோது கிளமென்சோ என்பாரோடு தாம் உடனிருந்ததாயும்

அப்போது அவர்கள் இருவரும், வாட்டமும் வருந்திய கலக்கமும் தீரக் கீதாஞ்சலியின் பிரஞ்சு மொழி பெயர்ப்பையே படித்ததாயும் கவிஞரிடம் கூறினர்.

### பாராட்டும்–எதிர்ப்பும்

கவிஞரை ஹாலந்து தேசம் விரும்பி அழைத்தது. ஹேகு, லேடன், உட்ரக்ட்டு முதலிய இடங்களில் எல்லாம் சொற்பொழிவாற்றிச் சென்ருர். எங்கும் மக்கள் அவரை மனமார வரவேற்றனர். முன்னே அமெரிக்கச் சொற்பொழிவுப் பயணத்தை ஏற்பாடு செய்த பாண்டு என்பாருக்கு அங்கிருந்து, அமெரிக்காவிற்குத் தாம் வர விரும்புவதனைத் தெரிவித்தார். அமெரிக்காவில் உள்ள பொதுமக்களின் உணர்ச்சி சிறப்பாகக் கவிஞரை எதிர்த்துப் பரவுவதால், ஒரு சொற்பொழிவையும் நிகழ்த்த ஏற்பாடு செய்ய முடியாமைக்குத் தாம் வருந்துவதாக அவர் விடையளித்தார். பெல்சியத்தின் அரசர், பிரசல்சில் கவிஞரை வரவேற்ருர். ஆண்ட்டுவர்ப்பு நகரைச் சென்று பார்த்ததும் கவிஞர் பாரிசுக்குத் திரும்பினுர். இந்தியாவிலிருந்தும் இங்கிலாந்திலிருந்தும் தமக்கு வரும் கடிதங்கள், காலம் தாழ்த்தே வந்து கொண்டிருந்த புதிரை விளங்கிக்கொள்ள முடியாமல் மிக மிக மனம் எரிந்துகொண்டு நின்ருர்.

———

# 6. அமெரிக்கப் பயணம்

## அமெரிக்கா

உடனே இலண்டன் மாநகரம் திரும்பி அங்கிருந்து அமெரிக்காவுக்குப் போவது என்று முடிவு செய்தார். கிழக்கின் முறையீட்டை அமெரிக்கர்கள் கேட்டே தீர வேண்டும் என்று அவர் உறுதி கொண்டார். பியர்சனோடு பயணமாகி, 1920 அக்டோபர் 28-ஆம் தேதி நியூயார்க்கில் வந்து இறங்கினர்.

## சாந்திநிகேதனமும் ஒத்துழையாமையும்

இதற்கிடையே இந்தியாவில் காந்தி அடிகள் சௌக்கத்து அலியோடு செப்டம்பர் மாதத்தில் சாந்தி நிகேதனத்திற்கு வந்திருந்தார். கல்கத்தாவில் கூடிய தனிக் காங்கிரசு கூட இருந்தது. அதற்குப் போகும் வழியில் அங்கே அவர்கள் சென்றிருந்தார்கள். சாந்தி நிகேதனப் பள்ளி, தன் மாணவர்களைக் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தின் மெட்ரிகுலேஷன் பரீட்சைக்கு அனுப்புவது இல்லை என்று முடிவு செய்தது. கல்கத்தாக் கல்லூரிகளிலுள்ள மாணவர்கள் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து, கல்லூரிகளை விட்டு வெளியேறினார்கள்; அவர்கள் எல்லாம், சுருள் என்ற இடத்தில் கிராமத் தொண்டினைச் செய்யத் தொடங்கினார்கள்.

## காந்தியின் சத்தியாக்கிரகம் பற்றி

இத்த நிலையில் அமெரிக்கச் செய்தித்தாள் நிலையத்தார்கள், காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தைப் பற்றிக் கவிஞருடைய கருத்தைக் கேட்பது இயல்புதானே. அப்போது கவிஞர் ஆன்மீக சக்தியிலேதான் தமக்கு எப்போதும் நம்பிக்கையென்றும், விலங்காற்றலில் சிறிதும் நம்பிக்கையில்லை என்றும் தெரிவித்தார்.

## அமெரிக்காவில்

புருக்குலின் இசைக் கழகத்தில் நவம்பர் 10-ஆம் தேதி "கிழக்கும் மேற்கும் நேர்கூடுதல்" என்ற பொருள் பற்றியே சொற்பொழிவாற்றினார். பி(f)லடெல்பியா விலுள்ள மகளிர் கல்லூரியில் "வங்காள அனுபூதிக் கவிஞர்"களைப் பற்றிப் பேசினார். பிரின்ஸ்டனில் நிகழ்ந்த கால்பந்து விளையாட்டை ஆர்வத்தோடு கண்டுகளித்தார். நியூயார்க்கிலுள்ள தேசீயக் கலைக் கழகத்தின் 15-ஆம் ஆண்டு விழாவில் கலந்து கொண்டார். நியூயார்க்கிலேயே "கவிஞனது சமயம்" என்ற பொருள்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

## அவர் கருத்தும் அதற்கு எதிர்ப்பும்

கவிஞருக்கு அப்பொழுது ஒரே எண்ணம்தான் இருந்தது. விசுவபாரதிக்கு நிலையான பொருளைத் தேடவேண்டும் என்பதே அந்த எண்ணம். தமக்கு ஓர் எதிர்ப்பு எழுந்துள்ளதனை உணர்ந்தார். அடிக்கடி மிக நுட்பமாகவும், ஆனால் மிக உறுதியாகவும், எழுந்தது இது. ஓர் ஆற்றலோடு செல்வாக்கும் படைத் தவர்களின் எதிர்ப்பே இது என உணர்ந்தார். பிரிட்டி ஷாரை எதிர்த்தும் செர்மனிக்குத் துணையாகவும் கவிஞர் இருந்தார் என்பது அந்தச் செல்வாக்குள்ள கூட்டத்தின் குற்றச்சாட்டு. அக்குற்றச்சாட்டு நூற் றுக்கு நூறு பொய்யேஆம். நியூயார்க்கிலுள்ள பாடற் கழகக் கூட்டம் ஒன்றில் கவிஞர் பேசும் பொழுது ஏமாற்றம் அடைந்த தம் உள்ளத்தின் குமுறலை அடக்க முடியாது தயங்கினார். அங்கிருந்து பிப்ரவரி முதல் தேதி சிகாகோவுக்குச் சென்றார். அங்கே மோடி அம்மையாரின் விருந்தாளியாகச் சிலகாலம் கழித்தார். டெக்சாசில் ஒரு சிறு சொற்பொழிவும் செய்தார்.

## பிரான்சில்

அமெரிக்காவிலிருந்து மார்ச்சு 19-ஆம் தேதி ஐரோப்பாவுக்குப் புறப்பட்டார். இலண்டனிலும்

"கிழக்கும் மேற்கும் நேர்கூடுதல்" என்ற பொருள் பற்றியே பேசினர். மூன்று வாரங்கள் அங்குத் தங்கிய பின் பாரிசுமா நகரத்துக்குப் பறந்து சென்றார். அங்கே, முன்போலக் கான் என்பவரின் விருந்தாளி யாகவே தங்கினர். ரோமேன் ரோலந்து என்ற இலக் கியக் கலைஞரை அங்குக் கண்டு குலாவினர். கிழக்கின் நண்பர்கள் கூட்டிய கூட்டத்திலும், கான் என்பார் நிலைநாட்டிய அரசியல் சமுதாய ஆராய்ச்சித் தேசீயக் குழுவின் கூட்டத்திலும், இந்தியாவின் தன்னல மில்லாப் பொதுநிலை உணர்ச்சியைப் பற்றிச் சொற் பொழிவாற்றினர். பாரிசிலேயே சிறந்த செல்வவானு யிருந்த இந்திய முத்து வியாபாரி ஸ்ரீதரராணு என்பவர் தம்மிடமிருந்த மிகச் சிறந்ததொரு நூல் நிலையத்தை விசுவபாரதிக்கு நன்கொடையாகத் தர அதனைக் கவிஞர் பெற்றார்.

**சர்மனியில்**

ஏப்பிரல் 27-ஆம் தேதி ஸ்டார்ஸ் போர்டு வந்து அங்குள்ள பல்கலைக்கழகத்தில் "ஆரணியத்தின் நற் செய்தி" என்ற கட்டுரையைப் படித்தார். ஜெனிவா வில் "ரூசோ நிலைய"த்தில் "கல்வி" என்பது பற்றிப் பேசினர். செர்மனி முழுவதும் கவிஞரது 61-ஆம் பிறந்த நாளைக் கொண்டாடியது. பல இடங்களைச் சுற்றிப் பார்த்தபின் யூரிச் பல்கலைக்கழகத்தில் கவிஞர் பேசினர். பின், கெய்சர்லிங்கு கோமகனைத் "தரம்ஸ் டார்ட்டு" என்ற இடத்தில் கண்டு மகிழ்ந்தார். அக் கோமகனர் தம்முடைய குறிப்பிலே, "பயபக்தியோடு பாராட்டக்கூடியவர் தாகூர் ஒருவரே" என்று கவிஞர் பின் இந்தியாவிலிருந்தபோது, அக்கோமகனர் பின்னே வருந்தியதறிந்து ஓர் ஓவியத்தைக் கவிஞரே எழுதி 'இரவு இரண்டு கிடக்கும்போது பாடுகின்ற பறவை யாக நிற்பது.... நம்பிக்கை ஒன்றே' என்ற பாட்டையும் அவ்வோவியத்தின் கீழ் எழுதி அனுப்பினர் என்றும் செடிகளில் இருந்து மலர்கள் பூத்துக்கொண்டே இருப்



ஜூன் 1916—சப்பானிய ஓவியர் ஹாரா என்பவரின் விருந்தினராகக் கவிஞர் (பக்கம் 85)



UNIVERSITY EXTENSION LIBRARY * MADURAI

1920—21 சர்மனியில் 61-ஆம் ஆண்டு விழாவில் எடுத்த கவிஞர் புகைப்படம் (பக்கம் 103)



1921—கெய்சர்லிங்கு கோமகனும் கவிஞரும்
(பக்கம் 102)

பதுபோல் தம்மிடத்தில் இருந்து பாடல்கள் மலர்ந்து கொண்டே கிடக்கின்றன எனக் கவிஞர் கூறினர் என்றும் காந்தியைப் போல் புதிய உலகத்திற்குச் செல்லும் மாறுதல்களின் நிலையமாக மட்டுமன்றி, எதிர் காலத்தின் முழு நிறைவையும் தாகூர் தம்மிற்றுமே உருக்கொண்டு விளக்கி நிற்கின்றார் என்றும் கிழக்கும் மேற்கும் அவரிடத்தே ஒருங்கு நின்று விளங்கு கின்றன என்றும் எழுதி வைத்துள்ளார்.

### வட ஐரோப்பாவில்

பின்னர் ஹாம்பர்க் பல்கலைக் கழகத்திலும் டென் மார்க்கின் கோபனுகன் பல்கலைக் கழகத்திலும் நம் முடைய கவிஞர் பெருமான் சொற்பொழிவாற்றினர். சுவீடன் நாடும் அவரைப்பேரும் புகழுமாக வர வேற்றது. தொன்மைச்சான்ற அப்சாலாப் பல்கலைக் கழகத்தில் கவிஞர்பேசினர். அப்சாலாவின் தலைமைப் பாதிரியாரே தீவட்டி ஏந்தியதோர் ஊர்வலத்தோடு கவிஞர் பெருமானைக் கூட்டத்துக்கு அழைத்துச் சென்றார். சுவீடன் கலைக்கழகம் அவருக்கென நிகழ்த் தியவிருந்தில் கவிஞர் கலந்து கொண்டார். சுவீடன் அரசரும் அவரை வரவேற்றார்.

### மறுபடியும் சர்மனி

சர்மனியில் உள்ள பர்லினுக்குத் திரும்பி அந்தப் பல்கலைக் கழகத்தில் இரண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்; அப்போது அங்குக் கூடியிருந்த மக்கள் எல்லாம் இவரைப் போற்றி, வீர வழிபாட்டில் ஈடு பட்டார்கள். மியூனிச்சுப் பல்கலைக் கழகத்திலேயும் அவர் பேசினர். அங்குத்தான் தாமஸ் மான் (Mann) என்ற அறிஞரை அவரே கண்டார். பி(F)ராங்க் புர்ட்டுப் பல்கலைக்கழகத்தில் ‘வங்காளத்து நாட்டுப்புற அனுபூதிமான்களைப்’ பற்றிச் சொற்பொழிவாற்றினர். தர்ம்ஸ்டாட்டில் ஹெஸ்ஸே பெருங்கோ மகனரின் விருந்தினராக இருந்தார். அங்கிருந்த செல்வவான்

களோடு பழகினர். கெய்சர்லிங்கு கண்ட ஞானப்பள்ளியுள் நாள்தோறும் பேசி வந்தார். அங்கே சர்மானியத் தொழிலாளிகள் எல்லாம் ஒன்று கூடிய கூட்டத்தில் பேசினர். தம்மைப் பாராட்ட நடந்த வெட்ட வெளி விழாவில் கலந்துகொண்டார். வியன்னுவிலும், பிராகிலும் ஆர்வமிக்க மக்களிடையே பேசினர். பாரிசுக்குத் திரும்பி மார்சேயிலிருந்து பம்பாய்க்குப் கப்பலில் ஏறி வந்தார்.

———

# 7. இந்தியாவில்

**காந்தியடிகள் தாகூர் மாறுபாடு**

பம்பாயிலிருந்து கவிஞர் சாந்திநிகேதனத்திற்கு நேரே சென்றார். ஒத்துழையாமை இயக்கம் அப்போது ஓங்கி வளர்ந்து இருந்தது. சுற்றிலும் எங்கிருந்தும் அந்த இயக்கத்தில் தாகூர் சேரவேண்டும் என்ற பெரிய தொரு வற்புறுத்தலே அவரை நெருக்கியது. பெரும் பான்மையோருடைய உணர்ச்சிப் போக்கை முழுவதும் தள்ளிவிட்டுத் தனியே நிற்பது செயற்கு அரிய செயலேயாம். அந்த அருஞ்செயலையே தாகூர் மேற்கொள்ள வேண்டியதாயிற்று. செயற்கரிய செய்வார் அன்றோ பெரியார். "பண்பாடுகளின் கூடல்" என்ற கட்டுரையில் தம்முடைய தனிக் கருத்துக்களை விளக்கமாக எழுதினார். கல்கத்தாப் பல்கலைக் கழகத்து நிலைய மன்றத்தில் கூடியது, தேசீயக் கல்விக் குழுவின் கூட்டம். சர். அசுதோஷ சவுதிரி அவர்கள் தலைமை பூண்டார்; அக்கூட்டத்தில் கவிஞர் பெருமான் அந்தக் கட்டுரையைப் படித்தார். அதனையே ஆசிரியர் பிரபு(f)ல்ல சந்திர ரே என்பாரின் தலைமையிலும் ஆல்பி(f)ரெட் நாடக அரங்கில் சொற்பொழிவாக நிகழ்த்தினார். இது ஒரு விவாதத்திற்கே வித்திட்டது. வங்காள நாவலாசிரியரான சரச்சந்திர சாட்டார்சி அவர்கள் "பண்பாடுகளின் மோதல்" என்ற தலைப்பில் தாகூர் அவர்களின் கட்டுரைக்கு விடையளிக்கும் முறையில் ஒரு கட்டுரை எழுதினார். "உண்மையின் அழைப்பு" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதிச் சாட்டர்சிக்கு விடையளிக்கும் முறையில் கல்கத்தாப் பல்கலைக் கழக நிலையத்தில் கவிஞர் படித்தார். அதிலே காந்தியடிகள் விளக்கிய ஒத்துழையாமை என்ற கருத்தையே மறுத்து ஓதுக்கினார். "பெருங்காவலர்" என்ற தலைப்பிலே தாகூர் அவர்களுக்குக் காந்தியடிகளே தம்முடைய இளைய இந்தியாவில் விடையளித்தார்.

## இலக்கியத் தொண்டு

இந்த அரசியல் சிக்கல் பின்னிய சூழலிலேயும், தாகூர் தம்முடைய கலையை மறந்ததில்லை. தமது சோராசங்கோ வீட்டில் புதியதோர் இசை அரங்கினை "வருஷ மங்கலம்" (மாரி விழா) என்ற பெயரோடு கொண்டாடினர். மழையைப் பற்றித் தாம் பாடிய பாடல்களைக் கவிஞரே பாடினர். நான்காவது வங்க சாகித்திய பரிஷத்தின் கூட்டம் அவருக்கு ஒரு வர வேற்பிதழை வழங்கியது.

## காந்தியடிகளும் தாகூரும்

1921-ஆம் ஆண்டு செப்டம்பர் 6-ஆம் தேதி ஒரு சிறந்த நாள். அன்று காந்தியடிகள் தாகூரின் சோரா சங்கோ வீட்டிற்கே வந்திருந்தார். ஆண்டுரூசைத் தவிர வேறு யாரும் உடனிருக்கவில்லை. மூடிய கதவங் களின் பின்னே இரு பெரும் தலைவர்களும் கூடிப் பேசினர்கள். ஒருவரை ஒருவர் நன்கறிந்து கொண்டார்கள் எனலாம்.

## கிராமச் சீரமைப்பு நிலையம்

பியர்சன் ஐந்தாண்டுகளுக்குப் பின் சாந்திநிகேதத் திற்குத் திரும்பினர். ஸ்ட்ரெய்ட்டு என்ற அம்மையார் எம்ஹர்ஸ்ட்டு என்பார் மூலம் 50,000 ரூபாய் ஆண்டு தோறும் நன்கொடை அளிப்பதாக முன் வந்தார்கள். அந்த அம்மையார் பின்னே எம்ஹர்ஸ்ட்டு என்பாரையே மணந்து கொண்டார். இந்த நன்கொடைச் செய்தியை எம்ஹர்ஸ்ட்டு என்பாரே சாந்திநிகேதனம் வந்து சேர்ந்து நேரில் தெரிவித்தார். இந்த நன்கொடை 'சுருள்' என்ற இடத்திலே நடைபெறும் கிராமச் சீரமைப்புத் தொண்டிற்கு என்றே வழங்கப்பெற்றது.

## உலகப் பண்பாட்டு நிலையம்

சாந்திநிகேதனம் மேலும் மேலும் சிறந்து வரத் தொடங்கியது. வெளிநாட்டு அறிஞர்களுக்கு எல்லாம்



சாந்திநிகேதனத்தில் பேராசிரியர் சில்வன்லெவியோடு கவிஞர்

(பக்கம் 107)

ERSITY EXTENSION LIBRARY



விரசேந்திரநாதசில் 22 – 12—1920ல் விசுவபாரதியைத் தொடங்கிவைத்தல் (பக்கம் 107)

ஏற்றதொரு பொதுப் பண்பாட்டு நடு நிலையமாகச் சாந்திநிகேதனம் திகழ வேண்டும் என்பதே தாகூருடைய கருத்து. இதனை நிலை நிறுத்துவார்போல் ஆசிரியர் சில்வென்லென் என்பார் நவம்பர் மாதம் 10-ஆம் தேதி அங்கு வந்தார். இவரே விசுவபாரதியின் பிற நாட்டு இடைக்காலப் பேராசிரியராக முதல் முதல் தொண்டாற்றியவர். இவரே திபெத்து, சீனு முதலியவற்றைப் பற்றிய மேல் நிலை ஆராய்ச்சிகளை அங்கே ஒழுங்குபடுத்தியவர்.

**விசுவபாரதி – கடைகால்**

1921-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 22-ஆம் தேதி சாந்தி நிகேதனத்தில் தாகூர் கண்ட கனவு நனவாகியது. விசுவபாரதி என்ற உலகப்பல்கலைக்கழகம் அன்று தொடங்கியது. இந்த விழாவிற்குத் தலைமை பூண்டவர் அறிஞர் விரிசேந்திரநாத சீல் என்பவர் ஆவர். அந்தக் கூட்டத்தில் விசுவபாரதியின் அமைப்பினை எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள். இரதீந்திரநாத தாகூரும், பிரசாந்த மகலானேபிசு என்பாரும் துணைச் செயலாளர் ஆயினுர்கள். சாந்தி நிகேதனத்தில் தமக்கிருந்த நிலையத்தையும் கட்டடத்தையும், நூல் நிலையத்தையும் பிற பொருள்களையும் நன்கொடையாக, முறிச்சீட்டு எழுதி விசுவபாரதிக்குக் கவிஞர் பெருமான் அளித்துப் பெரும் புகழ் கொண்டார். நோபல் பரிசாக வந்த பணம் அனைத்தையும் இந்த நிலையத்துக்கே கவிஞர் வழங்கிவிட்டார். தம்முடைய வங்காள நூல்களின் உரிமையையும் அதற்கே வழங்கினுர். "முக்த தாரா" அல்லது 'அருவி' என்றதோர் நாடகத்தை எழுதித் தம்முடைய கல்கத்தா வீட்டில் நண்பர்களுக்குப் படித்துக்காட்டினுர்.

**சீநிகேதனம்**

மற்ருெரு வளர்ச்சியையும் விசுவபாரதி கண்டது. பிப்ரவரி 6-ஆம் தேதி ஸ்ரீ நிகேதனம் என்ற பெயருடன் விசுவபாரதியின் கிராமச் சீரமைப்புத் துறை துடங்கி

யது. "முக்த தாராவை" ஓவிய நாடகமாக நடிக்க ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கும்பொழுது காந்தியடிகள் சிறையாக்கப்பெற்று ஆறு ஆண்டு கடுங்காவல் தண்டனைக்குள்ளாயினர் என்ற செய்தி எட்டியது. கவிஞர் மனம் கலங்கியது. நாடக ஏற்பாட்டை விடியோடு விட்டு ஒழித்தார் கவிஞர். காந்தியடிகள் தண்டனை பெற்றது மார்ச்சு 10-ஆம் தேதியாகும். அதனால் தாகூர் பிறந்தநாள் வந்தபோதும் அதனை அமைதியாக ஆரவாரமின்றியே சாந்திநிகேதனம் கொண்டாட வேண்டியதாயிற்று.

**கல்கத்தாவில்**

ஜூலை 8-ஆம் தேதி கல்கத்தாவிலே ஆங்கிலக் கவிஞரான ஷெல்லியின் நூற்றாண்டுவிழா நடைபெற்றது. அதிலே தாகூர் தலைமை பூண்டார். சத்தியேந்திரநாத தத்தரின் நினைவாக மற்றொரு கூட்டம் கூடியது. அதில் தாகூர் அவர்கள் மிகச் சிறந்ததோர் கையறுநிலைப் பாட்டினைப் பாடினர். 1922 ஜூலையில் கல்கத்தாவில் விசுவபாரதி சம்மிளினி தொடங்கியது. விசுவபாரதியின் குறிக்கோளை மாநிலக் கல்லூரியின் மாணவர்களுக்குக் கவிஞர் விளக்கினர்.

**அனைத்துலக விடுதலைக் காங்கிரசு**

1922-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் அமைதிக்கு என்றும் விடுதலைக்கென்றும் எழுந்த அனைத்து நாடுகளின் காங்கிரசு "லுகார்ஞே" என்ற இடத்தில் கூடியது. அதிலே ரோமேன்ரோலந்து, பாவ்ஹெய்சே, பேராசிரியர் போ (F) ரெல், பர்ட்டர்ண்டு ரசல் முதலியோர் கலந்து கொண்டனர். "தாகூரின் மாலைப் போது" என்ற நிகழ்ச்சியைக் காளிதாச நாகு என்பவர் ஏற்பாடு செய்தார். அதிலே இந்த ஐரோப்பிய பேரறிஞர்கள் எல்லோரும் பங்கு கொண்டனர்.

**பலசுவை**

சரதோத்சவம் என்ற அவருடைய நாடகம், ஆல்பிரெட் நாடக அரங்கிலும், மதன் நாடக அரங்கிலும்

நடிக்கப்பெற்றது. அதிலே கவிஞரும் சாந்திநிகேதன ஆசிரியர்களும் நடித்தனர். ஆசிரியர் சில்வென் லெவியோடு பம்பாய்க்கும் பூனுவுக்கும் சென்று அங்கே "இந்திய மறுமலர்ச்சி" என்பதைப் பற்றிய தொரு கட்டுரையைப்படித்தார். இந்தியப் பல்கலைக்கழ கங்கள் பின்பற்ற வேண்டிய குறிக்கோள்களைப் பற்றிய தம்முடைய கருத்தை விரிவாக விளக்கினுர்.

## மறுபடியும் இந்தியாவுக்குத் தெற்கே

கவிஞர் பூனுவிலிருந்து மறுமுறையும் மைசூர், பங் களூர், சென்னை, கோயம்புத்தூர் முதலிய இடங்களுக் குச்சென்று, பின் கொழும்புவுக்கும் பயணமானுர். இந்தி யாவிற்குத் திரும்பிவந்து திருவனந்தபுரத்திலும், கொச் சியிலும் பேசினுர். "இந்திய வரலாற்றின் இக்காலத் தின் உயர்நிலை", "கீழைப் பல்கலைக் கழகம்", "இந்திய ஆரணியப் பல்கலைக் கழகம்", "எவி வாழ்வுப் பணியின் வளர்ச்சி" முதலான சொற்பொழிவுகளை இங்கெல்லாம் நிகழ்த்தினுர். பம்பாய்க்குச் சென்று அங்கிருந்து அக மதாபாத்திற்கும், சபர்மதி ஆச்சிரமத்திற்கும் பயண மானுர். மூன்று திங்களுக்குப்பின் கவிஞர் சாந்தி நிகேதனத்திற்கே திரும்பினுர்.

## சாந்திநிகேதன வளர்ச்சி

அப்போது வங்காளக் கவர்னரான இலிட்டன் சாந்தி நிகேதனத்தைப் பார்வையிட வந்திருந்தார். அப்போதுதான் சிசு போலோ நாத் என்ற பாடல்களைக் கவிஞர் எழுதினுர். அவருடைய உடன்பிறந்தாரான சத்தியேந்திரநாதர் 9-1-23-இல் உலகைவிட்டு மறைந் தது பெரும் துயரமேயாகும். இருந்தாலும், கவிஞர் பிப்ரவரி மார்ச்சு மாதங்களில் சிந்து மாகாணத் திற்குப் பயணமாய்ப் போயினுர். அவருடைய தலைமையிலே, ஏப்பிரல் திங்களிலே, மூன்று தினங் களுக்கு ஒருமுறை வரும் விசுவபாரதியின் வெளியீடு தொடங்கியது. சாந்திநிகேதனத்தில் வெளிநாட்டு

விருந்தினரின் விடுதிக்கு இரத்தினகுடி என்று பெயர் வைத்தார். கல்கத்தாப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான தரப்போர்வாலா அதற்குக் கால்கோல்விழா நிகழ்த்தினர். அந்த விடுதிக்கெனச் சர் இரத்தன் தாதா அவர்கள் 25,000 ரூபாய் நன்கொடையளித்தார். அந்த ஆண்டின் கோடைக் காலத்தை, ஷில்லாங்கில், கவிஞர் பெருமான் கழித்தபொழுது, இரத்தகரபி என்ற நாடகத்தை எழுதி முடித்தார். பவானிபுர இலக்கியக் கழகத்தின் கூட்டத்திலே ஜூன் 28-இல் பக்கிம் சந்திர சாட்டர்சியைப் பற்றிச் சொற்பொழிவு ஒன்று கவிஞர் நிகழ்த்தினர். எனவே, எந்தச்சமயத்திலும் இவர் தம் இலக்கியத் தொண்டினை மறந்ததே இல்லை எனலாம்.

## அரசியல் விளக்கம்

கவிஞர் பெருமான் செய்தியாளர்களுக்குப் பேட்டி கொடுத்துப் பேசிய பொழுது, தற்கால அரசியல் நிலைகளைப் பற்றியும் ஆராய்ந்து பேசினர்; இந்து முசுலீம் தொடர்புகளையும் விளக்கினர். இந்துக்கள் கூடி ஒன்றுபட்ட நிலையங்கள் அமைப்பதை அவர் உடன்பட்டார். இந்து முசுலீம் வேற்றுமைக்கு அடிப்படைக் காரணம் பொருளாதாரச் சிக்கலே என்று வற்புறுத்தினர். ஈர் இனங்களும் பொருளாதார அடிப்படையில் ஒன்ருனல் மட்டுமே உண்மை ஒற்றுமை நிலவும் என்று எடுத்துக் காட்டினர். அதை யொட்டித் தம் முடைய ஆழ்ந்த கருத்துக்களை விசுவபாரதி வெளியீட்டில் “ ஒற்றுமைக்கு வழி ” என்ற தலைப்பில் எழுதி முடித்தார்.

## இப்போதும் நடித்தல்

கல்கத்தாவிலே கவிஞரது “ சர்கனம் ” என்கின்ற நாடகம் மூன்று நாட்கள் நடந்தன. (25, 27, 28 ஆகஸ்ட் 1923) கவிஞர் தம் முதுமையிலும் இளைய சயசந்திரராக நடித்தது ஒரு வியத்தகு செயலேயாகும்.

**பியர்சன் மறைவும் நினைவும்**

கவிஞர் கல்கத்தாவிலிருந்து சாந்திநிகேதனத்திற்குத் திரும்பியதும் 1924-இல் பியர்சன் என்பார் புகை வண்டிக் கதவில் சிக்கி இறந்த செய்தி அறிந்து ஆராத் துயரத்துக்கு உள்ளானார். "இரத ஜாத்திரை" என்ற நாடகம் அப்போதுதான் கவிஞரால் எழுதப் பெற்றது. பியர்சனின் நினைவாக மருத்துவ நிலையம் ஒன்றினைச் சாந்திநிகேதனத்தில் அமைக்க வேண்டும் என்று கவிஞர் முடிவு செய்து, அதற்கென்று பொருளை நன்கொடையாக அளிக்க வேண்டுமென்று பொதுமக்களை வேண்டிக்கொண்டார். மேலை இந்தியாவிலுள்ள இராச்சியங்களில் சுற்றி வந்து விசுவபாரதிக்கு நன்கொடை திரட்டினார்.

**கல்கத்தாப் பல்கலைக் கழகம்**

இவர் வந்து பேச வேண்டும் எனக் கல்கத்தாப் பல்கலைக் கழகம் இவருக்கு வேண்டுகோள் விடுத்தது. "இலக்கியம்" என்பதனைப் பற்றித் தொடர்ந்து சொற்பொழிவுகள் நிகழ்த்துமாறும் வேண்டியது. குறிப்பொன்றும் இல்லாமலே கவிஞர் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். பிப்ரவரி 1924-இல் ஆல்பிரெட் நாடக அரங்கில் மலேரியாவை எதிர்த்துப் போராடும் சங்கங்களின் கூட்டம் ஒன்று ஆண்டு விழாவாக நடந்தபோது, கவிஞர் பெருமானே தலைமை பூண்டார். நாட்டின் பல துறைகளிலும் கவிஞர் ஈடுபட்டது இதனால் நன்கு விளங்கலாயிற்று

# 8. பிற நாடுகளில்

## ஏற்பாடு

மார்ச்சு மாதம் 21-ஆம் தேதி நம்முடைய பாவாணர் எம்ஹர்ஸ்டு க்ஷிதி மோகன் சேன், நந்தலால் போஸ், காளிதாசு நாகு முதலியவர்களுடன் கூடிச் சீனுவுக்குப் புறப்பட்டார். அந்தப் பயணத்துக்கு உதவியாகப் பிர்லா சேட்டு 10,000 ரூபாய் வழங்கினர். பல்கலைக் கழகங்களின் சொற்பொழிவுச் சங்கம் எனச் சீனுவில் ஒன்று உண்டு; அதன் தலைவர் லியாங்க் சி சாவோ என்பவர். அவர் அழைப்பினை ஏற்றுக்கொண்டு தொடங்கியதாகும் இப்பயணம்.

## வழியில்

கவிஞர் பெருமான் போகும் வழியெல்லாம் இரங்கூனிலும், பினங்கிலும், கோலாலம்பூரிலும், சிங்கப்பூரிலும் எங்கும் ஆரவாரமிக்க இன்ப வரவேற்பையே பெற்றுர்.

## மேலைப்போக்கிற்கு எதிர்ப்பு

ஷாங்காய் நகரில் ஏப்பிரல் 12-ஆம் தேதி போய்ச் சேர்ந்தார். அங்கே சீனுவுக்கும் இந்தியாவுக்குமிடையே விளங்கும் பழைய தொடர்பு, தன்னலமற்ற மனித அன்பில் அன்றி வேறென்றிலும் இல்லை என்பதைக் கவிஞர் விளக்கினுர். ஏப்பிரல் 17-ஆம் தேதி சப்பானிய மக்களிடையிலும் கவிஞர் பேசினுர். சப்பானியரை அப்போது பிடித்து ஆட்டும் சாம்ராச்சியப் பேராசையை இகழ்ந்தே கவிஞர் பேசினுர். மேல் நாட்டு உலோகாயதப் போக்கையும், தேசீயம் என்ற கொடுமையையும், ஆசியாவிட்டொழித்து விடுதலை பெற வேண்டும் என்றும் தம்முடைய விருப்பத்தைத் தெரிவித்துக் கொண்டார். ஆங்கிலோ அமெரிக்க கழகம் கூட்டிய மற்றொரு கூட்டத்திலும் இதனையே அழுத்தம் திருத்த

மாகமேலும் வற்புறுத்தினர். இதன் பயனாக, ஆங்கிலப் பத்திரிகைகளும் அமெரிக்கப் பத்திரிகைகளும் இந்தப் பேச்சுக்களைக் கண்டித்ததோடு இவரையும் தாக்கின.

**சீனாவில்**

சீன மாணவர்களுக்கும் மன நிறைவு விளைய வில்லை. மேல்நாட்டுக் குறிக்கோள்களே அவர்களுடைய கற்பனையைத் தூண்டிச் சிந்தனையைக் கவர்ந்து, அவர்களை அடிமையாக்கியதால் அவற்றைக் கவிஞர் பெருமான் தாக்கியது அவர்களுக்கு ஒரு சிறிதும் பிடிக்கவில்லை. ஏப்ரல் 23-ஆம் தேதி பீகிங்கு சேர்ந்தார். பீகிங்கில் தேசீயப் பல்கலைக் கழகம் ஏப்ரல் 26-ஆம் தேதி, தலைசிறந்ததோர் வரவேற்பைக் கவிஞருக்காக ஏற்பாடு செய்தது. சீன இளைஞர்களின் தலைவரான அறிஞர் உச்சி என்பவர் கவிஞரைக் காணச்சென்று கவிஞரைப் போற்றுவாரில் சிறந்தவரானார். இதன் பயனாக மாணவரிடையேயும் மன மாற்றம் நிகழ்ந்தது. அவருடைய பண்பட்ட நற்செய்தியை ஊக்கத்தோடும் பெருமகிழ்ச்சியோடும் அவர்கள் வரவேற்றனர். சீனாவில் பல சொற்பொழிவுகள் நிகழ்த்தியபின் மே 29-ஆம் தேதியன்று கவிஞர் சப்பான்போய்ச் சேர்ந்தார்.

**சப்பானில்**

தேசங்களிடையேயுள்ள தொடர்பினைப் பற்றி அங்கே அவர் சொற்பொழிவுகளாற்றினர். அச்சொற்பொழிவுகளில் சப்பானிய மக்களிடம் தமக்குள்ள ஆழ்ந்த அன்பினையும் மரியாதையையும் வற்புறுத்தினர். ஆனால், ஒரு எச்சரிக்கை மட்டும் செய்தார். அவர்கள் பிற நாட்டாரோடு தொடர்பு கொள்ளும்போது வஞ்சனையைக் கையாளலாம்—கொடுமையைக் கையாளலாம் – மேல் நாட்டுத் தேசங்கள் தலைமை பெற்று விளங்குதற்கு ஏற்ற இம்முறைகளை சப்பானும் கையாண்டு அளவில்லா ஆற்றல் பெறலாம். ஆனால், அது கண்டு, தாம் மகிழமுடியாது வருந்தியே நிற்ப

தாக அவர் தம்முடைய உள்ளத்தின் துயரத்தைத் திறந்து காட்டிப்பேசினர்.

## இந்தியப் புரட்சியாளர்

இந்தியப் புரட்சியாளர் என்று தம் தாய் நாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்ட இராஷ்பிகாரி போசு அப்போது சப்பானிலிருந்தார். அவர் கவிஞர் பெருமானைக் கண்டு தம்முடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டார்; அதனோடு அன்று முதல் கவிஞருக்கு வேண்டியவற்றை யெல்லாம் அங்கே அன்றாடம் செய்து வரும் பொறுப்பினையும் அவரே ஏற்றுக் கொண்டார்.

## இலிட்டன் தாக்கல்

ஜூலை 21-ஆம் தேதி கவிஞர் பெருமான் இந்தியாவிற்குத் திரும்பினர். அப்போது இலிட்டன் தாக்காவிலே ஒரு சொற்பொழிவாற்றினர். அதிலே அவர் வங்காளப் போலீசுத் துறையைப் பாராட்டியதோடு வங்காளப் பெண்களைக் களங்கமுறவும் பழித்துப் பேசினர். இதன் பயனாக நாட்டில், ஒரு பெரிய கொந்தளிப்பே பொங்கியது. ஓர் எதிர்ப்பு இயக்கம் உருவாகியது. இந்தச் சூழலில் கவிஞர் பெருமானும் இதிலே ஈடுபட வேண்டியதாயிற்று. இலிட்டனுக்கும் கவிஞருக்கும் வேண்டிய நண்பர்கள் இடையிட்டார்கள். இலிட்டனைக் கண்டு, இலிட்டன் கூறிய கருத்தைத் தெளிவாகக் கவிஞர் அறிய வேண்டும் என்று அவர்கள் கருதினர்கள். ப(F)ச்லுல்ஹக் என்பார் இவ்வாறு இருவர் கூடுவதற்கும் மிக முனைந்து முயன்றார். இலிட்டன் எழுதிய கடிதங்களும், தாகூர் எழுதிய கடிதங்களும் ஆகஸ்ட்டு 23-இல் இந்திய செய்தித்தாள்களில் ஒன்றாக வெளியாயின. ஆனல், அந்த இயக்கம் ஓய்ந்தபாடில்லை. கவிஞர் சாந்திநிகேதனத்திற்குத் திரும்பியதும், இலிட்டனுக்கு ஓர் இறுதிக் கடிதம் எழுதினர். இலிட்டன் கூறியதை நிலைநாட்டுவதற்கு நான்கு தக்க சான்றுகளைத் துரைத்தனம் தர வேண்டும்

என்று தம்முடைய நாட்டு மக்களில் பெரும்பான்மையோர் அறைகூவி அழைப்பதாக இலிட்டனுக்குத் தாகூர் எழுதினார். எந்த நிலையிலும் கவிஞர் கலையை மறக்க முடியாது என்பதும் வெளியானது. "அருப்ரதான்" என்ற நாடகம் அசையாப்பட நிகழ்ச்சிகளாக அப்போது ஆல்பிரெட் நாடக அரங்கில் நிகழ்ந்தபோது அதில் கவிஞரே பங்கு பற்றியதிலிருந்து இந்த உண்மை நன்கு விளங்கியது.

**தென் அமெரிக்கா**

உலகையும் தாகூர் மறக்க முடியவில்லை. கவிஞர் 1924 செப்டம்பர் 19-ஆம் தேதி, தென் அமெரிக்காவிற்குப் பயணமானார். எம்ஹர்ஸ்ட்டு என்பாரும் உடன் சென்றார். பெரு என்ற நாடு, தான் விடுதலை பெற்ற ஆண்டின் நூற்றாண்டுவிழாவை அந்த ஆண்டு கொண்டாட இருந்தது. அந்தக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று அந்தப் பழம்பெரும் நாடே கவிஞர் பெருமானை அழைத்தது. அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டே தாகூர் பயணமானார். ஆனால், கப்பல் பயணத்தின்போது, நோய் வாய்ப்பட்டு வருந்தினார். இறுதியில் "புவனேஸ்யெய்ரஸ்" என்ற இடத்தைச் சேர்ந்து, அர்கண்டிய மக்களின் அன்பான வரவேற்பைப் பெற்றார். ஆனால், தம்முடைய உடல் நலம் இல்லாமை காரணமாகக் கவிஞர் பெருமான் பெருவுக்குப் போவது தடைபட்டது. விக்டோரியா ஓசாம்போ அம்மையாரின் விருந்தாளியாகச் சான் இசாதோர் என்ற இடத்தில் அவ்வம்மையாரின் அழகிய தோட்ட மாளிகையில் தங்கிக் கவிஞர் ஓய்வு பெறலானார். அவ்வாறு ஓய்வு பெறும்போதுதான் "புரவி" என்ற பாடல்களைத் தாகூர் இயற்றினார். இவ்வம்மையார் பெண்களில் மாணிக்கம் என்றும், தென்அமெரிக்க மக்களிடையே பெண்கள் வாழ்வினை உயர்நிலையாக அவ்வம்மையாரே அமைத்து வருகின்றார்கள் என்றும் கைசர்லிங்கு இவ்வம்மையாரைப் பாராட்டியுள்ளார்.

இந்த அம்மையை "விஜயா" என்று அழைத்துப் புரவி என்ற நூலை அவருக்கே கவிஞர் பெருமான் காணிக்கை ஆக்கினார். பின்னர்க் கவிஞர் அர்கண்டைன் குடியரசின் தலைவரைக் கண்டு, அவரிடமிருந்து செலவு பெற்று, டிசம்பர் 30ஆ-ம் தேதி புறப்பட்டார்.

## ஐரோப்பாவில்

*1925* ஜனவரி 4-ஆம் நாள் ஐரோப்பாவிற்குப் புறப்பட்டு 21-ஆம் நாள் ஜினேவா சேர்ந்தார். மிலான் கோமகனார் தலைமையிலே, மிலான் நகரத்தில் நம் கவிஞர் இசையைப் பற்றி அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்; அப்போது, எல்லோரும் இன்பத்தில் மூழ்கிஅவரைப் பாராட்டினார்கள். இத்தாலிய ஓவியர் பெருமகனான வியத்தி என்பவர், நம் பாவாணருடைய உருவ ஓவியத்தை எழுதத் தொடங்கினார். மக்கள் வெனிஸ் மாநகரத்தைச் சுற்றிப் பெருமதிப்போடு தாகூரைக் கொண்டுசென்றனர்.

---

# VI. திக்குவிசயம்

# 1. அறுபத்தைந்தாம் ஆண்டு

## இன்பமும் துன்பமும்

தாகூர் பிப்ரவரி 17-ஆம் தேதி இந்தியாவிற்குத் திரும்பினர். சில நாட்களுக்குள் மார்ச்சு 4-இல் அவருடைய அண்ணனுர் சோதீந்திரநாதர் உலகை விட்டு மறைந்தார். இன்பமும், துன்பமுமாகப் பிணைந்த உலகத்தில், பின்னர் அவருடைய 65-வது ஆண்டு விழாச் சாந்திநிகேதனத்தில் சிறப்புடன் நிறைவேறியது.

## காந்தியடிகள் வருகை

மே மாதம் 27-ஆம் நாள் காந்தியடிகள் சாந்தி-நிகேதனத்திற்குத் தாகூரின் விருந்தினராக வந்து இருந்தார். அமெரிக்காவிலிருந்து காந்தியடிகளையும், தாகூரையும் காண்பதற்கு என்றே பி(f)ஷர் பாதிரியார் வந்தார். கவிஞர் பிஷர் பாதிரியாரோடு பேசி அளவளாவினுர். இந்த ஆண்டில் தான் (ஜூன் 16-உ) தேசபந்து சித்தரஞ்சன் தாசர் திடீரெனக் காலமானுர். கவிஞர் பெருமான் நான்கு வரியில் ஒரு கையறு நிலைப் பாடல் பாடி அப்பெருந் தலைவர் நினைவை நிலை நாட்டினுர்.

## கைய்சர்லிங்கு

கை ராட்டினத்தைச் சுழற்றுவதனை ஒரு கடவுள் சடங்கு போல் பாராட்டவேண்டும் என்பது காந்தியடிகளின் கொள்கை. அதனைப் பற்றிய தம்முடைய கருத்தினை அச்சம் சிறிதும் இன்றித் தாகூர் அவர்கள் தெளிவாக எடுத்து விளக்கினுர்கள். செர்மானியப் பேரறிஞரான கைய்சர்லிங்கு கோமகனுர், திருமணத்தைப்பற்றி ஒரு சிறந்த நூலை எழுதி முடித்தார். அதில் இடம் பெறுதற்காகத் தாகூர் அவர்களுடைய கருத்துக்களை

ஒரு கட்டுரை வடிவில் எழுதித் தருமாறு அக்கோமகனுர் வேண்டிக் கொண்டார் ; தாகூர் அவர்களும் எழுதித் தந்தார். அக்கட்டுரையைப் பொன்னே போல் போற்றித் தம்முடைய நூலில் சேர்த்து அக்கோமகன் பதிப்பித்தார்.

**நாடகங்கள்**

கல்கத்தாவிலே வான்மீன் நாடக அரங்கு ஒன்று விளங்கியது. அதிலே “சித்திர குமாரசபை” என்ற தாகூரது நாடகம், நாடக அரங்கிற்கு ஏற்றவாறு அவரே திருத்தி அமைத்தபடி நடிக்கப்பெற்றது. அதைக் கண்டு கவிஞர் மகிழ்ந்தார். அவ்வாறே “கர்ம பலன்” என்ற கதையிலிருந்து “எல்லாம் சதுரம்” என்பது முதலியனவற்றையும் நாடகத்திற்கு ஏற்ப மாற்றி அமைத்துத் தந்தார் ; அவையும் நடிக்கப் பெற்றன. “முதல் கோணல்” என்ற நாடகக் கதையையும் “சேஷரக்ஷை” என்ற நாடகமாகத் திருத்தி அமைத்துத் தந்தார். “கடை இரவு” என்ற கதையையும் “கிரகப் பிரவேசம்” என்ற நாடகமாகப் புதிய முறையில் மாற்றி அமைத்துத் தந்தார்.

**இராட்டை**

கைராட்டையினுலேயே விடுதலே அடையக் கூடும் என நம்பாத தாகூர் அவர்கள், காந்தியடிகளின் கைராட்டை இயக்கத்தில் சேரவில்லே என்பதனைக் கூற வேண்டுமா ? ஆனுல் சர். பி. சி. ரே பொதுக் கூட்டம் ஒன்றில் தாகூரை இவ்வாறு சேராமைக்காக எதிர்த்துப் பேசினுர். தாகூர் அவர்கள் அதற்கு விடை தரும் வகையில் “விசுவராஜ்ய சாதனம்” என்ற தலேப்பில் கட்டுரை ஒன்று எழுதி வெளியிட்டார். கைராட்டினம் விடுதலே வாங்கித்தாராது என்று வற்புறுத்தியதோடு, இந்து முசுலீம் சிக்கல் போன்ற கவலேக்கிடமான பல அரசியல் சிக்கல்களே எடுத்து விளக்கினுர்.



சீனாவின் பயணத்தின்போது 1924-ல் இரங்கூனுக்குக் கப்பலில் கவிஞர் (பக்கம் 113)



UNIVERSITY EXTENSION LIBRARY
MADURAI

1926—எப்ஸ்டைனில் சிற்பி செய்த கவிஞர் தலை



கவிஞரும் அவர் தமையனார் துவிசேந்திரநாதரும்—1926
(பக்கம் 122)

### ஐரோப்பியப் பேரறிஞர் தொடர்பு

அந்த ஆண்டில் நோபல் பரிசு பெற்ற ரொமேன் ரோலாந்து என்ற இலக்கியக் கலைஞரின் 60-ஆம் ஆண்டு விழா உலகெங்கும் கொண்டாடப் பெற்றது. அவரை வாழ்த்தித் தாகூர் அவர்கள் ஒரு திருமுகம் அனுப்பினர். அதிலே மேல்நாட்டு மக்கள் தேசீயத்தை ஒரு சடநிலைக் கொள்கையாகக் கொண்டு, மூடப் பக்தியுடன் அதனை வழிபட்டு மனித சமுதாயத்தையே அறிவில்லா இயந்திரம் போல் ஆக்கி வருவதனை எதிர்த்து எழுதியிருந்தார். இத்தாலிய நாட்டில் இருந்து முசோலினியின் வாழ்த்தோடு பேராசிரியர்கள் கார்லோ, பா(F)ர்மிச்சி, என்பாரும் பேராசிரியர் துச்சி என்பாரும் பாவலர் பெருமானை வந்து கண்டனர்; முசோலினி அனுப்பிய நூல்களை விசுவ பாரதிக்கு நன்கொடையாக அளித்தனர்; அந்தப் பெரு நிலையத்தில் தாங்களும் பேராசிரியர்களாகத் தொண்டாற்ற முற்பட்டார்கள். இலிட்டன் பிரபுவும் அப்போது சாந்தி நிகேதனத்திற்கு வந்து இருந்தார். கல்கத்தாவில் அந்த ஆண்டு கூடிய இந்தியத் தத்துவப் பெருமாநாட்டிற்குத் தாகூரே தலைமை பூண்டார். சர்வ தேச சங்கத்தின் பிரதிநிதியாக வந்திருந்த எப். எஸ். மார்வின் என்பவர் சாந்தி நிகேதனத்திற்கு வந்தார். அவரைத் தாகூர் அன்புடன் வரவேற்றார். பின் அனைத்து இந்திய இசை மாநாடு லக்னோவில் கூடியது. தாகூர் அவர்களும் அதில் கலந்து கொண்டார். இவ்வாறு வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் கவிஞர் பெருமான் தொண்டாற்றித் தம் நெஞ்சம் அறிவதனைப் பொய்யாது கூறிப் பல பெரும் புகழ் பெற்று வாழ்ந்தார்.

### பிரிவுத் துன்பம்

ஆனால், உலகில் நீண்ட நாள் வாழ்ந்து வரும் போது, உற்றாரும் உறவினரும் பழைய நண்பர்களும் உலகை விட்டு மறைவதனை யார்தான் எண்ணி எண்ணி வருந்தாமல் இருக்க முடியும்? தம்முடைய

மற்ருேர் அண்ணனுர் துவிசேந்திர நாதர் அந்தத் தை மாதத் தொடக்கத்திலேயே சாந்தி நிகேதனத்தில் மறைந்து போயினுர்.

**பல கூட்டங்கள்**

தக்காப் பல்கலைக் கழகத்தின் அழைப்பினைக் கவிஞர் பெருமான் ஏற்றுக்கொண்டு, அங்குச் சென்று தக்கா நகராண்மைக் கழகத்தின் வரவேற்பினையும் பெற்ருர். "மக்கள் கழகம்" முதலிய சங்கங்களிலும் இவரை வரவேற்கும் கொண்டாட்டங்களிலேயும் பல கூட்டங்களிடையே பேசி மக்கள் மனத்தைக் கவர்ந் தார். மைமன்சிங்கிலும் பேசினுர். சுரேஷ்சந்திர பானர்ஜி அவர்கள் கொமில்லா என்ற இடத்தில் நிலை நாட்டிய "அபய ஆசிரம"த்தின் ஆண்டு விழாவிலும் தலைமை பூண்டு கவிஞர் அந்த நிலையத்தைப் பாராட்டினுர். ஒடுக்கப்பட்ட மக்களாகிய நாம சூத்திரர்களின் மாநாட்டிலும் கலந்து கொண்டார். மகராசகுமார் விரசேந்திரகுஷோர் அவர்கள் தாகூரை அகர்த்தலா என்ற இடத்தில் பேர் அன்போடு வரவேற்ருர்.

தாகூர் சாந்திநிகேதனம் திரும்பியதும் அங்கே பல தேசங்களிலிருந்தும் வந்திருந்த பிரதிநிதிகள் நிறைந்த கூட்டத்திலேயே அவருடைய 65-ஆம் ஆண்டு விழாவானது பெருஞ் சிறப்போடு கொண்டாடப் பெற்றது. சாந்திநிகேதனத்தில் "கலா பவனம்" என்ற கலை இல்லம் ஒன்றை நிலைநாட்டப் போர் பந்தர் அரசர் வள்ளன்மையோடு நன்கொடை வழங்கினுர். கவிஞர் எழுதிய "நடிர் பூசை" (பொது மகளின் வழிபாடு) என்ற நாடகம் அப்போதுதான் முதல் முதலாக அரங்கேறியது.

## 2. ஐரோப்பியத் திக்கு விசயம்

**முசோலினி**

எட்டாம் முறையாக இத்தாலிப் பயணத்தை மே மாதத்தில் தாகூர் தொடங்கினர். நேபிள்சு மாநகரம் சென்று அங்கிருந்து இவருக்கெனத் தனியே அமைக்கப் பெற்ற புகைவண்டியில் முசோலினியின் விருப்பப்படி ரோமாபுரிக்குச் சென்ருர். ஐயத்துக்கிடமின்றிப் பெருமகனுர் என்று கொண்டாடத் தக்கவர் முசோலினி என்றும் அவருடைய இயக்கம் நேரே வரலாற்றிலே உறுதியாக இடம்பெறும் என்றும் அதனையும் அவரையும் காணும் இத்தகைய வாய்ப்பினைப் பெற்றதற்கு தாம் மிக மிக மகிழ்வதாகவும் தம் கருத்தைக் கவிஞர் வெளியிட்டார். முசோலினியும் முதலிலே தாகூரைக் கண்டதும் "நான் இத்தாலி மொழியிலே மொழி பெயர்க்கப்பட்டுள்ள உங்களுடைய எழுத்து ஒவ்வொன்றையும் படித்துள்ளேன். உங்களைப் பாராட்டும் இத்தாலியரில் நானும் ஒருவன்" என்று கூறி முசோலினி வரவேற்ருர்.

**பிற இத்தாலிய அறிஞர்**

வரலாற்றுப் புகழ்படைத்த "காபிதோல்" என்ற இடத்தில் தாகூரைப் பாராட்டுவதற்காகவே ரோம் நகரின் தலைவர் பொதுக் கொண்டாட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்தார். அதில் கவிஞர் பெருமான் மகிழ்ச்சியோடு கலந்து கொண்டார். சாவாப் பெருவாழ்வு படைத்த அந்த மாநகரின் வாழ்த்தைப் பாவலர் பெருமானுக்கு அவர் தெரிவித்துக்கொண்டார். பிரிட்டிஷ் தூதரும் மற்ருெரு வரவேற்பினை அந்நகரில் ஏற்பாடு செய்தனர். "கலையின் பொருள்" என்பது பற்றித் தாகூர் அவர்கள் சிறந்த சொற்பொழிவு ஒன்று ஆற்றினர். பழைய கொலீசியம் என்ற இடத்திலே

ரோம் நகரப் பள்ளிச் சிறுவர்கள் தங்களுடைய பள்ளி யின் ஆண்டு நிறைவின் பாடல் விழாவைக் கொண் டாடியபோது பெருமையுடன் பாவாணர் கலந்து கொண்டார். ரோமாபுரிப் பல்கலைக் கழகமும் கவிஞரை வரவேற்றது. இத்தாலிய அரசர் ஜூன் 11-இல் இவரை வரவேற்று அளவளாவி மகிழ்ந்தார். முசோ லினியை இரண்டாம் முறையும் கண்டார். அங்கேயே தாகூருடைய சித்திரா நாடகம் இத்தாலிய மொழியி லேயே நடிக்கப்பெற்றது. அதனையும் கவிஞர் கண்டு மகிழ்ந்தார்.

### குரோச்சே

இத்தாலியத் தத்துவப் பேரறிஞரான பெனிதத் தோகுரோச்சே ரோமாபுரியிலிருந்து நேபிள்சு நகருக்கு நாடுகடத்தப்பட்டிருந்தார். இருந்தாலும் அவரைத் தாகூர் கண்டு உரையாடவேண்டும் என்ற எண்ணத் தில் அவரை ரோமாபுரிக்கு முசோலினியே வரவழைத் திருந்தார். அதனால் தாகூரும் அத்தத்துவப் பேரறி ஞரைக் கண்டு குலாவிப் பேச முடிந்தது. பிளாரன்ஸ் நகரத்தின் லியோர்தே விஞ்சியார் சங்கம் இவரைப் பாராட்டி வரவேற்றது. அங்குள்ள பல்கலைக் கழகத் தில் "என்னுடைய கல்வி நிலையம்" என்பதனைப் பற்றிக் கவிஞர் பேசியருளினர்.

### சுவிட்சர்லாண்டு

துரிகியிலிருந்து சுவிட்சர்லாந்துக்குப் பாவாணர் சென்றதும் அவரே திடுக்கிட்டுப்போக வேண்டிய தாயிற்று. முசோலினியின் கட்சியின்கையில் வருந்திய பலரை அங்குக் கண்டார். முசோலினியைத் தாகூர் பாராட்டியதனையெல்லாம் அவை வருமிடத்திலிருந்தும் வேறு பொருள்படத் தனியே பிரித்து, திரித்து முசோ லினி அச்சிட்டு இருப்பதனைக் கண்டார். தாகூரோ இத்தாலிய மொழியை அறியார்; அவர் பேசிய பேச்சுக் களிடையே எல்லாம் வேறு சிலவற்றை உட்புகுத்திப்

பிரித்து வெளியிட்டுக் கொண்டிருந்ததை உணர்ந்தார். "வில்லனேவே" என்ற இடத்துக்குக் கவிஞர் சென்ருர். அங்கே பையோன் உணவு விடுதி பேர் போனது. அதிலே நீண்ட காலம், அதன்எதிரே விளங்கும் ஏரியைக் கண்டு கொண்டு பிரஞ்சு இலக்கியக் கவிஞரான விக்டர்ஹ்யூகோ வாழ்ந்தார். சில்லோன்கோட்டை அங்கே அழகிய பின்னணியாக விளங்கியது. அந்த அழகுச் சுழலிலே விக்டர் ஹ்யூகோ வாழ்ந்த அறையிலேயே தாகூரும் தங்கினுர். ரோமேய்ன் ரோலந்து இவரை அன்புடன் வரவேற்ருர். ஜ்யார்சு துகமல், பிரேசர், போரல், போவே முதலியோரையும் அங்கே கவிஞர் கண்டு மகிழ்ந்தார்.

### முசோலினி ஏமாற்றம்

முசோலினியால் நாடு கடத்தப்பெற்ற பேராசிரியர் சல்வதோரியின் மனைவியையும் அங்கே அவர் கண்டார். அந்த அம்மையார் நேரில் கண்டனுபவித்த பாசிசக் கொடுமைகளை அவர் வழியே அறிந்து கவிஞர் நடு நடுங்கிப் போனுர். முசோலினியையே போர் வெறி மகனுகக் கண்டு பாசிசத்தை எதிர்த்து "மான்செஸ்டர் கார்டியன்" என்ற ஆங்கில நாட்டுப் பத்திரிகைக்கு இதன் பயனுக எழுதினுர். பேராசிரியர் போ(F)மிச்சி என்பவர் இதற்கு ஒரு மறுப்பு எழுதினுர். இத்தாலியிலிருந்தபோது எல்லாம், தாம் தாகூரின் இடைவிடா நண்பராகவும், அவரது மொழிபெயர்ப்பாளராகவும் உடன் வாழ்ந்ததை அவர் குறிப்பிட்டார். தாகூர் கனவிலும் முசோலினியைக் கண்டித்தது இல்லையெனஅப்பேராசிரியர் எழுதினுர். "அரசியல் இயந்திரத்தின் நெஞ்சிற்குள்ளேயும் மனத்தினுடைய ஆளுமை(Personality)க்கும் நேரிய இடம் கிடைக்கும் என்பதனை இத்தாலி நாடு உலகிற்கு நேருக்கு நேர் பாடம் கற்பிப்பதாகக் கருதிச் சிலகாலம் நானின்பத்தில் பறப்பது போல் நினைத்தேன்; ஏமாந்தேன்" என்று தாகூர் அவர்கள் பதில் எழுதினுர்கள். பின்

னர் வியன்னுவுக்குத் திரும்பினர் கவிஞர். சோஷலிசத் தலைவரான அஞ்செலிகா பலபனோஃவைக் கண்டார். இத்தாலியச் சட்டசபையில் முசோலினியின் பாசிசத்தை எதிர்த்தவர் மத்தேஒதி என்பார். அதனுல் அவர் கொலையுண்டார்; அக்கொலையாளிகளுக்கு முசோலினியின் துணை உண்டு. விசாரணை நடந்தது. அதிலும் குற்றவாளிகளுக்கு எதிராக யார் வாதாட வர முடியும்? இருந்தாலும் ஒரு வழக்கறிஞர் வந்தார். அவரே மொதிக்ளியானி. இவரையும் பால் பனோஃவ் என்பாரோடு கவிஞர் கண்டு பேசி உண்மை உணரலானுர். அங்கே "நகரமும், கிராமமும்" என்ற பொருள் பற்றிப் பேசினர். இத்தாலியப் பேரிசையில் வல்ல சீனோரா லிபோ வெத்ஸ்க என்ற அம்மையார் இவருடைய பாடல்கள் மூன்றைப் பாடிக் காட்டினர்.

### வடகிழக்கு ஐரோப்பா

ஆகஸ்ட்டில், பேராசிரியர் மகலனோபிசு என்பார் தாகூரை இத்தாலியில் வந்து கண்டார். அவரோடு நம் பாவாணர் ஆங்கில நாட்டுக்குப் புறப்பட்டார். அங்கே இங்கிலாந்தின் ஆத்தான கவிஞரான ராபர்ட் பிரிட்ஜஸ் முதலிய அறிஞர்களைக் கண்டு அளவளாவினர். சின்ஹாப் பிரபுவுடன் நார்வேக்குச் சென்று அந்நாட்டு மன்னரின் வரவேற்பை ஆஸ்லோ என்ற தலைநகரில் பெற்று வியந்தார். சுவீடன் தலை நகரான ஸ்டாக்ஹோமில், "நான்சென்" முதலிய அறிஞர்களைக் கண்டு மகிழ்ந்தார். டென்மார்க்கின் தலைநகரான கோபன்ஹாகன் நகரை அடைந்து, அங்கே தத்துவப் பேரறிஞரான ஹோஃவ்டிங் என்பவரையும், புகழ் பெற்ற இலக்கிய ஆராய்ச்சிவாணரான ஜியார்ஜ் பிராந்தேஸ் என்பாரையும் கண்டு அளவளாவினர்.

### சர்மனி

சர்மனியில் ஹாம்பர்க்கு நகருக்குச் சென்று பின் அதன் தலைநகரான பெர்லினை அடைந்து அங்கே



1926—சுவிட்சர்லாண்டில் ரோமேயன்லாந்துடன் கவிஞர் (பக்கம் 125)



UNIVERSITY EXTENSION LIBRARY * MADURAI *



1926—பிராகில் பேராசிரியர் லெஸனி கவிஞரை வரவேற்றல்
(பக்கம் 127)



சப்பானிய ஓவியர் 1926-ல் பார்கில் கவிஞரை எழுதியது (பக்கம் 136)

இந்தியத் தத்துவப் பொருளைப் பற்றிச் சிறந்ததொரு சொற்பொழிவாற்றினர். சர்மன் நாட்டின் சனதிபதியான ஹிண்டன்பர்க்கு நம் கவிஞரை வரவேற்றுப் பாராட்டினர். தாகூரின் நூலைச் சர்மனியில் பதிப்பிக்கும் வொல்ஃவ என்பாரும் கவிஞருக்கு ஒரு விருந்தளித்தார். பெர்லினிலிருந்தே மான்செஸ்டர் கார்டியன் என்ற ஆங்கிலச் செய்தித் தாளுக்குக் கவிஞர் ஒரு கடிதம் எழுதினர். முசோலினியின் கொள்கையைத் தான் பாராட்டினலும் பாசிசக் கொள்கைக்குத் தான் எவ்வகையிலும் துணை நிற்க முடியாதென்று அதனில் விளக்கியிருந்தார். இதன் காரணமாக "இத்தாலிய மக்கள்" என்ற செய்தித்தாள் இவரைத் தாக்கி இகழ்ந்துரைத்தது. டிரெஸ்டகல், கொலோன் முதலிய இடங்களில் சொற்பொழிவாற்றிக் கவிஞர் பெர்லினுக்குத் திரும்பினர்.

### மேற்கு ஐரோப்பா

அங்கிருந்து செக்கோஸ்லோவேகியாவுக்குப் புறப்பட்டார். அதன் தலைநகரமாகிய பிராகில் "கலைவடிவங்கள்" என்பது பற்றியும் "நாகரிகமும் முன்னேற்றமும்" என்பது பற்றியும் உயர்ந்த சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். அப்போது செக் துரைத்தனம் வியன்னுவுக்குப் போவதற்கு அவருக்கென ஒரு விமானத்தை உதவியது. வியன்னுநகரம் பேர் ஆரவாரத்தோடு கவிஞரை வரவேற்றது. வனவாணி (கானத்தின் குரல்) என்ற தொடர் நிலைச் செய்யுளில் முதல் பாட்டை அப்போது தான் கவிஞர் எழுதினர். புதாபெஸ்டில் சொற்பொழிவாற்றியதோடு ஹங்கேரிய கவிவாணரான சந்தோர் கிஸ்பலுதி என்பாரின் சிலை அருகே தாம் வந்ததன் நினைவாகக் கவிஞர் ஒரு மரத்தை நட்டு மகிழ்ந்தார். ஹங்கேரிய நாவலாசிரியரான மாரிசு ஜோக்காய் என்பாரின் நினைவுக் குறியின் மீது ஒரு மாலையிட்டு வணங்கினர். பல்கிரேடு பல்கலைக் கழகத்திலும் கவிஞர் சொற்பொழிவாற்றினர், பல்கேரியாவிலுள்ள

சோஃவியா என்ற நகரில், போரிசு என்ற அரசர் பெருமானர் கவிஞரை வரவேற்ருர். ருமானியாவைச் சேர்ந்த புகாரெஸ்டில் ஃவர்டினண்டு அரசர் கவிஞரை வரவேற்று அளவளாவினர். கிரேக்கப் பெரு நகரான ஆதன்சில் கிரேக்க அரசர் பெருமானும் கவிஞரை வரவேற்ருர்; தம் நாட்டு "விடுதலை நிறுவனத்தின் படைத்தலைவர்" என்ற பட்டத்தையும் கவிஞருக்கு வழங்கினர்.

## எகிப்து

கிரேக்க நாட்டிலிருந்து, துருக்கி வழியாக, எகிப்து சென்று, அலெக்சாண்டிரியாவையும், கைரோவையும் கண்டார். கவிஞர் வந்ததன் நினைவாக எகிப்தியப் பாராளும் மன்றம் ஒத்திவைக்கப்பெற்றது. எகிப்திய அமைச்சர்கள் அவருக்கு விருந்து ஒன்று அளித்தார்கள். அப்போது அரேபிய இசையைக் கேட்டுத் தாகூர் மகிழ்ந்தார். எகிப்திய அரசரும் அவரை வரவேற்ற தோடு அவருடைய விசுவபாரதிக்கு என அரேபிய நூல் தொகுதி ஒன்றையும் அன்பளிப்பாகத் தந்து உதவினர்.

## திக்குவிசய முடிவு

இவ்வாறு அவருடைய திக்குவிசயம் சென்ற இடம் எல்லாம் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. நாடு பிடிக்கும் கொடுங்கோலராக அன்றிப் பண்பாடு, அறிவு விளக்கம், புதுமை, ஒற்றுமை என்ற நற்செய்திகளை உலகிற்கு அளிக்கும் தூதராகவே அவர் திக்கு விசயம் செய்து வந்தார். கல்கத்தாவில் அவர் காலெடுத்து வைத்ததும் கல்கத்தா மேயரான சென் குப்தா அவர்கள் தலைமையில், இந்திய மக்கள் திரண்டு, பெரு மகிழ்ச்சியோடு கவிஞரை வரவேற்றனர். சாந்தி நிகேதனத்தை டிசம்பர் 19-ஆம் நாள் சென்று அடைந்தார் கவிஞர்.

**சிரத்தானந்தர் கொலை**

கவுஹதியில் இந்திய தேசீய காங்கிரசு கூடுவதற்கு முன்னே, நம் நாட்டின் மாபெரும் தலைவரான சிரத்தானந்த அடிகள் டெல்லியில் கொலையுண்டார். இதைக்கேட்ட தாகூர் அவர்கள் திடுக்கிட்டுப் போயினர். இதனைப் பற்றிச் சாந்திநிகேதனத்தில் ஒரு கூட்டத்தில் மிகவருந்திப் பேசினர். கோழைகளாக உள்ள நிலையே கொடுமைகளையும் பாவச் செயல்களையும் செய்யுமாறு வலியோரைத் தூண்டுகிறது என்று கவிஞர் வற்புறுத்தினர். நாட்டின் நலனை நாடி ஒருவரை ஒருவர் அறிந்துகொள்வதோடு அன்பாகவும் நடக்க வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக்கொண்டார். இதற்கிடையே தம்முடைய கலை வாழ்வைத் தாகூர் மறந்தாரில்லை. நடிர்பூசை (பொதுமகள் வழிபாடு) என்ற நாடகம் சனவரியில் அரங்கேறியது. அதிலே புத்தபிட்சுவாகத் தாகூரே நடித்தார்.

**அடக்குமுறை**

கலையிலேயே தம்மை மறந்திருக்க, நாட்டின் நிலை அவரை விடவில்லை. பல இளைஞர்கள் வங்காள இடைக்காலச் சட்டங்களின் கீழே விசாரணை ஒன்றுமின்றிச் சிறையில் அடைபட்டுக்கிடந்தனர். இந்தப் பழைய அநாகரிகக் கொடுங்கோன்மையை எதிர்த்துக் கவிஞர் ஓர் அறிக்கை விடுத்தார். வங்காள நூல்கள் சிலவற்றைத் துரைத்தனத்தார் தடைசெய்தனர். அதனை எதிர்த்து ஓர் இயக்கம் கிளம்பியது. ஆனால், தாகூர் பெருமகனே அந்த இயக்கத்தை வரவேற்கவில்லை. துரைத்தனத்தார் எதிர்க்க மாட்டார்கள் என்று கனவு கண்டு எழுதிப் புலம்பியிருப்பது ஆண்மையன்று என்று அந்த நூல் ஆசிரியர்களுக்கு நினைவூட்டினர்.

**நாடகம் முதலியன**

கலையை மறவாத தாகூர், நடனமாக விளக்கக் கூடிய பல இசைப் பாடல்களை இயற்றுவதில் ஈடுபட்

டார்; மார்ச்சு மாதத்திலே "நடராசர்" என்கிற புதிய நாட்டிய நடன நாடகத்தை அரங்கேற்றினுர். "விசித்திரம்" என்கிற புதிய இதழ் தோன்றியது; விசித்திரம் என்ற பாடலை எழுதி வெளியிட்டார். அவருடைய "நடராசரும்" நந்தலால் போசு எழுதிய ஓவியங்களோடு அந்த இதழிலேயே வெளிவந்தது. திங்கள் தோறும் கவிஞர் தொடர்ந்து அதில் எழுதி வந்தார். பரக்பூர் மகாராசா அழைத்ததற்கு இணங்கி, இந்தி இலக்கிய மாநாட்டின் தலைமை பூண்டார். பின் சோத்பூர், ஆக்ரா, அகமதாபாத். முதலிய இடங்களுக்குச் சென்ருர். குசராத்து இலக்கியக் கழகம் அவரைப் பாராட்டிக் கொண்டாடியது. சாந்திநிகேதனம் திரும்பிய பிறகு சந்திர நாகூருக்குச் சென்று பிரவர்த்தக சங்கத்தின் பிரார்த்தனை மண்டபத்திற்குக் கடைகால் நாட்டினுர். சந்திர நாகூரின் மேயர் அவர்கள் தந்த பொற்கிழியை ஏற்றுக் கொண்டு ஷில்லாங்கிற்கு அமைதி தேடிச் சென்ருர். "மூன்று தலைமுறை" என்ற தலைப்புடைய நாவலை விசித்திரத்திற்காக அங்கே எழுதத் தொடங்கினுர். இந்த நாவலே பின்னர் "யோகா யோகம்" என்று அவராலே பெயரிடப் பட்டது.

———

# 3. கீழைத் திக்கு விசயம்

**சுமத்திரா வரை**

மேலைத் திக்கு விசயத்தின் பின் அவரது கீழைத் திக்கு விசயம் தொடங்கியது. பிர்லா இதற்கென 10,000 ரூபாய் நன்கொடை தந்தார். கவிஞர் மலாயா, சாவா, பாலி, தாய்லாந்து முதலிய இடங்களைச் சுற்றி வரப் புறப்பட்டார். சிங்கப்பூரை அடைந்து, அங்கிருந்த கவர்னர் தலைமையில் "மனித இனத்தின் ஒற்றுமை" என்ற பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினர். பல பாராட்டுகளுக்கும், விருந்துகளுக்கும் பின்னர் மொராக் காவுக்குப் பயணமானர். பல இடங்களிலும் ஓயாது சொற்பொழிவாற்றிய பின், பிைனங்கு சென்று சுமத்தி ராவுக்குப் புறப்பட்டார். பத்தாவியாவில் இவருக் கென ஏற்பாடான பெரியதொரு விருந்தில் "சாவா வுக்கு வந்த இந்திய வழிப்போக்கன்" என்ற பாடலைப் பாடினர். "விசயலட்சுமி" என்கிற அவருடைய வங்காளப் பாட்டின் ஆங்கில மொழி பெயர்ப்பாகும் அது.

**பாலி**

அங்கிருந்து பாலிக்குப் பயணமானர். பாலியி லேயே, "இலக்கியத்தில் புதுமை" என்றதொரு கட்டு ரையை எழுதி முடித்தார். "சாகித்திய தர்மம்" என்ற தலைப்பில் ஒரு கட்டுரையைத் தாம் புறப்படுவதற்கு முன் விசித்திரத்தில் வெளியிட்டிருந்தார். அதிலே, நாவல் இலக்கியத்தின் தற்கால வெறிப் போக்கை அவர் தாக்கியிருந்தார். அந்தக் கட்டுரையைப் பற்றிய விவாதம் வங்காளத்தில் நிகழ்வதைக் கேட்டு, "இலக் கியத்தில் புதுமை" என்பது பற்றிய கட்டுரையைக் கப்பலிலேயே எழுதலானர். பாலியில் இறங்கியதும் அத்தீவின் இயற்கையழகில் ஈடுபட்டுச் சாகரீகை என்ற பாட்டை எழுதினர். அரச நிலைக் கொண்டாட்

டத்தோடு அந்தத் தீவினைச் சுற்றிவந்தார். பாலிமக்க ளது நடன நாட்டியங்களில் தம்முள்ளத்தைப் பறி கொடுத்தார் கவிஞர்.

## ஜாவா

பாலியிலிருந்து சாவாவிலேயுள்ள 'சவுரபாயா' வந்து சேர்ந்தார். 'சோதகத்தா' என்ற இடத்தில் தம் பெயர் சூடிய ஒரு பாலத்தையும் ஒரு தெருவினையும் திறந்து வைத்தார். போரோபுதூர் என்ற இடத்திற் குச் சென்று அங்கே விளங்கும் பெருங் கோவிலைக் கண்டு மகிழ்ந்தார். தாய்லாண்டு, பாண்டுங்கு, படா வியா முதலியவற்றின் வழியே தாய்லாண்டு சேர்ந்தார். அங்கே அரசரும், அரசியாரும், பெயர் பெற்ற பாலிப் பேரறிஞரும், இளங்கோமகனும் ஆன சந்திமுன் என் பாரும், மனமகிழ்ந்து மிகமிக விரும்பிக் கவிஞரை வர வேற்றனர்.

## இந்தியாவுக்கு

கவிஞர் தம் நாடு திரும்பியதும், "நடராசர்" என் கின்ற நடனநாட்டியத்தைத் திருத்தி அமைத்து "ருதுரங்கம்" என்ற தலைப்போடு அரங்கேற்றினர். மாக்மில்லன் கம்பெனியார் அவருடைய "மின்மினி கள்" என்ற நூலையும், "நண்பர் ஒருவருக்குக் கடிதங் கள்" என்ற நூலையும் வெளியிட்டனர். இவ்வாறு 1927-ஆம் ஆண்டு முடிந்தது.

## விருந்தாளிகள்

இந்திய விஞ்ஞான காங்கிரஸ் அப்போது கூடி யது. அதன் உறுப்பினர்களைச் சாந்திநிகேதனத்தில் தாகூர் அவர்கள் அன்புடன் வரவேற்றார். பேரிசை வாணரான கிளாராபட்டு அம்மையாரும் சாந்தி நிகேதனத்திற்கு வந்திருந்தனர். பேராசிரியர் விண் டர் நிட்சுக்குப் பிறகு பிராகிலுள்ள சர்மன் பல்கலைக் கழகத்தில் வடமொழிப் பேராசிரியரான லெஸ்லி என்

பவர் விசுவபாரதியில் வந்துபோகும் பேராசிரியராக அமர்ந்தார்.

### மாணவர்

அப்போது ஒரு சிறு குழப்பம் கல்கத்தாவில் நிகழ்ந்தது. நகரக் கல்லூரியில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே, சரசுவதி பூசைக் கொண்டாட்டத்தைப்பற்றி முரண்பாடு எழுந்தது. அந்தக் கல்லூரியோ பிரம்ம சமாசத்தாரின் நிலையம். அந்தப் பிரம்ம சமாச மரபுக்கும் பழக்கவழக்கத்திற்கும் மாருகச் சரசுவதி பூசை கொண்டாடவேண்டும் என்று மாணவர்கள் கேட்பது தகுதியன்று எனக் கவிஞர் பெருமான் எடுத்துக்காட்டினர்.

### சமரசம்

வங்காள இலக்கிய அறிஞர்களுடைய தற்காலப் போக்குகளைப்பற்றி இருவேறு மாறுபட்ட கொள்கை எழுந்தன. இருசாரார் மனமும் புண்பட்டன. இவர்களிடையே சமரசம் தேடி, இவருடைய கல்கத்தா வீட்டில் இருசாராரும் ஒருங்குகூடிய கூட்டம் ஒன்று கூடியது. அதற்குத் தாகூர் பெருமகனர் தலைமைபூண்டார்.

### துலாபாரம்

பின்னே கல்கத்தா மாநகரம் இவரது அறுபதாம் ஆண்டு விழாவைக் கொண்டாடியது. அப்போது துலாபாரத் திருவிழாவும் நிகழ்ந்தது. இவரது எடைக்கு நேராக இவருடைய நூல்களையே நிறுத்துப் பொது நிலையங்களுக்கு நன்கொடையாக மக்கள் உதவினர்கள். பழங்காலத்தில் அரசர்கள் தம் எடைக்கு நிகரான பொன்னை இவ்வாறு நிறுத்து ஏழை எளியவர்களுக்குத் தருவது வழக்கம்.

### அடையாறு

ஆக்சுபோர்டு பல்கலைக் கழகம் ஹிப்பர்ட்டுச் சொற்பொழிவுகளை நிகழ்த்துமாறு இவரைக் கேட்டுக்

கொண்டது. அதற்கெனக் கல்கத்தாவை விட்டுப் புறப்பட்டார். ஆனால், சென்னையில் வந்தபோது உடல் நலம் குறைந்தது. எனவே, பயணத்தை விட்டொழித்து, பெசன்ட்டு அம்மையார் விருப்பியபடி ஒரு வாரம் அடையாற்றில் ஓய்வு கொண்டார். அங்கிருந்து கொழும்புக்குப் போகும் வழியில் புதுச்சேரியில் தங்கி அரவிந்தரையும் கண்டார்.

### அரவிந்தர்

அவரைக் கண்டதும் அவர் தம் ஆன்மாவைத் தேடி அதனைக் கண்டு பிடித்து விட்டார் என்பது நன்கு விளங்கியது. அந்த நீண்ட அனுபவத்தின் பயனாகக் கடவுளாற்றலைப் பிறரிடமும் தூண்டக்கூடிய பேராற்றல் அவர் பெற்றிருந்தார். உள் ஒளியாலே அவர் முகம் ஒளி பெற்று விளங்கியது. வாழ்வினை ஒறுத்து வரும் எந்தக் கொள்கையின் கொடுங்கோலுக்கும் அஞ்சி அவருடைய ஆன்மா ஒடுங்கி நொறுங்கிக் கிடக்கவில்லை யென்பது அவருடைய திருமுன்பில் நன்கு விளங்கியது. வாழ்க்கையைப் புண்படுத்திக் கொள்வதால் இன்பம் அடையும் போக்கு அங்கில்லை. எல்லாமாய் ஒன்றினுள் ஒன்றாகிப்போகும் ஒருப்பாட்டு வடிவினை ஆன்மாவிற்குத் தரும் சாந்தியைப் பற்றி அவர் வழியே பழங்கால இந்து ரிஷிகள் பேசுவது போல் கவிஞர்க்குத் தோன்றியது. “உம்மிடம் அந்தச் சொல் மந்திரம் உள்ளது. அதனை ஒப்புக்கொள்வதற்கே நாங்கள் காத்துக்கொண்டு இருக்கிறோம். நான் சொல்வதைக் கேள் என்று இந்தியா உம்முடைய குரல் வழியே உலகிற்குப் பேசும்” என்று கவிஞர் அவரிடம் கூறினர்.

### பலப் பல

இலங்கை சென்று திரும்பிப் பின் மைசூர் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தரான விரசேந்திரநாத சீல் என்பாரின் அழைப்புக் கிணங்கிப் பங்களூர் சென்

ரூர். “கடைசிக் கவிதை” என்ற நாவலை அங்குத் தான், தாகூர் எழுதி முடித்தார். சாந்தி நிகேதனம் திரும்பிய பின், கல்கத்தாவிலே பிரம்ம சமாசத்தின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டார். சாதா ரண பிரம்ம சமாசத்தின் மேடையில் “இராம்மோகன் ராய் நற்செய்தி” என்றதொரு வழிபாட்டுச் சொற் பொழிவு இயற்றினார். அந்தக் கிறிஸ்துமசில் கல்கத் தாவில் நடைபெற்ற ‘அனைத்து இந்திய நூல் நிலையச் சங்க’த்தின் மாநாட்டில் படிப்பதற்கெனவே ஒரு பேச்சினை எழுதினார். இந்தியாவின் அரசியல் பிரதி நிதியான இர்வின்பிரபு அந்த ஆண்டின் முடிவில் சாந்தி நிகேதனம் வந்திருந்தார். 1929-ஆம் ஆண்டின் முதலில் கல்கத்தாவில் கூடிய மக்களின் பாராளும் மன்றத்தில் 28–1–1929-இல் தாகூர் தலைமைபூண்டார்.

**கனடா**

கனடா நாட்டில் தேசீயக் கல்விக் குழு ஒன்று உண்டு. அது மூன்று ஆண்டுக்கு ஒருமுறை மாநாடு ஒன்று நடத்தும். அந்த மாநாட்டில் பங்கு கொள்ளு மாறு நம் கவிஞர் பெருமானை இக்குழுவினர் அழைத் திருந்தனர். கவிஞர் அதற்காகக் கல்கத்தாவிலிருந்து புறப்பட்டு டோக்கியோ போய்ச் சேர்ந்தார். அங் குள்ள புகழ்பெற்ற தினசரி ஒன்றின் விருந்தினராய் நீண்ட நாட்கள் தங்கினார். 1929-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ஆம் தேதி வான்கூவர் என்ற இடத்தில் “ஓய் வின் தத்துவம்” என்ற புகழ்பெற்ற சொற்பொழிவை நிகழ்த்தினார். அடுத்தநாள் “இலக்கியக் கொள்கை கள்” என்பது பற்றிப் பேசினார். வான்கூவரிலுள்ள சீக்கியக் கோவிலைக்கண்டுகளித்தார். ஏப்ரல் 14-இல் தம்முடைய செலவுபேற்றுச் சொற்பொழிவுகளைப் (Farewell Address) பேசி முடித்தார்.

**பயணச் சீட்டு**

அமெரிக்காவில் பேர்பெற்ற ஹார்வார்டு, கொலம் பியா, கலிபோர்னியா, டெட்ராய்டு முதலிய பல்கலைக்

கழகங்கள் அவரை விரும்பி அழைத்தன. அமெரிக்காவில், லாஸ் ஏன்சல்ஸ் என்ற இடத்திற்கு வந்தபோது தம்முடைய பாஸ்போர்ட்டு என்ற வெளிநாட்டுப்பயண உரிமைச் சீட்டானது தொலைந்து போனதைக் கண்டார். அங்கே வெளியேறு (Emigration) துறை அலுவலகத்தார் ஆசிய நாட்டுப் பிரதிநிதியாகவும் கீழைநாட்டாராகவும், வெள்ளை நிறம் அல்லாதவராகவும் இருந்தோர்களைத் தனிமுறையில் நடத்தும் கொடுமையை இவரும் அனுபவிக்க வேண்டியதாயிற்று. இதனை எதிர்ப்பதற்கு அறிகுறியாகத் தம்முடைய அமெரிக்கப் பயணத்தை விட்டொழித்துச் சப்பானுக்குப் புறப்பட்டார். சப்பானியக் கப்பலிலேயே அக்கப்பல் தலைவருடன் கப்பலிலுள்ள எல்லோருமாகச் சேர்ந்து அவருடைய பிறந்தநாளைக் கொண்டாடினார்கள்.

### சப்பான்

டோக்கியோவில் "கீழைக்கலையும் சப்பானியர் செய்தற்கமைந்த தொண்டும்" என்பது பற்றிப் பேசினார். சப்பான் மக்கள் பிறர்கண்ணைத் திறந்து, உலகத்தின் பிறபகுதிகளில் பொதுவாகப் புறக்கணிக்கப்பெறும் நாகரீகத்தின் சிறந்ததொரு பாங்கைக் காட்டுவார்கள் என்றும், அரசியலிலும்கூட மனித நல்லுறவு என்னும் செல்வத்தில் மிகச்சிறந்து சப்பான் விளங்கவேண்டுமென்றும் தாம் மிகமிக விரும்புவதாக அச்சொற்பொழிவில் கவிஞர் கூறினார். ஒகூமாக் கோமகனார் விருந்தளித்துக் கவிஞரைப் பாராட்டினார். வழியிலே இந்தோ சீனாவின் பிரஞ்சு அரசாங்கத்தின் மக்களும் அவரை அன்போடு வரவேற்றார்கள். கவிஞர் ஜூலை மாதம் 5-ஆம் தேதி கல்கத்தாவிற்குத் திரும்பினார்.

### இந்தியாவில்

எல்லாத் துறையினரும் இவரை அழைக்க விரும்பினர். கல்கத்தா மாநிலக் கல்லூரியில் செப்டம்பர்

மாதத்தில் இரவீந்திர பரிச்சய சபையின் ஆதரவில் "இலக்கியத்தின் இயல்பு", "இலக்கிய ஆராய்ச்சி" என்ற இரண்டு சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். தம்முடைய பழைய நாடகமான "ராசா ராணி" என்பதனைத் "தபதி" என்று மாற்றி அமைத்தார். அது அவருடைய கல்கத்தா வீட்டில் தொடர்ந்து நான்கு நாட்கள் நடிக்கப்பெற்றது. அதில் கவிஞரே விக்கிர மன் என்ற இளைய மன்னனாக நடித்தார்.

**தற்காப்பு**

வங்காளச் சிறுவர்களும் சிறுமிகளும் தற்காப்புக் கலையில் பயிற்சி பெறவேண்டும் எனப் பலகாலம் கருதி வந்தார் கவிஞர் பெருமான்; ஜுஜிக்சு கலையில் (நரம்பு வேலைக் கலையில்) சிறந்த தககாகி என்பாரைச் சாந்தி நிகேதனத்திற்குக் கவிஞர் வரவழைத்தார். அவரும் வந்து பயிற்சி தந்தார்.

**எத்தனைத் துறைகள்**

இந்தக் காலத்தில் தான், கவிஞர் கலையில் ஈடுபட்டு அதில் பொழுதைக் கழித்தார். பரோடாவின் கெய்க் குவார் அரசரது வரவழைப்பை ஏற்று, 1930-ஆம் ஆண்டு சனவரி 26-ம் நாள் அங்கே "மனிதன் ஒரு கலை ஞன்" என்ற பொருள்பற்றி சொற்பொழிவாற்றினர். வழியில் நீக்க முடியாதபடி, காலம் தாழ்த்தவேண்டி நேரிட்டதனல், முன் திட்டமிட்டபடி வங்காள இலக்கிய மாநாட்டின் தலைமைபூண முடியாமல் போய்விட்டது. இவருக்குப் பதிலாக இவருடைய தமக்கையார் சொர்ண வர்ணதேவியார் கடைசி நேரத்தில் தலைமைபூண்டு மாநாட்டை நடத்திவைத்தார். வேலையாட்களின் கூட்டுறவுச் சங்கங்களின் மாநாட்டைக் கவிஞர் திறந்து வைத்தார்.

**சீ நிகேதனம்**

வங்காள கவர்னர் அவர்கள் கவிஞரின் சீ நிகே தனம், முதலுக்காக 5,000 ரூபாயும், செலவுக்காக

3 ஆண்டு வரை ஆண்டு தோறும் 1,000 ரூபாயும் துரைத்தனத்திலிருந்து நன்கொடை பெறும் எனத் தெரிவித்தார். இந்த நன்கொடை எந்தவகையிலும் போதியது அன்று என்பதனைக் கவிஞர் கண்டார். பொதுமக்கள் மிகக்கொடுமையாகத் துரைத்தனத்தை எதிர்க்கலாயினர்.

———

## 4. பதினோராம் பயணம்

### வெளிநாட்டுப் பயணம்

1930-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 2-ம் நாள் கவிஞர் தம் பதினோராம் வெளிநாட்டுப் பயணத்தைத் தொடங்கினார். பிரான்சிலுள்ள மாசேல்ஸ் சென்று, மான்தி கார்லோ என்ற இடத்திற்கு அருகே கான் என்பாரின் விருந்தாளியாகத் தங்கினார். அங்கே செக்கோஸ்லோவேக்கியா நாட்டுத் தலைவரான மசரிக் என்பாரை கண்டு அளவளாவினார். கனவிருடைய அர்கண்டினா நாட்டு நண்பரான விக்தோரியா அம்மையார் கவிஞர் எழுதிய ஓவியங்களைக் கண்டு ஒரு கண்காட்சியைப் பாரிசு நகரத்தில் ஏற்பாடு செய்தார்கள். அம்மாபெரு நகரிலேயே அவருடைய 69-ஆம் பிறந்த நாள் கொண்டாட்டம் நிகழ்ந்தது.

### காந்தியார் சத்தியாக்கிரகம்

அங்கிருந்து கவிஞர் இலண்டனுக்கும் பர்மிங்காமுக்கும் சென்றார். அப்போது காந்தியின் உப்புச் சத்தியாக்கிரகம் தண்டியில் நடந்தது. துரைத்தனம் அவரைச் சிறையில் அடைத்ததும் சித்தகாங்கில் துப்பாக்கிக் கொள்ளை நிகழ்ந்தது. ஷோலாபூரில் ஏற்பட்ட சூழ்நிலையின் காரணமாகப் போர்நிலைச் சட்டமும் வெளியாயிற்று. காங்கிரசே சட்ட விரோதமான நிலையம் என வைசிராய் அறிவித்தார். தக்காவில் இந்து முசுலீம் கலகமும் பரவியது. இந்தத் திடுக்கிடும் செய்திகள் கவிஞர் காதிற்கு எட்டின. மனம் கலங்கி நின்றார். இதன் பயனாக மான்செஸ்டர் கார்டியன் என்ற தினசரிக்கு அவர் ஒரு பேட்டியளித்தார். பொறுப்பற்ற முறையிலே துரைத்தனம் கொடுமை செய்துகொண்டு வாழ முடியாது என்று சுட்டிக் காட்டினார். மக்கள் மீது தான்தோன்றித்தனமாய்க் கொடிய தண்டனைகளைச் சட்டத்தின் உயர்ந்த பெயரால் துரைத்தனம்

விதித்துவரும் அடக்கு முறையை வன்மையாகக் கவிஞர் கண்டித்தார். அப்போதிருந்த சிக்கல்களை அடக்கு முறையால் தீர்க்க முடியாது என்றார். இந்தச் சிக்கலைக் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள சிறந்த மக்கள் ஒருங்கு கூடித் தீர்க்கவேண்டும் என்று வேண்டிக்கொண்டார்.

### ஹிப்பர்ட்டுச் சொற்பொழிவுகள்

ஆக்சுபோர்டிலுள்ள மான்செஸ்டர் கல்லூரிக்குக் கவிஞர் வந்தார். 'மனிதனது சமயம்' என்ற பொருள் பற்றித் தம்முடைய ஹிப்பர்ட் சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். இந்திய அமைச்சராயிருந்த வெட்ஜுவுட் பென் என்பாரோடு இந்திய சிக்கல்களைப் பற்றிக் கலந்து பேச இலண்டனுக்குக் கவிஞர் திரும்பினர்.

### குவேக்கர்கள்

குவேக்கர்களது ஆண்டு நிறைவு விழாக் கூட்டம் ஒன்றிலும் கவிஞர் பேசினர். கடந்த இரண்டரை நூற்றாண்டுகளில் குவேக்கர்களைச் சாராத ஒருவர் அத்தகைய கூட்டத்தில் பேசுவதற்கு அழைக்கப் பெற்றது அதுவே முதல் முறையாகும். கூட்டத்தின் முடிவில், இந்தியாவில் ஆங்கிலேயரது ஆட்சியை எதிர்த்து அவர் கூறியவற்றைப்பற்றிக் கேள்விகள் சரமாரியாக எழுந்தன. "நீங்கள் எங்களிடத்தில் இருப்பதாக நினைத்துப் பாருங்கள். அமெரிக்காவிலே உங்களுடைய சகோதரர்கள் தங்கள் இரத்தத்தையும் சிந்தி விடுதலை பெற விரும்பிய காலத்தையும் நினைத்துப் பாருங்கள்" என்று அக்கேள்விகளுக்கு விடையிறுத்தார்.

### சாட்லர்

ஆக்சுபோர்டுக்குத் திரும்பி ஹிப்பர்ட் சொற்பொழிவின் இறுதிப் பேச்சினைப் பேசி முடித்தார். அப்போது கூடிய கூட்டம்போல் அதற்குமுன் கூடியதேயில்லை. பல்கலைக் கழகக்கல்லூரியின் தலைவரான



1930—ஆக்சுபோர்டில் பேராசிரியர் சாக்சு என்பாரோடு கவிஞர்
(பக்கம் 140)

ERSITY EXTENSION LIBRA



1930—பெர்லினில் தம் ஓவியக் கண்காட்சியின்போது கவிஞர் (பக்கம் 141)

கவிஞர் தாம் எழுதிய ஓவியத்தைக் காணல்(பக்கம் 141)



சர். மைக்கேல் சாட்லர் பேசினுர்; பாராட்டினுர். "தாங்கள் எங்களுக்குத் தந்துள்ள பெருமையை ஆக்சுபோர்டில் நாங்கள் என்றுமே மறக்க மாட்டோம். எங்களிடம் புதியதோர் உள் உணர்வையே எழச் செய்துள்ளீர்கள்" என்று அவர் கவிஞரையும் சொற்பொழிவையும் புகழ்ந்தார்.

### கல்வி – ஓவியம்

பர்மிங்காமுக்குத் திரும்பிக்"கிழக்கிலும் மேற்கிலும் விளங்கும் கல்வியின் குறிக்கோள்கள்" என்ற பொருளைப்பற்றி அங்கே பேசினுர். அங்கே கவிஞர் தம்முடைய ஓவியங்களின் காட்சி நடைபெற்றதையும் கண்டு மகிழ்ந்தார். அப்போது இந்தியாவின் அரசியல் நிலைமையைப் பற்றியும், அதிலும் மகாத்மா காந்தியவர்கள் புரட்சிக்கெனக் கையாளும் புது முறையினைக் குறிப்பிட்டும் எழுதிக் காந்தியடிகளைச் சிறப்பித்துப் பாராட்டினுர்.

### சர்மனி

அங்கிருந்து சர்மனிக்குப் புறப்பட்டு ஜூலை 11-இல் பெர்லினை அடைந்தார். ரைக்ஸ்டாக் என்ற பாராளுமன்றத்தின் உறுப்பினர்களையும் அங்கே கவிஞர் கண்டார்; ஐன்ஸ்டைன் என்ற உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானப் பேராசியர் அவர்களையும் கண்டு அளவளாவினுர். அங்கேயும் தம்முடைய ஓவியங்களின் கண்காட்சியைத் திறந்துவைத்தார். மூனிச்சில் பழைய நகர மன்றத்தில், அந்நகர வரவேற்பு விழா ஒன்று கவிஞருக்கென நடந்தது. புகழ்பெற்ற பாஷன்ப்ளே (Passion play) என்ற பழைய நாடகத்தினைக் கவிஞர் அங்குக் கண்டார். அது அவர் உள்ளத்தை மிகமிகக் கவர்ந்தது. கவிஞர் பெருமான் பேரரசர்போல் பல நகரங்களூடேயும் மிகவிரைவாக உலாப்போந்து டென்மார்க்கு நாட்டை அடைந்தார். அதன் தலைநகரில் அவருடைய ஓவியங்களின் கண்காட்சி நடைபெற்றது.

**தக்காக் கலகம்**

ஜெனிவாவில் சில நாட்கள், கவிஞர் ஓய்வாக இருக்கும்போது தக்காவில் ஏற்பட்ட இந்து முசுலீம் கலகங்கள் அவர் செவிக்கு எட்டின. இதனைப்பற்றி ஆங்கிலத் தினசரிகள் வாய்மூடிக் கிடப்பதனைப்பற்றி மனம் கசந்து எழுதினார். தக்காவிற்குள்ளே கயவர்களை வேண்டுமென்றே துரைத்தனம் கொண்டுவந்த கொடுமையையும், அதன்பயனாக எடுத்துக்கூற முடியாத கொடுமைகள் அங்கே நிகழ்ந்ததனையும் கவிஞர் எடுத்துக்காட்டினார். இவ்வாறு வெளிநாட்டுப் பயணத்திடையே வெளிநாட்டாருக்கு இந்தியாவின் உண்மை நிலையை அளக்கும் வாய்ப்புகள் கிடைத்தன. அங்கிருந்து ருஷியாவிற்குப் புறப்பட்டுச் செப்டம்பர் 11-இல் மாசுகோ மாநகரை அடைந்தார். "வெளிநாட்டுப் பண்பாட்டுத் தொடர்புடைக் கழகத்தின்" பிரதிநிதி அவரை இரயிலடியிலேயே வந்து வரவேற்றனர். அக்கழகத்தின் தலைவர் பேராசிரியர் பெற்ரேப் என்பாரின் தலைமையில் ஒரு வரவேற்பு நடந்தது. எழுத்தாளர் சங்கங்களின் சார்பில், ஓர் இசை அரங்கமும் ருஷியா அறிஞர்கள் ஏற்பாடு செய்தார்கள். அங்கே பல எழுத்தாளர்களைக் கண்டு கவிஞர் அளவளாவினார். அப்போது மாசுகோவில் உள்ள குழந்தைகளுக்குக் கைத்தொழில் பயிற்சி தரும் நிலையத்தையும் உழவர்கள் நிலயத்தையும் போய்க்கண்டார். மாசுகோவின் துரைத்தனக் கண்காட்சி நிலயத்திலேயே கவிஞருடைய ஓவியங்களின் கண்காட்சி நடைபெற்றது. சோவியத்துக் கலைஆய்வாளர்களின் வரலாற்றிலேயே அக்கண்காட்சி மிகச் சிறந்த நிகழ்ச்சியென அறிஞர்கள் அதனைப் பாராட்டினார்கள். "மாபெரும் பீடர்" என்ற நாடகத்தையும் டால்ஸ்டாய் எழுதிய "மறித்தெழுதல்" முதலிய நாடகங்களையும் மாசுகோ கலையரங்கில் கவிஞர் கண்டுகளித்தார். அங்குள்ள மாணவர்களைக் கண்டு இந்தியாவில் தாம் அமைத்த கல்விநிலயத்தைப் பற்றி அவர்களுக்கு எடுத்து



கவிஞர் ஓவியம் வரைகிறார் (பக்கம் 141)





1930—மாஸ்கோவில் குழந்தைகளோடு (பக்கம் 142)

...SITY EXTENSION LIBRARY
MADURAI



1930—கவிஞர் கண்ணில்லா ஹெலன் கெல்லரோடு (பக்கம் 143)

விளக்கினுர். குழந்தைகள் பள்ளி, கைத்தொழில் மியூசியம், புரட்சி மியூசியம் முதலிய பலவற்றைப் போய் நேரில் பார்வையிட்டார். தொழிலாளர் நிலையங்களின் நடு அமைப்பானது தந்த பெரியதொரு வரவேற்பில் செலவு பேற்றுச் சொற்பொழிவினை நிகழ்த்திஞர். அப்போது சோவியத்துக் கவிவாணர் சிங்களி என்பார் இரவீந்திரநாதரைப் பற்றி ஒரு பாடல் பாடிச் சிறப்பித்தார். கால்பெதரின் என்ற ருஷிய ஆசிரியர் நம் தாகூரின் பாடல்கள் மூன்றினை ருஷிய மொழியில் பாடிக் காட்டினுர். "அஞ்சல் அலுவலகம்" என்ற நாடகத்திலிருந்து பொறுக்கி யெடுத்த சில பாட்டுக்களைச் சிமனே என்ற நடிகர் அப்போது நடித்துக் காட்டினுர்.

**காந்திக்கு**

25-ஆம் தேதி ருஷ்யாவிலிருந்து கவிஞர் சர்மனிக்குத் திரும்பினுர். அங்கிருந்து அக்டோபர் 3-ஆம் தேதி அமெரிக்காவுக்குக் கப்பலில் பயணமானுர். வட்ட மேசை மகாநாட்டில் பங்கு கொள்ளக் காந்தியடிகள் தயங்குவது கண்டு மிக மிக வருந்தி அமெரிக்காவிலிருந்து ஒரு கடிதத்தை ஸ்பக்டேட்டரில் வெளியிட்டார். மனிதனது எதிர்கால வரலாற்றின் பிரதிநிதிகளாக வாழ்பவர்களுக்கு வட்டமேசை மகாநாட்டில் தம்முடைய குரலைக் காந்தியடிகள் எழுப்பிக் காட்டக் கூடும் என்று கவிஞர் பெருமான் அதில் எழுதி இருந்தார்.

**அமெரிக்காவில்**

நியூயார்க்கில் அந்நகரத்து 400 பெருமக்கள் அமைத்ததொரு பெரு விருந்தில் கவிஞர் கலந்து கொண்டார். அமெரிக்க நாட்டுத் தலைவரான வான் கூவரைக் கவிஞர் கண்டார். அமெரிக்காவில் வாழ்ந்த பஹாய் என்ற பாரசீக இசுலாமியரின் சார்பில் கார்ணகி மன்றத்தில் "பாரசீகத்தின் முதலும் கடைசியு

மான தீர்க்கதரிசி" என்ற பொருள்பற்றிப் பேசினர். அமெரிக்க நாட்டுச் சிறந்த நாட்டியக் கலைஞரான ரூட் செயின்ட் டென்னிஸ் என்ற அம்மையார் கவிஞர் பெருமானின் பாடல்களை நாட்டியமாடிப் பாடி நிதி திரட்ட முன் வந்ததனை நன்றியுடன் ஏற்றுக் கொண்டார். ஆனால், அந்தப் பணத்தை நியூயார்க்கு நகரில் வேலையில்லாத் திண்டாட்டத்தில் வருந்துவோர்க்குப் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். பாஸ்டனிலும் நியூயார்க்கிலும் அவருடைய ஓவியக் கண்காட்சியைப் பல ஓய்வ ஆய்வாளர்கள் பாராட்டிப் பேசினர்கள். வில் துராண்டு என்பார் "இந்தியாவின் வாதம்" என்று எழுதிய நூலை வங்காளத்தில் புக விடாதபடி இந்திய அரசாங்கத்தார் தடுத்து நின்றார்கள். அந்த நூல்ஆசிரியரைக் கவிஞர் பெருமான் நியூயார்க்கு நகரில் கண்டு பேசினர்.

### இங்கிலாந்தில் பெர்நார்டுஷா

கவிஞர், டிசம்பர் இரண்டாம் தேதி, இங்கிலாந்து திரும்பினர். ஆனால், இந்து முசுலீம் சிக்கலை விடுவிக்க வட்டமேசை மகாநாட்டில் நடுவாளராக இருக்க மறுத்து விட்டார். ஸ்பெக்டேட்டரின் ஆசிரியர் அவருக்கு ஒரு விருந்தளித்தபோது அறிஞர் பெர்னட்ஷாவோடு நீண்ட நேரம் கவிஞர் உரையாடினர். பின் கவிஞர் 1931-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இந்திய நாட்டிற்குத் திரும்பினர்.

———

23



1930—இலண்டனில் பர்னார்டுஷாவோடு கவிஞர் (பக்கம் 144)

UNIVERSITY EXTENSION LIBRARY
MA



1930—சாந்திநிகேதனத்தில் மாணவரிடையே ஓதுதல் (பக்கம் 143)

# VII. இரவீந்திர சயந்தி

# 1. எழுபது ஆண்டு

**இலக்கிய ஆக்கம்**

இந்தியாவிற்குத் திரும்பியதும் இலக்கியத் தொண்டுகள் மீண்டும் தொடங்கின. புதுமை (நவீன) என்ற நாட்டிய நாடகத்தை எழுதிச் சாந்திநிகேதனத்திலும், கல்கத்தாவிலும் கவிஞர் பெருமான் அரங்கேற்றினர். இசைப்பாடல்களைக் கவிஞர் பாட, நாட்டிய வடிவிலும் இசைவடிவிலும் அதனைப் பிறர் விளக்கினர்கள். சாந்திநிகேதனத்திலும் பிற இடங்களிலும் இந்தியாவில் அவருடைய 70-ஆம் பிறந்தநாள் கொண்டாட்டம் சிறப்பாக நடைபெற்றது. ருஷியாவிலிருந்து அவர் எழுதிய திருமுகங்களை ஒன்று சேர்த்து அப்போது அவர் வெளியிட்டார். மக்கள் வரலாற்றிலேயே மிகச் சிறந்ததொரு பகுதியை ஆழ்ந்த ஆன்மிய நோக்கத்தோடு, கவியின் உள் உணர்வு ததும்பும் சமுதாய உணர்ச்சியோடும் கண்டு வந்தார் என்பதை அக்கடிதங்கள் விளக்குகின்றன.

**இரவீந்திர சயந்திக் குழு**

16–5–31இல் வங்காள சாகித்திய பரிஷத்தின் தலைமையில் பல துறைகளின் பிரதிநிதிகளும் அடங்கிய மாபெரும் கூட்டம் ஒன்று கூடியது. கவிஞரின் 70ஆ-ம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடத் தாங்கள் செய்த பெருந்தவத்தைப் பாராட்டிக் கொண்டு கவிஞர் பெருமானையும் வாழ்த்தி அக் கூட்டத்தினர் வணங்கினர்கள். இரவீந்திர சயந்தி, என்றும் நினைவில் வைத்திருக்கவேண்டிச் சிறந்த முறையில் கொண்டாட 70-ஆம் ஆண்டின் கொண்டாட்டக்குழு ஒன்று ஏற்பட்டது. சகதீசசந்திரபோசே அதன் தலைவரானர். கிறித்துமசு திருவிழாவின் போது பிறந்தநாள் திருவிழாவைக் கொண்டாடுவது என்று முடிவாயிற்று. கவிஞர் பெருமானின் வாழ்க்கை

நுட்பங்களையெல்லாம் விளக்குவதே அந்த விழாவின் நோக்கம். பக்லூரவில் சிறைப்பட்டுக்கிடந்த இளைஞர்கள் கவிஞரை அங்கும் மறவாது வாழ்த்துச் செய்தி அனுப்பினார்கள். அனுப்பிய வாழ்த்துக்கு கைம்மாருகக் கவிஞர் பெருமான் ஒருபாட்டினைப் பாடி அவ் விளைஞருக்கு அனுப்பினார். ஆனால், துரைத்தனத்தார் அதனை அந்த இளைஞர்கள் கையில் தாராது திருப்பி அனுப்பிவிட்டார்கள். பின், போபால் நவாபின் அழைப்பிற்கு இணங்கக் கவிஞர் போபாலுக்குச் சென்றார்.

## பஞ்சமும் வெறியும்

வட வங்காளத்தில் மிகக்கொடிய வெள்ளம் புரண்டு ஓடியது. அதன் பயனாகப் பஞ்சமும், கொள்ளை நோய்களும் பேய்க்கூத்தாடின. இந்து முசுலீம்களின் இனவெறியும் தலைவிரித்தாடியது. மாற்றாரது அரசியல் அடிமைகளாய் நம் வாழ்வை இத்தகைய இன வெறியாட்டங்கள் நீடிக்கவே செய்யும் என்று அவர் வற்புறுத்தி எழுதினார். வெள்ளத்தில் அமிழ்ந்தவர்களுக்கு உதவி செய்யக் 'குழந்தை' என்கிற ஒரு புதுவகை இசைவிழா ஒன்றினைக் கல்கத்தாவில் நடத்திவைத்தார்.

## கவி சார்வ பௌமர்

செப்டம்பர் 30-ஆம் தேதி கல்கத்தா வடமொழிக் கல்லூரியானது கவிஞர் பெருமானுக்குக் "கவி சார்வ பௌமர்" என்ற பட்டத்தை வழங்கி வாழ்த்தியது.

## ஹிசிலிச் சிறைக் கொடுமை

உடல் நலத்திற்காக டார்சிலிங்கிற்குப் போக வேண்டும் என்று கவிஞர் எண்ணிக் கொண்டிருக்கும் பொழுது ஹிசிலிச் சிறைக் கொடுமை வெளியாகியது. இரண்டு வங்காளிகள் சிறையில் சுட்டுண்டு மடிந்தார்கள். மனம் கலங்கிய கவிஞர் பெருமான் மறுபடியும் முன்



27—12—1931 கவிஞர் பிராட்டிகாமினிராயோடு
கவிஞர் இரவீந்திசயந்தியில்
(பக்கம் 148)

VERSITY EXTENSION LIBRAR



1932—பாரசீகரோசாக்களிடையே 72ஆம் ஆண்டு நீறைவிழாவில் கவிஞர் (பக்கம் 154)

னணியில் வந்து நின்ருர். பொது மக்களுடைய எதிர்ப்பின் தலைவராக இருந்து கூட்டம் ஒன்று நடத்தினுர். நகர மன்றத்தில் கூட வேண்டிய கூட்டம், பெருவாரியான மக்கள் திரண்டு வந்ததால், கல்கத்தா மைதானத்தில் நடத்த வேண்டியதாயிற்று. துரைத்தனத்தார் வேண்டுமென்றே முன் கூடித் திட்டமிட்டு, இருட்டில் தற்காப்பற்றுக் கிடக்கும் சிறையாளிகளைக் கொல்லத் துணிந்ததைக் கண்டித்தார். இதனைப் பற்றி ஸ்டேட்ஸ்மென் பத்திரிகைக்கு எழுதிய கடிதத்தில் சிறைக் காவளாலர்களை அப்பத்திரிகை பாராட்டிய பாராட்டை வன்மையாகக் கண்டித்துக் கவிஞர் பெருமான் எழுதினுர். ஆனுல் அந்தக் கடிதம் வெளியாகவில்லை.

### நெசவு

டார்சிலிங்கில் ஓய்வு எடுத்த பின் "வங்காள நெசவாளர்கள்" என்ற கட்டுரையை எழுதினுர். வங்காளத்திலே அப்போது சர். பி. சி. ரே என்ற பெரியார் பம்பாய் ஆலைகளை மக்கள் தங்களுடைய உடைக்காக நம்பியிருத்தல் ஆகாது என்று வற்புறுத்தத் தொடங்கினுர். அந்த இயக்கத்தை ஆதரித்துக் கவிஞர் பெருமான் கட்டுரை ஒன்று எழுதினுர்.

### கலைஞர்கள்

கலைஞர் நந்தலால் போசு என்பாரின் 50-ஆம் ஆண்டு விழாவைச் சாந்திநிகேதனத்தில் கவிஞர் பெருமான் கொண்டாடினுர். கலைஞர்களை மறவாக் கவிஞர் பெருமாஞக விளங்கினுர்.

### இரவீந்திர சயந்தி

*1931*-ஆம் ஆண்டு கிறித்துமசு வாரத்தில் கல்கத்தா மக்கள் இரவீந்திர சயந்தியைச் சிறப்பாகக் கொண்டாடினுர்கள். திப்பரா மகாராசர் அவ்விழாவைத் தொடங்கி வைத்தார். கலைப் பொருள்

களின் கண்காட்சி, கைத்தொழில் பொருள்களின் கண்காட்சி என்ற இரண்டும் அப்போது நடைபெற்றன. கவிஞர் பெருமானும் நேரில் வந்து கண்டு களித்தார். அவருடைய ஓவியங்கள் - ஆங்கிலத்திலும் வங்காளத்திலும் எழுதிய அவர் நூல்களின் கையேட்டுப் பிரதிகள் - அச்சுப் பிரதிகள் - பல மொழிகளிலும் வெளிவந்த அவருடைய நூல்களின் மொழிபெயர்ப்புகள் - அவரைப் பற்றிய நூல்கள் - அவருடைய வாழ்க்கையில் பல சமயங்களிலும் எடுத்த அவருடைய படங்கள் - பல நாடுகளில் இருந்து அவருக்கு வந்த நன்கொடைகள் - காணிக்கைகள் - விசுவ பாரதியில் செய்யப்பெற்ற கலைப் பொருள்கள் – கைத்தொழிற் பொருள்கள் – புதிய வங்காளக் கலைப் பொருள்கள் – குடிசைத் தொழிற் பொருள்கள் – புதிய வங்காள ஓவியங்கள் – பழையனவும் புதியனவும் ஆன இந்திய ஓவியங்கள் – இவை எல்லாம் கண் காட்சியில் வரிசை வரிசையாக அமைந்து காண்போர் உள்ளத்தைக் கவர்ந்து, இந்தியாவின் பெருமையையும் மறு மலர்ச்சியையும் நிலைநாட்டின. பழங்காலப் பொழுது போக்குக் கதைகளான கீர்த்தனங்கள், யா(ஜா)த்திரைகள், நாடோடிப் பாடல்கள், விளையாட்டுகள் முதலியனவும் அங்கே நடந்தன.

## பாராட்டு

அந்தத் தொடக்க விழாவின் பிற்பகுதியில் சரத் சந்திர சாட்டர்சி என்பாரின் தலைமையில் ஓர் இலக்கிய மாநாடு கூடிற்று. இரவீந்திர நாதர் வங்காள இலக்கியத்திற்குச் செய்த தொண்டினைப் பல்வேறு கூறுகளாகப் பிரித்துக்கொண்டு இலக்கிய அறிஞர்கள் பல கட்டுரைகளை அங்கே படித்தார்கள். கவிஞர் பெருமானை வாழ்த்திய பாக்களும் அங்கே பாடப் பெற்றன. மாலையில், தாகூர் பாடிய இசைப் பாடல்களில் சிலவற்றை மிகச் சிறந்த இசை வாணர்கள் பாடிக் காட்டி

ஞர்கள். அடுத்த நாள் பேராசிரியர் இராதாகிருஷ்ணனுர் தலைமை பூண்டார். அந்த மாநாட்டிற்கு இந்தியாவில் இருந்தும் பல பல்கலைக் கழகத்திலிருந்தும் கலைஞர்களும் அறிஞர்களும் இலக்கியப் புலவர்களும் வந்திருந்தனர்; மனிதப் பண்பாட்டின் எல்லாத் துறைகளிலும், இரவீந்தர நாதர் செய்த தொண்டுகளை ஆராய்ந்து பல கட்டுரைகள் எழுதிப் படித்தார்கள். அன்றைய மாலையில் முன்னுள் போல் இசை விழா நடைபெற்றது. சமுதாயத்தின் எல்லாத் துறைகளிலும் சிறந்தவர்கள் ஆயிரக் கணக்கில் நகர மன்றத்தில் திரண்டார்கள். கல்கத்தா நகர மன்றத்தினர் வரவேற்பு இதழ் ஒன்று கவிஞருக்குப் படித்துத் தந்தார்கள். வங்காள சாகித்திய பரிஷத், இந்து சாகித்திய பரிஷத், வங்க சாகித்திய சம்மேளனம், இரவீந்திர சயந்தி பரிஷத்து முதலிய எல்லா நிலையங்களும் அவருக்கு வரவேற்பு வழங்கின. கவிஞர் பெருமான் அவ்வரவேற்பு ஒவ்வொன்றிற்கும் தனித் தனியே விடை அளித்தார். முடிவிலே மக்களெல்லாம், சிறந்ததோர் ஆரவாரத்தினிடையே அவரை வாழ்த்தி வணங்கினுர்கள். இராமானந்த் சாட்டர்சி அவர்கள் "தாகூரின் பொன் நூல்" என்ற ஒரு நூலைப் பதிப்பித்து இருந்தார். உலகத்திலுள்ள முப்பது நாடுகளில் வாழும் அரசியல் அறிஞர்களும், துரைத்தனத் தலைவர்களும், விஞ்ஞானிகளும், கலைஞர்களும், பாவாணர்களும், ஆசிரியர்களும் அவரைப் பாராட்டி எழுதிய வாழ்த்துரைகளைத் திரட்டியே அந்த நூல் பதிப்பிக்கப்பெற்றது. பதிப்பாளர் அந்த நூலை அத்திருவிழாவில் அவருக்குக் காணிக்கையாகச் செலுத்திஞர். கவிஞரின் வீட்டில் 'நடிர்பூஜா' (பொது மகள் வழிபாடு) என்ற நாடகம் தொடர்ந்து 3 நாட்கள் நடைபெற்றன. அதிலே கவிஞர் பெருமான் புத்த பிட்சுவாக வேடம் பூண்டு நடித்தார். வங்க சாகித்திய பரிஷத்து அவருக்கென ஒரு வரவேற்பு நடத்தியது. கவிஞர் பெருமானின் படம் வெள்ளைச் சலவைக் கல்லில் செதுக்கப்

பெற்றது; அதனை அப்போது சர். பி. சி. ரே திறந்து வைத்தார். கல்கத்தா மாணவர்கள் தனியே ஒரு நாள் ஒரு வரவேற்பு இதழைக் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தின் செனேட் மன்றத்தில் கவிஞர் பெருமானுக்குப் படித்துத் தந்தார்கள். அதற்கு விடையை வங்காளத்திலே எழுதிப் படித்தார் கவிஞர் பெருமான். அதிலே தம்முடைய கவிவாழ்வு எவ்வாறு வளர்ந்தது என்பதனை விளக்கினர். அதனை முதலில் பொது மக்கள் வரவேற்புக் கூட்டத்திலேயே அவர் படிப்பதாக இருந்தாலும், அவர் எழுதிய கட்டுரை நீண்டிருந்ததால் அங்கே படியாமல், அந்த மாணவர்கள் கூட்டத்தில் படித்தார். ஒரு வாரத்துக்கு என்று தொடங்கிய கொண்டாட்டம் மேலும் ஒரு வாரம் தொடர்வதாக இருந்தது.

## 2. காந்தியார்

**காந்தி சிறைப்படல்**

ஆனுல், காந்தி யடிகளேயும், சுபாஷ் சந்திர போசையும், சயந்தி மேளாவின் செயலாளரையும் அரசாங்கத்தார் சிறை செய்தது காரணமாக அவ்வாறு தொடர்ந்து நடத்துவதை விழாக் குழுவினர் கை விட்டார்கள். காந்தியடிகளேச் சிறையிட்ட செய்தி கவிஞர் பெருமான் உள்ளத்தை கலக்கியது. இங்கிலாந்தின் தலைமை அமைச்சருக்கு இதனைக் கண்டித்து ஒரு தந்தி அனுப்பினுர். இந்திய துரைத்தனம் பகுத்தறிவு ஒன்றும் இன்றி இவ்வாறு ஒரு மனக் கசப்பை விளைவிப்பதனை எடுத்துக்காட்டினுர். விடுதலைத் திருநாள் அன்றும் கவிஞர் ஓர் அறிக்கையை வெளியிட்டார். ஆனுல் துரைத்தனத்தின் அடக்கு முறையால் அந்த அறிக்கை முழுவதும் வெளியாவதற்கில்லை. கங்கைக் கரை அருகேயுள்ள அவருடைய வீட்டில் இருந்து கவிஞர் பெருமான் பல பாடல்களை இயற்றினுர். அவற்றிலே காந்தியடிகளைப் பற்றி "ஒரு கேள்வி" என்ற தலைப்பில் பாடிய பாடலே சிறந்ததாகும்.

**பாரசீகப் பயணம்**

கல்கத்தாவில், கல்கத்தாச் சித்திரக் கலா சாலையில் மக்கள் அவருடைய ஓவியக்கண்காட்சி ஒன்று ஏற்பாடு செய்தார்கள். இங்கிலாந்தில் இருந்து வந்த "நண்பர்கள் கழக"த்தின் பிரதிநிதிகளைச் சாந்திநிகேதனத்தில் கண்டு கவிஞர் அளவளாவினுர். டச்சு ஆகாய விமானத்தில் சோதனைக்காகப் பறந்து பார்த்தார். பாரசீக மன்னர் வரவேற்பை ஏற்றுக்கொண்டு பாரசீகத்திற்கு ஆகாய விமானத்திலே பறந்து சென்ருர். ஆகாய விமானத்தில் பாரசீக எல்லைக்குள் புகுந்ததும் பாரசீகத் துரைத்தனம் இவரைக் கம்பியில்லாத் தந்தி மூலம் வர

வேற்றது. பு(b)ஷயர் என்ற இடத்தில் அங்குள்ள கவர்னர் இவரை வரவேற்றுப் பெரு விருந்து ஒன்று நடத்தினர். ஷிராசில் அரச கோலாகலத்துடன் வரவேற்கப் பெற்ருர். ஹ∴வீசு என்பாரின் சமாதிக்குத் தம்முடைய வணக்கத்தைச் செலுத்தினர். இஸ்ஹத என்ற இடத்திலும் அந்நகரத்தின் வரவேற்பு நிகழ்ந் தது. தெஹ்ரானில் இரண்டு வாரங்கள் பலபல வரவேற் புக் கொண்டாட்டங்களிடையே மகிழ்ந்து வாழ்ந்தார். பாரசீக அரசர் பெருமான் மே மாதம் 2-ஆம் தேதி கவிஞர் பெருமானைக் கண்டு அளவளாவினர். மன்ன ரின் மேல் தாம் பாடிய பாடலைக் காணிக்கையாகக் கவிஞர் வழங்கினர். அவரது 72-ஆம் பிறந்த நாள் கொண்டாட்டம் அங்கேயே மிகச் சிறப்பாக நடைபெற் றது. இராக்கிலிருந்தும் இவருக்கு அழைப்பு வந்தது. இந்தியாவிற்குத் திரும்பும்போது பாக்தாத் அரசரை நேரில் கண்டார். அங்கேயும் நகர வரவேற்பு ஒன்று சிறந்த முறையில் நடந்தேறியது. ஆகாய விமானத் தின் வழியாகக் கல்கத்தாவிற்கு நலனே திரும்பினர்.

### கல்கத்தாப் பல்கலைக் கழகம்

கல்கத்தாப் பல்கலைக் கழகம் வங்காள இலக்கியத் திற்கென ராம் தனு லஹிரி என்பவர் பெயரால் ஒரு பேராசிரியர் பதவியை அமைத்திருந்தது. அதனை ஏற்றுக்கொள்ளுமாறு கவிஞர் பெருமானைப் பல்கலைக் கழகம் அழைத்ததோடு கமலா என்பவர் பெயரால் நிலை நாட்டியுள்ள சொற்பொழிவுகளையும் நிகழ்த்தவேண்டு மென்று வேண்டிக்கொண்டது. பல்கலைக் கழகம் அவருக்கு ஒரு வரவேற்பையும் அளித்தது. அப்போது தம்முடைய ஒரே பேரரான நிதீந்திரநாத கங்கூலி சர்மனியில் இறந்த செய்தி கிடைத்தும் வருந்தினர்.

### சாதி

இதனிடையே லீடர் என்ற பத்திரிகையின் ஆசிரியரான சிந்தாமணி அவர்கள், இன வாரித் தீர்ப்

பைப் பற்றிக் கவிஞர் பெருமானது கொள்கையைக் கேட்டிருந்தார். பகுத்தறிவுக்கு ஏலாத இன வேற்றுமைகளையும் சாதி வேற்றுமைகளையும் வெறுத்து அறிஞர்கள் இடையே விரைந்து பரவும் உணர்ச்சியைப் பயன் படுத்திக்கொண்டு, நமக்குள்ளாகவே நாம் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொண்டு, அதன் வழியாக நம்முடைய தேசீயத்திற்குத் தடையாய் உள்ளவற்றைத் தள்ளிக் களையவேண்டுமென்று கவிஞர் பெருமான் தம் கருத்தைத் தெரிவித்தார்.

**சரத்சந்திரர்**

அப்போதுதான் "பின் குறிப்பு" என்கிற உரை நடையான செய்யுளையும், "காலச் செலவு", "முடிவு" என்ற பாடல்களையும் சாந்தி நிகேதனத்தில் பாடிச் சரத் சந்திர சாட்டர்சியின் 57-ஆம் ஆண்டு நிறைவு விழாவில் அவற்றைக் காணிக்கையாகச் செலுத்தினர்.

**காந்தியின் பட்டினி**

1932-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20-ஆம் நாள் இந்தியாவைத் திடுக்கிடச் செய்த ஒரு நாள். இன வகைத் தீர்ப்பானது கொடிய குறிக்கோளோடு நிறைவேறியதனை எதிர்த்துக் காந்தியடிகள் சாகும் வரை பட்டினி கிடப்பதாக முடிவு செய்தார். கவிஞர் பெருமான் இச்செய்தி கேட்டு மனம் கலங்கினர். "இந்தியாவின் ஒற்றுமைக்காகவும் அதனுடைய சமுதாய ஒருமைப் பாட்டுக்காகவும் சிறந்த உயரிய தியாகம் செய்வது வரவேற்கத் தகுந்ததேயாகும். நம் மக்களைப் பொறுத்த வரையில் இதனுடைய ஆழ்ந்த நோக்கம் மிக மிகச் சிறந்ததே ஆம். ஆனலும் இதன் பயனுக நம்முடைய துரைத்தனத்தார் உள்ளத்தே என்ன மாறுதல் விளையும் என்று எதிர்பார்க்க முடியாது; இருந்தாலும், நம்முடைய நாட்டு மக்களின் மனச் சாட்சிக்கேனும் இந்த ஆத்ம நிவேதனம் சிறந்ததோர் உபதேசமாகுமே அன்றி வீண் போகாது. இந்தத் தேசீயத் துன்பமானது இறுதிக் கொடுமையாக முடியுமாறு

விடும் அவ்வளவு கொடியராக நாங்கள் ஆகிவிட மாட்டோம் என்று நான் முழு மனத்துடன் எதிர்பார்க்கிறேன். துன்பத்தில் ஆழ்ந்த எங்களுடைய நெஞ்சம் தங்களுடைய உயர்ந்த நோன்பினைப் பய பக்தியோடு கண்டு நிற்கும்" என்று காந்தியடிகளுக்குக் கவிஞர் பெருமான் எழுதினார். சரத்சந்திர சாட்டர்சியின் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் தலைமை பூணவிருந்த கவிஞர் அக்கொண்டாட்டத்தையே நிறுத்திவிட்டார்.

## கவிஞர் கவலையும் முயற்சியும்

இந்து சமுதாயம் சாதிக் கிறுக்கினால் ஏற்படும் பல வேற்றுமைகளை விட்டொழிக்க வேண்டுமென்று இந்தத் தறுவாயில் மக்களைக் கேட்டுக் கொண்டார். எரவாடா சிறையில் படு கிடையாகக் கிடந்த காந்தியடிகளைக் காணப் பூனாவிற்கு விரைந்து ஓடினார். ஆங்கிலத் தலைமை அமைச்சர் ராம்சே மாக்டொனால்டுக்கு ஒரு தந்தியும் அனுப்பினார். காந்தியடிகளின் பட்டினி நோன்பின் காரணமாக ஏற்பட்ட ஒப்பந்தத்தைப் பிரிட்டிஷ் தலைமை அமைச்சர் ஒப்புக்கொண்ட செய்தி செப்டம்பர் 26-ஆம் தேதி கிடைத்தது. காந்தியடிகள் தம்முடைய உபவாசத்தை விட்டார். அப்போது கவிஞர் பெருமான், அடிகளின் படுக்கையின் அருகே அமர்ந்து அவர் விரும்பும் பாடல்களைப் பாடினார். தீண்டாமை ஒழிந்தாலன்றி இன ஒற்றுமைவாழாது என்று கூறிக் கவிஞர் கொச்சியிலே கோயில்களை ஹரிஜனங்களுக்குத் திறந்து விடுவதைப் பற்றி ஒரு வன்மையான கடிதத்தைச் சாமுத்திரி அவர்களுக்கு எழுதினார். சாந்திநிகேதனத்திற்குத் திரும்பியதும் பண்டித மாளவியாவை அங்கே வரவேற்றார்.

## அறிவின் தொண்டுகள்

சர். பி. சி. ரே அவர்களின் 70-ஆம் ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டத்தில் தலைமை பூண்டு "காந்தியடிகளும் ஒடுக்கப் பெற்ற மக்கள் சமுதாயமும்" என்ற நூலை அவருக்குக் காணிக்கையாகத்

தந்தார். பாரசீக அரசர் அனுப்பிய பேராசிரியர் பௌரேதாவுத் என்பவரைச் சாந்திநிகேதனத்தில் வரவேற்ருர். கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் இரண்டாவது கமலாச் சொற்பொழிவை நிகழ்த்தினுர். இராம் மோகன் நூற்ருண்டு விழாவின் தொடக்கக் கூட்டத்தில் (18—1—33) தலைமை பூண்டார். "அறிவின் ஒற்றுமை" என்ற கட்டுரையைக் கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் படித்தார்.

### இந்தியாவும் கவலையும்

இந்தியாவிற்கு எதிராகப் பொய்ப் பிரசாரம் செய்து வருவதைத் தடுப்பதற்காக வி. ஜே. படேல் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியை ஆதரித்துப் பத்திரிகைகளில் கவிஞர் ஓர் அறிக்கையை வெளியிட்டார். அந்தப் பொய்ப் பிரசாரம் அப்போது மேல் நாடுகளில் தொடர்ந்து நிகழ்ந்து வந்தது. டார்ஜிலிங்கிற்கு ஓய்வு எடுக்கச் சென்றபோது காந்தியடிகள் மற்ருெரு பட்டினி நோன்பு தொடங்குவதாகயிருந்தார். இதனைத் தடுக்கும்படி ஒரு தந்தியைக் காந்தியடிகளுக்குக் கவிஞர் அனுப்பினுர். ஆனுல், அந்தத் தந்தி காந்தியடிகள் இடம் சேரவேயில்லை. அரசியல் சிறையாளர்களை உடனே விடுதலை செய்யுமாறு தலைவர் எழுதிய மனுவில் முதல் கைச்சாத்தாகத் தம்முடைய கையெழுத்தை இட்டார் கவிஞர். அந்தமான் தீவில் பட்டினி கிடக்கும் சிறையாளர்களுக்குப் பட்டினியை விட்டு விடுமாறு தந்திகள் அனுப்பினுர். 24-7-33-இல் சென்குப்தா தீடீர் எனக் காலமானுர். இந்தியா முழுவதும் துயரத்தில் மூழ்கிக்கிடந்தது. அவர் சிறைப் பட்டிருந்த காலத்தில் இவ்வாறு இறந்தது எல்லோருடைய மனத்தையும் கலக்கியது. கவிஞர் பெருமான் தம்முடைய துன்பத்தையும் அப்போது தெரிவித்துக் கொண்டார்.

———

# 3. இந்தியா முழுவதும்

**இலக்கியப் பரப்பு**

உதயசங்கர் கலைக் கோயிலாம் சாந்தி நிகேதனத்திற்கு வந்தார். கல்கத்தாவிலே கவிஞரது "அட்டை வீடு" என்ற நாடகம் அரங்கேறியது. "சண்டாளன் மகள்" என்பதிலிருந்தும் பாடல்களைக் கவிஞர் பாடிக் காட்டினார். கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் "சந்தம்" என்பதைப் பற்றிக் கவிஞர் பேசினார். விசித்ரிதா என்ற பாடல்களை வெளியிட்டு நந்தலால் போசின் பிறந்த ஆண்டுக் காணிக்கையாகக் கவிஞர் பெருமான் செலுத்திக் கொண்டார். இவ்வாறு தேசீயத் துன்பத்திலேயும் தேசத்தை வளர்க்கும் கலையை நம்முடைய கவிஞர் மறந்தாரில்லை.

**பம்பாயில்**

தாகூர் "நாடக வாரம்" ஒன்று நிகழ்த்துவதற்காகச் சாந்திநிகேதன நாடகக் கலைஞர்களுடன் பம்பாய்க்குச் சென்றார். சரோசினி தேவியார் பம்பாயில் இவர் தங்குவதற்கு ஏற்ற வசதிகளைத் தாமே நேரில் கண்காணித்து வந்தார். "சாப விமோசனம்", "சீட்டு நாடு" என்பவற்றைச் சாந்திநிகேதன மாணவர்கள் நடித்துக் காட்டினார்கள். விசுவபாரதியைச் சேர்ந்த கலாபவனத்தின் கலைஞர்களும் கவிஞர் பெருமானும் எழுதிய ஓவியங்களின் கண்காட்சி ஒன்று நடந்தது. பம்பாய்ப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர், கவிஞர் பெருமானுக்குச் சிறந்ததொரு விருந்து நடத்தினார். "தீர்ப்பின் சவால்" என்ற சொற்பொழிவு ஒன்றும் "விடுதலைக்கு விலை" என்ற சொற்பொழிவினையும் அங்கே நிகழ்த்தினார் கவிஞர்.

**ஆந்திராவும் ஐதராபாத்தும்**

ஆந்திராப் பல்கலைக் கழகத்திலே கிருஷ்ணசாமி ஐயர் பெயரால் ஏற்பட்ட சொற்பொழிவுகளைக் கவிஞர்

நிகழ்த்தினர். மனிதன் என்ற தலைப்பில் அவற்றை வெளியிட்டார். ஐதராபாத்தின் நைசாம் அவர்கள் விசுவபாரதியிலே இசுலாமியப் பண்பாட்டினை ஆராய்வதற்காக ஒரு பேராசிரியர் பதவியை ஏற்படுத்தி நூறுயிரம் ரூபாய் முன்னரே கொடுத்து இருந்தார். ஐதராபாத்திற்கு இப்போது தாகூர் அவர்கள் சென்ற போது அவரை அன்புடன் நைசாம் வரவேற்று மேலும் இருபத்தையாயிரம் ரூபாய் நன்கொடையாகத் தந்து உதவினர். உஸ்மானியப் பல்கலைக் கழகம் கவிஞருக்கு ஒரு விருந்தளித்தது.

**பலவகை**

இராம்மோகனைப் பற்றிப் புகழ் பெற்றதொரு சொற்பொழிவினைக் கவிஞர் கல்கத்தாவிலே செய்தருளினர். அனைத்து இந்திய மகளிர் மாநாட்டிலும் அவர் பேசினர். இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்கும் நடந்த கிரிக்கெட் பந்தயத்திற்காக வந்திருந்த இங்கிலாந்து குழுவின் தலைவர் ஜார்டைன் என்பவரைத் தம்முடைய கல்கத்தா வீட்டில் வரவேற்றார். மேனாட்டையும் கீழ்நாட்டையும் ஒற்றுமைப்படுத்தும் பண்பாட்டுத் தொண்டில் இவ்வாறு எல்லாம் கவிஞர் ஈடுபட்டார். இப்போதுதான் 'வலசாரி' என்கிற நாடகமும் 'இரு சகோதரிகள்' என்ற நாவலும் எழுதப் பெற்றன. 1934-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சரோசினி தேவியாரைச் சாந்திநிகேதனத்தில் கவிஞர் பெருமான் வரவேற்றார்.

**பூகம்பம்**

அப்போது பீகாரில் கொடியதோர் பூகம்பம் ஏற்பட்டது. தீண்டாமையின் கொடுமைக்காக இந்த நாட்டினைத் தண்டிக்கவே கடவுள் இந்தப் பூகம்பத்தை விளைவித்தார் என்று காந்தியடிகள் கூறினர்; அதைக் கவிஞர் பெருமான் மறுத்து எழுதினர். காந்தியடிகள் கருத்தில் சிலவற்றை இப்படி மறுத்தாலும் அவரைப் பாராட்டியே வந்தார் கவிஞர். வங்காளத்திலே காந்தியடிகளுக்கு எதிராக ஓர் இயக்கம் தோன்றியது. அதை

வன்மையாகக் கவிஞர் பெருமான் கண்டித்தார். ஆண்ட்ருசு அப்போது இங்கிலாந்தில் இருந்ததால் அவரையும் பிற தேசங்களையும் இந்தப் பூகம்பத்தில் வருந்தியவர்களுக்கு உதவி செய்யுமாறு வேண்டிக் கொண்டார்.

**பலதுறை**

அந்த ஆண்டுதான் இந்துஸ்தான் கூட்டுறவு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் கொண்டாட்டம் கல்கத்தாவில் நிகழ்ந்தது. அதற்குக் கவிஞர் பெருமானே தலைமை பூண்டார். இவ்வாறு தாகூர் அவர்கள் நம் நாடு பல துறைகளிலும் முன்னேறி வருவதில் எல்லாம் பங்கு கொண்டு ஒத்துழைப்பதனையே அவர் வாழ்நாள் முழுதும் காண்கிறோம். கார்னகி, ஓர் அறக் கட்டளையாக, அனைத்து நாட்டின் அமைதிக்கு என நிறுவிய கழகத்தில், தாகூர் அவர்கள் அந்த ஆண்டில் பேசினார்.

**இலங்கைப் பயணம்**

கவிஞர் பெருமானது இலங்கைப் பயணம் இப்போது தொடங்கியது. சாந்தி நிகேதனக் கலைஞர்கள் இவரோடு உடன் சென்றனர். கொழும்பு சென்றதும் ரோட்டரி சங்கத்தினர் இவர்களை வரவேற்றனர். அங்கிருந்தே அவர்கள், கவிஞர் பெருமான் விசுவ பாரதியைப் பற்றிப் பேசின பேச்சினை, ஒலி பரப்பினார்கள். இலங்கையிலுள்ள இந்திய வர்த்தகர் சங்கம் அவருக்கு ஒரு வரவேற்பு இதழ் வாசித்துத் தந்தது. கொழும்பு நகராளும் மன்றமும் வரவேற்பளித்தது. கொழும்பில் ஐந்து இரவுகள் தொடர்ந்து அவருடைய சாப விமோசனம் என்ற நாடகம் நடந்தது. அவருடைய ஓவியங்களின் கண் காட்சியும் அங்கே நிகழ்ந்தது. அங்கே ஒரு கூட்டத்தில் தம்முடைய பாடல்களைக் கவிஞர் பெருமானே பாடிக் காட்டினார். தமது ஸ்ரீ நிகேதனத்தைப்போல் இலங்கையில் பண்டுராவில் அமைந்த நிலையத்திற்கு ஸ்ரீ பள்ளி என்று கவிஞர் பெயரிட்டு வாழ்த்தினார். கண்டிக்கு வந்து அங்கே



1931இல் கவிஞர் (பக்கம் 147)

UNIVERSITY EXTENSION LIBRARY * MADURAI *





15—8—1939 மகாசாதி சதனத்திற்குக் கவிஞர் கடைகாலிடும் திருவிழா (பக்கம் 171)

"நாலு அத்தியாயங்கள்" என்ற நாவலை எழுதி முடித்தார். வட இலங்கைக்குச் சென்றார்; அங்கு இருந்து சென்னை வழியாகச் சாந்திநிகேதனத்திற்குத் திரும்பினார்.

### எல்லைப்புறக் காந்தி

சிறையிலிருந்து மீண்டதும் எல்லைப்புறக் காந்தியான கான் அப்துல் கபூர்கான் இவரைப் பார்க்கச் சாந்திநிகேதனத்திற்கு வந்திருந்தார். அங்கே அவருடைய மகனார் படித்துக் கொண்டிருந்தார். அவரோடு கவிஞர் அளவளாவினார். பேராசிரியர் கில்பெர்ட்மர்ரே என்பவரோடு சேர்ந்து அனைத்துத்தேசச் சிக்கல்களைப் பற்றிய இரண்டு கட்டுரைகளைக் கவிஞர் பெருமானார் வெளியிட்டார். வங்காளிகள் தோற்றுவித்த பசந்தி பஞ்சு ஆலைகளைக் கல்கத்தாவில் திறந்து வைத்து நாட்டின் தொழில் முன்னேற்றத்தில் தமக்குள்ள ஆர்வத்தை வெளிப்படுத்தினார் கவிஞர்.

### சென்னை

பொப்பிலி அரசர் அப்போது சென்னையில் தலைமை அமைச்சராக ஆண்டு வந்தார். அவருடைய அழைப்பினை ஏற்றுக் கொண்டு சென்னைக்கு வந்தார் கவிஞர். சென்னை நகராளும் மன்றம் அவருக்கு ஒரு வரவேற்பினை வழங்கியது. "நானும் வங்காள மறுமலர்ச்சியும்" என்ற தலைப்பில் கவிஞர் பெருமான் பேசினார். சாந்திநிகேதனக் கலைஞர்கள் பல நாடகங்களை நடத்தினர். சாந்திநிகேதன ஓவியங்களின் கண்காட்சியையும் சென்னையில் கவிஞர் திறந்துவைத்தார். கவர்னர் மாளிகையில் அவருக்கு ஒரு விருந்தும் நடந்தது. சென்னை விசய நகர மகாராணியின் விருந்தாளியாக வால்டேருக்குச் சென்று ஆந்திராப் பல்கலைக் கழக மாணவர்களிடையே பேசினார்.

### கல்கத்தா-காசி

கல்கத்தாவிற்குத் திரும்பியதும் காசிக்குச் சென்றார். அங்கேயிருக்கும் இந்துப் பல்கலைக் கழகம் ஏற்

படுத்திய மாண்டிசோரி பள்ளி ஒன்றினைத் திறக்கவே கவிஞர் அங்கே சென்றார். பலதுறைக் கல்வியிலும் அவர் கொண்ட ஆர்வம் இதனால் தெளிவாகும். கல்கத்தாவிலே பிரபாசி பங்க சம்மேளனத்தையும் அவர் திறந்து வைத்தார். மலஞ்சா என்ற நாவலையும் வெளியிட்டார். இந்திய விஞ்ஞானக் காங்கிரசைச் சேர்ந்த உறுப்பினர்கள் சாந்திநிகேதனத்திற்கு வந்திருந்தபோது, 1935 சனவரியில் அவர்களை அங்கே வரவேற்றார்.

**கவர்னரும் பாதுகாப்பும்**

பிப்பிரவரியில் வங்காள கவர்னரே சாந்திநிகேதனம் வந்திருந்தார். கவர்னருக்காகப் போலீசார் எடுத்துக்கொண்ட அளவுகடந்த பாதுகாவல் முறைகளை கண்டு கவிஞர் மனம் கலங்கிச் சாந்தி நிகேதனத்தில் இருந்தவர்களையெல்லாம், கவர்னர் அங்கேயிருக்கும் வரையில், ஸ்ரீநிகேதனத்திலேயே இருக்குமாறு வெளிக் கிளப்பினார். அதனால், கவர்னர், ஆள்கள் அற்ற கட்டிடங்களையே பார்வையிடவேண்டியதாயிற்று.

**காசிப்பட்டம்**

காசி இந்துப் பல்கலைக் கழகம் கவிஞர் பெருமானுக்கு டாக்டர் பட்டம் வழங்க ஏற்பாடு செய்திருந்தது. அதனால் அதனைப் பெறக் கவிஞர் அன்று மாலையிலேயே சாந்திநிகேதனத்தைவிட்டுக் காசிக்குப் புறப்பட்டார். அலகாபாத்துப் பல்கலைக் கழகத்திலே பேசிவிட்டுப் பஞ்சாபு மாணவர் மாநாட்டில் தலைமை பூண இலாகூருக்குச் சென்றார். அங்கே சீக்கியத் தலைவர்களைக் கண்டு அவர்கள் அழைப்பின் பேரில் குருதுவாராவைச் சென்று கண்டார். இலாகூர் பல்கலைக் கழக மாணவர்களிடம் பேசியபின்னர்ச் சாந்தி நிகேதனத்திற்குத் திரும்பி வந்தார். அவருக்கெனப் புதிதாக அமைக்கப் பெற்ற சயாமளி என்கின்ற மண் குடிசையில் நுழைந்தார்.

# VIII. சாவாத புகழ்

# 1. பட்டங்கள்

### எதிலும் முன்னணி

சேஷசப்தகம் என்ற பாடலும் அன்றுதான் வெளியானது. மே 12-ஆம் நாள் வங்கசாகித்ய பரிஷத் அவரைப் பாராட்டியது. புத்தருடைய பிறந்த நாள் கொண்டாட்டத்தை மகாபோதி சங்கத்தார் கொண்டாடிய போது அதிலே கவிஞர் பெருமான் பேசினர். கவிஞர் தம்முடைய படகிலேயே கோடை காலத்தைச் சந்திரநாகூரில் கழித்துக் கொண்டிருந்தார். அப்போது, திரேந்திர நாத தாகூர் இறந்த துயரச் செய்தி அவருக்கு எட்டியது. அக்டோபர் மாதத்தில் சாந்திநிகேதனத்திலேயே சரதோற்சவம் என்கின்ற நாடகம் நடிக்கப் பெற்றது. அதில் கவிஞர் பெருமான் சன்னியாசியாக வேடம் பூண்டு நடித்தார். நவம்பர் மாதத்தில் சப்பானிய கவிஞரான நோகுக்சி என்பவர் சாந்திநிகேதனத்திற்கு வந்து இருந்தார். சப்பானியர் சீனுவில் நிகழ்த்துவனவற்றைப் பற்றி பின்னே இவரோடு கவிஞர் பெருமான் கடிதங்கள் மூலம் போராட வேண்டியதாயிற்று. "இராசா" என்ற இவரது நாடகம் கல்கத்தாவில் அரங்கேறியது. அதிலே "தகூர்தா" என்ற பாத்திரமாகக் கவிஞர் பெருமான் நடித்தார். "வீதி" என்கின்ற பாடல் அப்போதுதான் வெளியாயது. இந்திய தேசீயக் காங்கிரசு 1935-இல் தன்னுடைய பொன் விழாவைக் கொண்டாடியது. அப்போது கவிஞர் பெருமான் அதன் தலைவருக்குத் தம்முடைய வாழ்த்தினை அனுப்பி அருளினுர்.

### விசுவபாரதி

1936 பிப்ரவரியில் கல்கத்தா நகரம் வங்காளக் கல்வி வாரத்தைக் கொண்டாடியது. அதிலே "இயல்பாக அமைக்கப் பெற்ற கல்வி" என்பதைப்

பற்றிக் கவிஞர் ஒரு கட்டுரை எழுதிப் படித்தார். கல்வியில் இருந்த அவருடைய ஆர்வம் இவ்வாறு குறையாது நின்று ஒளிர்ந்தது. இலக்கியப் படைப்பையும் மறந்தாரில்லை. "சித்திராங்கதா" என்னும் புதிய நடன நாடகத்தை எழுதினர். அது தொடர்ந்து நான்கு நாட்கள் நிகழ்ந்தது. விசுவ பாரதிக்கு நன்கொடை திரட்டுவதற்காகத் தாகூர் வட இந்தியப் பயணத்தைத் தொடங்கினர். பாட்னுவிலிருந்து அலகாபாத்து வழியாக டில்லி சென்றுர். இவ்வாறு முதுமையில் பயணம் செல்வது, காந்தி அடிகள் உள்ளத்தை வருத்தியது. அதன் பேரில் காந்தியடிகளின் சீடர்களில் ஒருவர் தம் பெயரை வெளியிடாமலே விசுவ பாரதிக்கு 60,000 ரூபாய் நன்கொடையளித்தார்.

## அரசியல் எதிர்ப்பும் மக்கள் பாராட்டும்

தில்லி நகராண்மைக் கழகம் கவிஞர் பெருமானுக்கு வரவேற்பு அளிப்பதென்று முடிவு செய்தது. அந்த முடிவினைத் துரைத்தனம் தள்ளிக் களைந்தது. அது கண்ட போது மக்கள், கவிஞர் பெருமானுக்கு அரசியல் தோட்டத்திலேயே பொது வரவேற்பு ஒன்று அளித்துச் சிறப்பித்தனர். ஐதராபாத்தின் அரசிளங் குமரரும் அங்கே அவருக்கு விருந்தளித்தார். மீரத்து நகராண்மைக் கழகத்தின் மாவட்ட ஆட்சிக் குழுவும் வரவேற்பு இதழ் ஒன்று வாசித்து அளித்து அவரை வரவேற்றது. சாந்திநிகேதனம் திரும்பினுர் தாகூர். குடும்பத்தையும் மறவாமல் தம்முடைய பேர்த்திக்குத் திருமணம் செய்து வைத்தார்.

## இனவாரித் தீர்ப்பு

"இனவாரித் தீர்ப்பு" வங்காள இந்துக்களுக்குப் பெருங் கொடுமைகள் விளைவித்திருந்தது. அதனைக் கண்டிப்பதற்காகக் கல்கத்தா நகரமன்றத்தில் மாபெரும் கூட்டம் கூடியது. அதற்குத் தாகூரே தலைமை பூண்டார். இந்துக்கள் சார்பாக ஆங்கிலத் தலைமை அமைச்

சருக்கு அனுப்பிய மனுவில் தாமும் கைச்சாத்து இட்டார். நாடு இதனைப் பற்றி இரு வேறு முரண் பட்ட கருத்துக்களைத் தெரிவிப்பதாயிற்று. அவரு டைய உயர்ந்த நிலைமைக்கு இவ்வாறு கைச்சாத்து இடுவது ஏற்றதல்ல என்று ஒரு சாரர் கூறினர். மற் ருெரு சாரார் இனச்சிக்கல் முரண்பாட்டில் கவிஞர் பெருமான் கலந்து சிக்குதல் கூடாது எனக் கருதினர் கள். ஆனால், கவிஞர் பெருமானே பரந்த தேசிய நோக்கத்துடனேயே தாம் இந்தக் கண்டனத்தைத் தெரிவித்ததாக விளக்கினர்.

### மேலும் பட்டம்

தக்காப் பல்கலைக் கழகம் அவருக்கு டி. லிட். (இலக்கியப் பேரறிஞர்) என்ற பட்டத்தை வழங்குதற் காகப் பட்டமளிப்பு விழா ஒன்று நிகழ்த்தியது. ஆனால் தம்முடைய உடல் நலக் குறைவு காரணமாக அங்கு அவர் போக முடியாது போய் விட்டது.

### அமைதிக் குலைவு

பிரஸ்ஸல்ஸ் மா நகரில் உலக அமைதி மா நாடு ஒன்று செப்டம்பர் 5-ஆம் தேதி கூடியது. "அமைதி வேண்டுமானல் அதற்கு ஏற்பட்ட முழு விலையையும் நாம் கொடுத்துத் தீரவேண்டும்; இல்லையானல் அமை திக்குத் தக்கவர்களாக நாம் ஆக மாட்டோம். அந்த விலை தான் என்ன? வன்மை உடையோர் பேராசையை விட்டு ஒழிக்க வேண்டும்" என்ற நற்செய்தியைக் கவிஞர் அனுப்பி அருளினர்.

### காந்தியடிகள் நாள்

காந்தியடிகளின் பிறந்த நாள் அக்டோபர் 2-ஆம் நாள்; சாந்திநிகேதன மந்திரத்தில், அத்திரு நாளுக்கு என ஒரு வழிபாட்டினைக் கவிஞர் நிகழ்த் தினர்.

### சரத் சந்திரர் நாள்

சரத் சந்திர சாட்டர்சி என்ற வங்காள நாவலாசிரியப் பெருந்தகையாரின் 60-ஆம் ஆண்டு விழாவிலும் கலந்து கொண்டார்; கவிஞர் அவரை மனமார வாழ்த்தினர். கவிஞருடைய இலக்கியத் தொண்டு இதனேடு முடியவில்லை. "பரிசோதனை" என்கின்ற புதியதொரு நடன நாடகத்தை எழுதிக் கவிஞர் பெருமான் அதனை நடிக்கவும் ஏற்பாடு செய்தார்.

### பட்டமளிப்புச் சொற்பொழிவு

அடுத்த ஆண்டு பிப்பிரவரி மாதத்தில் கல்கத்தாப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் அவர் பேசும் பேற்றினை நாடு பெற்றது. அந்தப் பல்கலைக் கழகத்தில் இது தான் முதல் முதலாக அதிகாரிகள் அல்லாதோர் பேசியது. தம் பேச்சினை இந்தியாவின் புது யுகத்தில் என்றும் மறவாதபடி கவிஞர் பெருமான் செய்து விட்டார். பல்கலைக் கழகத்தில் முதன் முதலாக நாட்டு மொழியான வங்காள மொழியில் அப் பட்டமளிப்புச் சொற்பொழிவினைத் தாகூர் செய்தருளினர். சந்திரநாகூரில் நடந்த வங்காள இலக்கிய மாநாட்டையும் திறந்துவைத்தார்.

### சமரசம்

அவருடைய சமரச சன்மார்க்க மனப்போக்கும் கனிந்து வந்தது. சமயப் பாராளும் மன்றம் ஒன்று கூடியது. இராமகிருஷ்ண பரமஹம்சரின் நூற்றாண்டு விழாவையொட்டிக் கூடிய அம் மன்றத்தில் கவிஞர் பெருமானே தலைமை பூண்டார்.

### சீன பவானம்

வங்காளப் புத்தாண்டின்போது கல்கத்தாச் சீன தூதரைக் கொண்டு சாந்திநிகேதனத்திலுள்ள விசுவ பாரதியின் சீன மண்டபத்தைத் திறந்து வைத்தார்.



1920—ஆண்ட்ரூசும் கவிஞரும் (பக்கம் 172)

IVERSITY EXTENSION LIBRA



இறுதிச் செலவு — கல்கத்தா தெருவொன்றில் (பக்கம் 172)

இவ்வாறு தாம் கண்ட விசுவ பாரதியிலும் தொடர்ந்து கவிஞர் பெருமான் அக்கரை காட்டி வந்தார். அவருடைய 77-ஆம் ஆண்டுவிழா சாந்திநிகேதனத்தில் கொண்டாடப் பெற்றது.

### குழந்தைகளுக்கு

அல்மோராவில் இவர் ஓய்வு எடுக்கச் சென்ற போது தம் நாட்டுக் குழந்தைகளை மறவாமல் விஞ்ஞானத்தை அவர்களுக்கு எளிதில் அறிமுகம் செய்யும் வகையில் "விசுவ பரிச்சயம்" என்ற நூலை எழுதியருளினர். ஆந்திர பாரதி தீர்த்தம் என்ற நிலையம் தனி ஒரு பட்டமளிப்பு விழா நடத்திக் கவிஞர் பெருமானுக்குக் "கவிசாம்ராட்டு" என்ற பட்டத்தை வழங்கியது. "வருஷ மங்களம்" என்ற இவர் நாடகமும் கல்கத்தாவில் நடைபெற்றது.

# 2. நோய்

## நோய்

செப்டம்பர் 10-ஆம் நாள் சாந்திநிகேதனத்தில் தாகூர் கடுமையான நோய்வாய்ப்பட்டார். அவருடைய நண்பரான சர் நீலரத்ன சர்க்கார் என்னும் மருத்துவப் பெரியார் ஓடோடியும் அவர் அருகே வந்தார். உடல்நிலை சிறிது நிறைவானதும் கல்கத்தாவிற்கு வந்தார். அவர் உடல்நலம் பெற்றதைக் கண்டு மகிழ்ந்த காந்தியடிகளும், ஜவஹர்லால் நேரு அவர்களும், சுபாசசந்திரபோசும், அகில இந்திய காங்கிரசு குழுவில் நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். ஆனால், மற்றொரு துயரம் அவர் மனத்தில் நிழலிட்டது.

## பிரிவுத் துன்பம்

அவருடைய வாழ்நாள் தோழரான சர் சகதீச சந்திரபோசு என்பவர் நவம்பர் மாதத்தில் உலகை விட்டு மறைந்தார். இருந்தாலும் தம்முடைய பழைய ஈடுபாடுகளைக் கவிஞர் மறக்கவில்லை. "புதிய கல்வித் தோழர் குழு" கல்கத்தாவில் நடத்திய மாநாட்டிற்கு நற்செய்தி ஒன்று அனுப்பினார். உடல் நலம் செம்மையாகிக் கொண்டு வரும்பொழுது தம்முடைய இலக்கியப் படைப்பில் ஈடுபட்டுப் பல செய்யுள்களை எழுதிக் கொண்டேயிருந்தார். "முடிவில்" என்ற தலைப்போடு இவை பின்னே பதிப்பிக்கப் பெற்றன.

## விசுவ பாரதியில்

லோதியன் பிரபுவும், பிராபூர்ன் தம்பதிகளும் 1938-ஆம் ஆண்டு சனவரியில் சாந்திநிகேதனத்திற்கு வந்து இருந்தார்கள். மார்ச்சு மாதத்தில் உசுமானியாப் பல்கலைக் கழகம் அவர் வாராது இருந்தும்

அவருக்கு "இலக்கியப் பேரறிஞர்" என்ற பட்டத்தை வழங்கியது. சங்கீத பவனத்து ஆசிரியர்களும், மாணவர்களும் நடித்த "சண்டாளியை" அவர் நேரில் கண்டுகளித்தார். காந்தி அடிகள் அவர்கள், கல்கத்தா வில் வந்திருந்தபோது கவிஞரை நேரில் கண்டு அளவளாவினர். கவிஞருடைய 78-ஆம் பிறந்த நாள் மே மாதத்தில் அன்றி வங்காளப் புத்தாண்டு பிறக்கும் போதே கொண்டாடப்பெற்றது. கோடை காலத்தைக் கலிங்போங்கில் கவிஞர் கழித்தபோது, பொது மக்கள் சிறந்ததொரு வரவேற்பிற்கு ஏற்பாடு செய்தார்கள். அடுத்த ஆண்டு முதலில் ஜவஹர்லால் நேரு அவர்கள் சாந்திநிகேதனத்தில் இந்து பவனத்தைத் திறந்து வைத்துக் கவிஞர் பெருமானை மகிழ்வித்தார். அதன் பின்னே சுபாசு போசும், அதன் பின்னர் இராசேந்திர பிரசாத்தும் சாந்திநிகேதனத்திற்கு வந்து கவிஞர் பெருமானோடு அளவளாவினர்கள்.

### சுபாசு, நேரு, காந்தி

கவிஞரது 79-ஆம் பிறந்த நாள் விழாவினை வங்காளப் புத்தாண்டின்போதே சாந்திநிகேதனத்தில் கொண்டாடினார்கள். ஒரிசா காங்கிரசு துரைத்தனத்தாரின் அழைப்பிற்கு இணங்கப் பூரி சென்றார் கவிஞர். அங்கே மே மாதம்7-ஆம் தேதி பயபக்தியோடும் அவருடைய பிறந்த நாள் கொண்டாட்டம் நிகழ்ந்தது. கோடையை மாங்பூவிலும், கலிங்போங்கிலும் கழித்தார். பின் சுபாச சந்திர போசு வேண்டுகோளுக்கிணங்கக் கல்கத்தாவிற்கு வந்து "மகா சாதி சதனம்" என்ற நிலையத்தைத் திறந்துவைத்தருளினர். ஜவஹர்லால் நேரு அவர்கள் சீனுவிற்குப் போகும் வழியில் கவிஞர் பெருமானைக் கல்கத்தாவிலே கண்டு மகிழ்ந்தார். கவிஞர் பெருமான் மிதுனபூரிலுள்ள வித்தியாசாகர் நினைவு மண்டபத்தைத் திறந்து வைத்தார். கல்கத்தா நகராண்மைக் கழக உடல் நூல் காட்சிச் சாலை என்ற நிலையம் உணவுக்

கண் காட்சியை நடத்தியது; அதனை ஒட்டிக் கூடிய கூட்டத்திலும் கவிஞர் பேசினர்; நாட்டு மக்களின் உடல் பாதுகாப்பில் தமக்கு இருக்கும் ஈடு பாட்டைத் தம்முடைய முதுமையிலும் ஒரு சிறிதும் மறவாது விளக்கி அருளினர். காந்தியடிகள் பிப்பிரவரி மாதத்தில் சாந்திநிகேதனத்திற்கு வந்து கவிஞரைக் கண்டார். தாகூர் தொழிற் கண்காட்சியை இந்த முதுமையிலும் திறந்துவைத்தார், தாய் இல்லத்திற் கும், குழந்தைநல நிறுவனத்திற்கும் கடை கால் போட் டார்.

## ஆண்டுரூசு பிரிவு

மற்ருெரு துயரம் அவரை வாட்ட வந்தது. அவருடைய நெருங்கிய தோழரான ஆண்டுரூசு அவர்கள், கல்கத்தாவில் மருத்துவ இல்லத்தில் மறைந்தார். எனவே, கவிஞர் பெருமானுரின் 80-ஆம் பிறந்த திருநாள் ஆராவாரம் இன்றி அமைதியாகச் சாந்திநிகேதனத்தில் கொண்டாடப்பெற்றது.

———



ஆச்சுபோர்டு சாந்திநிகேதனம் வந்தது
திரு. இராதாகிருஷ்ணரும் சர்மாரிஸ்க்வியரும் கவிஞரைப் பட்டமளிப்பு
மேடைக்குக் கொண்டு செல்லுதல்
(பக்கம் 173)

NIVERSITY EXTENSION LIBRAR



25—7—1941 சாந்திநிகேதனத்தைக் கடைசியாக விடுதல் (பக்கம் 174)

# 3. புகழுடம்பு

## ஆக்சுபோர்டு சாந்திநிகேதனம் வருங் காட்சி

1940-ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 7-ஆம் நாள் ஆக்சுபோர்டு பல்கலைக்கழகமே சாந்திநிகேதனத்திற்கு வந்தது எனலாம். இலக்கியப் பேரறிஞர் என்ற பட்டத்தைத் தருவதற்காக அப் பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழா அங்கே நிகழ்ந்தது. இந்தியாவின் தலைமை நீதிபதி குவயர் என்பவரும், திரு. இராதா கிருஷ்ணரும் அப் பல்கலைக் கழகத்தின் சார்பாக வந்திருந்து விழாவை நடத்தித் தந்தார்கள். கவிஞர் செப்டம்பர் மாதம் கலிம்போங்கிற்குப் புறப்பட்டார். ஆனல், அங்கே நோய்வாய்ப் பட்டதால் அவரைக் கல்கத்தாவிற்கு அழைத்து வந்தார்கள். நோய் நெருக்கடியின் நிலைமை சிறிது நீங்கவும் சாந்திநிகேதனத்திற்கு அவர் சென்ருர். படுக்கையிலேயே இருந்தாலும் கவிஞர் பெருமான் தம்முடைய இலக்கியத் தொண்டை மறக்கவேயில்லை. "புதுக் குழந்தை" "குழல்" "என்னுடைய இளமை நாட்கள்" "மூன்றுசிறு கதைகள்" "நோய்ப்படுக்கையில்" "ஆரோக்கியம்" என்ற நூல்கள் வெளிவந்தன.

## 81-ஆம் பிறந்த நாள்

சாந்திநிகேதனத்தில் அவரது 81-ஆம் பிறந்த நாள் கொண்டாட்டம் நடந்தது. அப்போது "நாகரிகத்தில் ஒரு நெருக்கடி" என்ற பொருள் பற்றி உணர்ச்சி ததும்பப் பேசினுர் கவிஞர். செருக்குற்ற நாகரிகம் ஒழிந்து வருவதன் காரணங்களையெல்லாம் அலசி அலசி ஆராய்ந்து பேசினுர். இந்தியாவில் உள்ளவர்கள் உள்ளத்தையெல்லாம் அந்தப் பேச்சு நீர்ப்பிண்டமாக உருக்கியது. தாம் எந்த ஐரோப்பிய நாகரிகத்தினை நம்பி அதனையே கடைகாலாகக் கொண்டு தம் நம்பிக்கைக் கோட்டையைக் கட்டினுரோ அந்த

ஐரோப்பிய நாகரிகமே, தாம் உலகினை விட்டுப் போவதற்கு முன்னரே, கலகலத்து நொறுங்கிப் பொருளற்றதாகப் போனதனை அவர் சுட்டிக் காட்டினார். அவருடைய 81-ஆம் ஆண்டு விழாவை இந்தியா முழுதும் கொண்டாடியது. திப்பேரா அரசர் "பாரத பாஸ்கரன்" என்ற பட்டத்தைக் கவிஞர் பெருமானுக்குச் சூட்டினார். "ஜன்ம தினம்" என்ற பாட்டும் "இழைகள்" என்ற நூலும் அப்போது வெளியாயின. அவருடைய 'இளைய நாட்கள்' என்ற நூல் ஆங்கிலத்தில் வெளியாயிற்று.

**நோயிலும் சவாலுக்குப் பதில்**

ஆனால் நோய் அவரைத் தொடர்ந்து கொண்டே வந்தது. பேனா பிடித்து எழுத முடியாமையால், தம்முடைய பாடல்களையும் பிற எழுத்துக்களையும் தாம் சொல்லிவரப் பிறர் எழுதி வந்தனர். "போரிலே ஆங்கிலேயருக்குச் சிறந்த துணையாக இந்தியர்கள் இருக்க வேண்டும்" என்று பாராளுமன்ற உறுப்பினரான எலீனர் ராக்போன் அம்மையார் பத்திரிகைகளில் வெளியிட்ட கடிதத்திற்கு விடை ஒன்றைத் தாம் நோய் வாய்பட்டுப் படுக்கையிலிருந்து கொண்டே கவிஞர் எழுதினார். இந்திய நாட்டின் மனச் சான்றுக்கு ஒரு குறும்புச்சவால் என்று அந்த அம்மையின் கடிதத்தைக் கவிஞர் பெருமான் விளக்கினார்.

**கடைசிப் பாடல்**

1941-ஆம் ஆண்டு சூன் மாதத்தின் முடிவிலே அவருடைய நிலைமை கவலைக்கிடம் ஆயது. அவருடைய மருத்துவர்கள் சாந்திநிகேதனத்திற்கு ஓடினார்கள். கவிஞரைக் கல்கத்தாவிற்குக் கொண்டு வந்தனர். சத்திர சிகித்சை செய்ய வேண்டும் என்று மருத்துவர்கள் முடிவு செய்தார்கள். டாக்டர் எல். எம். பானர்சி சத்திர சிகித்சையைச் செய்வதற்கு முன் கவிஞர் பெருமான் "ஏ வஞ்சகக் கள்வா! உன்னுடைய படைப்பின் வழியை யெல்லாம் பல திறப்பட்ட மாயச் சூழ்ச்சி வலையில் மூடிவிட்டாய்" என்ற புதிய பாட்டைக்

கடவுளை நோக்கிப் பாடினார். சிகிச்சைக்குப் பின், அன்று மாலை ஒன்றும் கவலையில்லை என்று மருத்துவர் கள் கூறினார்கள். அன்று கவிஞர் இரவினை எல்லாம் அலைச்சலோடு கழித்தார். மறுநாள் சிறிது அமைதியாக இரவைக் கழித்தார். ஆனால் அன்று இரவே நிலைமை மாறியது. நாளுக்குநாள் மெலிந்து போய்க்கொண்டே யிருந்தார். கவலைக்கிடம் ஆனாலும், அஞ்சுவதற்கு ஒன்றும் இல்லை என்று மருத்துவர்கள் கூறினார்கள்.

**மறைவு**

'காய்ச்சலும் தொடங்கியது. 6-ஆம் தேதி நிலைமை நன்றாகவில்லை' என்றே மருத்துவர்கள் கூறி னார்கள். 7-ஆம் தேதி காலை அவருடைய நிலைமை கவலைக்கிடம் ஆயிற்று என்று முடிவாக மருத்துவர் கள் கூறி விட்டார்கள். தோழர்களும், நண்பர்களும் உற்றாரும் அவர் வீட்டிற்கு வரத் தொடங்கினார்கள். கூட்டமும் வீட்டைச் சுற்றி நெருங்கத் தொடங்கி யது. அவருடைய படுக்கையருகே இருந்தோர்கள் கடவுள் பாடல் பாடத் தொடங்கினார்கள். அன்று பகல் 12-மணி 13 நிமிடங்களுக்குக் கவிஞர் பெருமான் இந்த உலகை விட்டு மறைந்தார். அவர் பிறந்த இல்லத்திலேயே அவருடைய உடலை விட்டு முடிவாக ஆவி பிரிந்தது. நகரம் முழுதும் இந்தச் செய்தி பரவி யது. எல்லா இனத்தவர்களும் ஒருங்கு திரண்டு வந் தார்கள். பள்ளிகளும், கல்லூரிகளும், அற மன்றங் களும், அலுவலகங்களும் எல்லாம் மூடப் பெற்றன. அவருடைய இறுதி ஊர்வலம் சென்றபோது மக்கள் மாடியில் இருந்தெல்லாம் மலர்களைத் தூவினார்கள். கல்கத்தாப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் பல் கலைக் கழகத்தின் சார்பாக மாலையிட்டு வணங்கினார். சாதாரண பிரம்ம சமாசத்தின் மண்டபத்தின் எதிரே அந்த ஊர்வலம் நின்றது. அந்த சமாசத்தின் ஒரே ஒரு கவுரவ அங்கத்தினர் தாகூர் அவர்கள் தான். சூரியன் மறையும்போது இறுதிச்சடங்குகள் நடந்தன. அவருடைய வயது சென்ற தந்தையாரான தேவேந்திர

நாத தாகூர் ஏற்படுத்திய சடங்கின்படி அவருடைய உடலம் தீக் கடவுளுக்குப் பலியாயது. அனைத்தையும் தூய்மையாக்கும் நெருப்பென அவர் பாடிய அந்த நெருப்பிலே கவிஞர் பெருமான் மறைந்தார்.

## இறந்தும் வாழ்கிறார்

இந்தியா விடுதலை பெற்றது. உரிமை பெற்ற பாரதம் அவர் பாடிய 'சன கண மன' என்ற பாடலையே நாட்டுப் பாடலாக, ஏற்றுக் கொண்டது. அதனையே பாடி வருகின்றோம். தாகூர் அவர்களுடைய நூற்றாண்டு விழாவை 1961-இல் உலகெங்கும் கொண்டாட முந்துகிறது. இந்தியா அதனைச் சிறந்த முறையில் கொண்டாட ஏற்பாடுகள் எங்கும் நடந்து வருகின்றன. விழாவும் தொடங்கி விட்டது. ஆசிரியர்களும் மாணவர்களும் இதிலே கலந்து கொள்ள வேண்டும் என்று நம்முடைய பிரதமர் நேரு அவர்கள் கேட்டுக் கொண்டபடி எல்லோரும் ஈடுபடுகின்றனர். இரவீந்திரநாதரின் நூல்களை எல்லாம் வெளியிட முயல்கின்றார்கள். "கண்ணோய்" என்ற நாவலை விநோதினி என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து இந்திய சாகித்திய அகாடமி முன்னரே வெளியிட்டுள்ளது. இந்திய மொழிகளில் எல்லாம் அவர் நூல்கள் வெளியாதல் வேண்டும்.

> நத்தம் போற் கேடும் உளதாகும் சாக்காடும்
> வித்தகர்க் கல்லால் அரிது.

என்பதன் உண்மையை உணர்கின்றோம். இறந்தும் இறவாப் பெருங் கலைஞராக, அப்பாலுமடிசார்ந்தாராம் கடவுட் கூட்டத்தில் விளங்குகிறார் நம் இரவீந்திரர்.

## அண்ணாமலைப் பல்கலைக் கழக வழிபாடு

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அந்தப் பேரொளியைக் கண்டு இந்த வரலாற்றை எழுதி வெளியிடுவதன் வழியே தன் அன்பு கலந்த நன்றி கலந்த மனத்தோடு அவரை வாழ்த்தி வணங்குகிறது. வாழ்க இரவீந்திரர்!

UNIVERSITY EXTENSION LIBRARY 17 OCT 1962
20862



18—11—1940 நோய்வாய்ப்பட்ட கவிஞர்-இரயில் வண்டியில்-ஹௌரா இரயிலடியில் (பக்கம் 174)

VERSITY EXTENSION LIBRARY